சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
டிசெம்பர் 25 - 31, 2013 பக்கம் - 24 30/-

# எலியும் புலியும்



## வாசகர்களுக்கு இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்



அடேல் பாலசிங்கம்

# சுதந்திர வேட்கை

அவற்றையெல்லாம் அறிந்த பின்னரும், தமிழ்மக்களின் துன்ப நிலை தொடர்பாக , தனது மனக் கலக்கத்தை மட்டும் இந்திய அரசு அறிக்கைகளில் தெரிவித்தது. குறிப்பாக "ஆழ்ந்த துயரம்" என்ற யாருக்கும் பாதகம் இல்லாத ராஜதந்திர பதத்தைப் பிரயோகித்தது. இனி, தான் ஒரு பிரதேச பேரரசு என்ற நிலையில் இலங்கையில் நடப்பவை மீது ஒரு கண் வைத்திருப்பதாகச் சிங்களவருக்கு எச்சரிக்கை செய்ததோடு நிறுத்திக் கொண்டது.

தனது நாட்டின் எல்லைக்குள் பிரிவினைப் போக்குகளைத் தூண்டிவிடவோ உற்சாகப் படுத்தவோ கூடாது என்பதில் இந்தியா என்றுமே விழிப்பாகவும் அக்கறையாகவும் இருந்திருக்கிறது. ஆகவே அருகே உள்ள இலங்கையில் தமிழ் மக்கள் தொடுத்திருக்கும் தனியரசுக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கும் நோக்கம் இந்தியாவுக்கு அறவே கிடையாது. ஆனால் தென்னகத்தில் உள்ள ஆறு கோடி தமிழ் மக்கள்



பொங்கி எழுந்ததால், நாட்டில் நிலைகுலைவு ஏற்படலாம் என்ற ஆபத்தையும் குறைத்து எடைபோட்டு ஒதுக்கிவிடவும் இந்தியாவால் முடியவில்லை. தமிழ் நாட்டுத் தமிழர்கள் பாக்கு நீரிணைக்கு22 மைல்களுக்கு அப்பால் உள்ள தங்கள் சகோதரர்களுக்காகப் பெரும் அனுதாபம் கொண்டவர்கள்.

இதைவிட,சிறீலங்கா அரசுத்தலைவர் ஜே. ஆர் ஜெயவர்த்தனா,ஒளிவு மறைவின்றி மேற்குலகத்துக்கு சார்பாக இருந்தது குறித்தும் இந்திராகாந்தி அம்மையார் பெரிதும் கலவரம் அடைந்திருந்தார். இந்து மாகடல் பிரதேசத்தில் அமெரிக்கா தனது வல்லாதிக்கத்தை நிலை நாட்டுவதற்கான புறநிலைச் சூழலை சிறீலங்கா அரச தலைவர் வேண்டுமென்றே உருவாக்கிக் கொண்டிருப்பதாக அவர் அஞ்சினார். ஆனால் இந்தப் பிரதேசத்தில் தனதுசெல்வாக்கையே தக்க வைக்க இந்தியா விரும்பியது. எனினும், அரசியற் சித்து விளையாட்டில் கைதேர்ந்தவரான இந்திராகாந்தி இலங்கையின் இறையாண்மையும் ஒருமைப்பாட்டையும் தொடர்ந்து அங்கீகரித்ததோடு, புதுடெல்லியின் செல்வாக்கு வீச்சுக்குள்சிங்கள அரசை மீளவும்கொண்டு வரவேண்டும் என்பதற்கான ஒருதந்திரோபாயமாகத் தமிழ்ப் போராளிகளைச் சகித்துக் கொண்டார். மேற்குலக ஆதிக்க வலைக்குள் சிங்கள அரசைச் சிக்க விடாதுஅதனைத் தனதுஆதிக்க வியூகத்திற்குள் கொண்டுவருவதே இத் தந்திரோபாயத்தின் ஒட்டுமொத்த நோக்கமாகும். ஆகவே,இந்தபிராந்திய அரசியல் பின்புலத்தில், இலங்கையின் வடகிழக்கில் வாழ்ந்த பெருந்தொகையான தமிழ்மக்கள் தமிழ் நாடு தமக்குப் பாதுகாப்பான இடமெனக் கருதினார்கள். விடுதலைப் புலிப் போராளிகளுக்கு தமிழகம் ஒரு பாதுகாப்பான புகலிடமாக மட்டுமல்லாது உறுதியான தளமாகவும் அமைந்தது. தாம் வசிக்கவும் அச்சமின்றித் தங்கள் திட்டங்களை வகுக்கவும் வாய்ப்பான இடம் இது என்று அவர்கள் கருதினார்கள். ஆகவே ஆகவே தான், புலிப் போராளிகள் சென்னையில் தங்கினார்கள்.தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் வழங்கிய ஆதரவோடு, இலங்கையில் தலைமறைவாக வாழ்ந்த தமிழ்ப் போராளிகள், தமிழ்நாட்டில் பாது காப்பாக தங்கியிருந்தார்கள். ஆனாலும் உள்வீட்டு எதிரிகளால் எழுந்த பிரச்சினைகள், புலனாய்வுப் பிரிவுகளின் கூரிய கண்கள், சிறீலங்கா தூதரக அதிகாரிகளின் நாசகார நட வடிக்கைகள் ஆகியன காரணமாக தமிழ் நாட்டில் கூட, ஒரு தலைமறைவான அமைப்பாகவே விடு தலைப் புலிகள் இயங்கினர். இப்படியான பின் புலத்திலேயே மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்தடைந்தோம். இச் சூழல் காரணமாகவே அங்கே எம்மை யாரும் கண்டதாகச் காட்டிக் கொள்ளவில்லை ஆனால்,இரண்டு இரண்டு மூன்று சோடிக் கண்கள், சனக்கும்பலுக்குள் எமது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் இரகசியாமாக நோட்டமிட்டபடியே இருந்தது. கடைசியாக எமது இரகசிய சந்திப்பு ஏற்படும் வரை, அவை எம்மைத் தொடர்ந்தன.


பழைய,ஆட்டம் கண்ட , கறுப்புநிற வாடகைக் கார் ஒன்று விமான நிலையத்திலிருந்து எம்மை ஏற்றிக்கொண்டு, கடகடவென்ற சத்தத்துடன் சென்னை வீதிகளூடாகச் சென்று, முன்னேற்பாடு செய்யப்பட்ட ஒரு விடுதியின் முன்னே நின்றது. அதை விடுதி என்பதை விட, தங்கிடம் என்று கூறுவதே பொருந்தும். திரு. கிருஷ்ணன் எம்மை அங்கே சேர்த்துவிட்டு, நாம் இருக்கும் இடத்தை விடுதலைப் புலிகளின்தலைவருக்குத் தெரியப்படுத்துவதற்காக, எமக்குத் தெரியாத வேறு ஒரு இடத்துக்குச் சென்றுவிட்டார். நாம் சென்னை வந்த விடயம் இரகசியமாக இருக்க வேண்டும் என்பதற்காக நகரின் வறிய ஒரு பகுதியிலே இந்தத் தங்குமிடம் தேர்ந்தெடுக்கப்பட்டது என்று கருதினேன். ஆனால் விபரம் இரகசியமாக இருக்க முடியாது போய் விட்டது. இந்தியாவின் வெய்யில் வாட்டியெடுக்க யன்னல்களை இடைவிடாது திறந்து வைத்திருந்தோம். பிராதன வீதியில் யன்னலைத் திறந்து வைத்திருக்கும் போது, போவோர் வருவோருக்கு உள்ளே இருப்பவர்களை நன்கு தெரிந்தது. அறை விலாசமாக திறந்து இருந்ததால் - தனிமையில் நின்று ஆடை மாற்ற முடியாது. அதற்காக வசதி குறைவான குளியல் அறைக்குள்ளேயே செல்ல வேண்டியிருந்தது. குளியல் அறையில் குழாய் ஒழுகிய வண்ணமே இருந்தது. இதனால், அசுத்தமான நிலம் எந்த நேரமும் ஈரமாக இருந்தது. அந்த ஈர அசுத்தம் உடுப்பில் புரளாது ஆடை மாற்றுவது கடினமாகவே இருந்தது. இனி, ஒருவெள்ளைக் காரப் பெண் , தமிழன் ஒருவனைக் கொண்டுவந்து அந்த அறையை கார்ந்தர்வ புரியாக்குகிறாளோ என்ற சந்தேகமே பலருடைய கண்ணைக் குத்தியிருக்க வேண்டும். மேலை நாட்டவர் அனைவரும் செல்வந்தர் என்பதே பெரும்பாலான இந்தியர் மட்டில் நிலவும் நம்பிக்கை. அப்படியான நிலையிலே ஒருதமிழரும் வெள்ளைக்காரப் பெண்ணும் தவறான நோக்கத்தோடு கூடிவரவில்லை என்றால், நகரின் வறிய பகுதி ஒன்றில், ஏன் இத்தகைய வசதி குறைவான தங்கிடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதே அவர்களுடைய கேள்வி. பிரபாகரன் அவர்களும் அவருடைய போராளிகளும் நடுச்சாமத்திலே எம்மைச் சந்திக்க வந்தபோது ஏற்கனவே சந்தேகக் கண் கொண்டிருந்த தங்கிடப் பணியாளர்களினதும், உள்ளூர் மக்களினதும் கண்கள் மேலும் விரிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## திரு.பிரபாகரனைச் சந்தித்தேன்

விடுதலைப்புலித் தலைவர்களை முதலில் சந்திக்கும் போது அவர்களிடமிருந்து எதை எதிர்பார்க்க வேண்டும் என்று நான் முன் கூட்டியே எதையும் யோசித்துவைக்கவில்லை. அவர்களுடைய புரட்சிகரப் போராட்ட நட வடிக்கைகள் பற்றியஎனக்கு ஏற்கனவே தெரியும் .அவர்களுடைய ஆயுதப் போராட்டத்தை நான் மனப்பூர்வமாக ஆதரித்தேன். இலண்ட னில் விடுதலைப் புலிகளுக்காக பணிரிபவர்கள் கூறியதன் படி தமிழ்ப் போராட்ட இயக்கத்தின் வரலாற்று நாயகர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களே தான். ஒடுக்கப்பட்ட தமதுமக்களின் விடுதலை என்ற அரசியல் இலக்கில் விடா முயற்சியுடன் தம்மை அவர் அர்ப்பணித்து இருந்தார். தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒரே இறுதியான தீர்வு,தனியான தமிழ் அரசை நிறுவுவதே என்பதில் அவர் உறுதியாக இருந்தார். இவை எல்லாம் இலண்டன் செயற்பாட் டாளர்கள் எனக்குக் கூறியவை.

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 15

ஆரம்ப காலத்தில் இருந்தே ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றில் அவர் கண்டிப்பானவர் என்பது மிகப் பிரசித்தம். உண்மையில் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தும் அவருடைய சீலமே அவருக்கு பெயரையும் மரியாதையையும் நிறுவியிருந்தது. அதுவேதான், சிறீலங்கா இராணுவக் கட்டமைப்போடு மோதும் வல்லமை படைத்த கெரில்லாப் படையணிகளை



நிறுவப்பாடுபட்ட ஏனைய அனுபவமற்ற தலைவர்களிடமிருந்து அவரைப் பிரித்து எடுத்துக் காட்டியது. ஆனால், ஒழுக்கக் கட்டுப்பாடு என்பதற்காகவே, பிடிவாதமாக ஒழுக்கக் கட்டுப்பாட்டை அவர் வலிந்து திணிக்கவில்லை. போராளிகள் சிறப்பாக செயற்பட வேண் டும் என்றால்,அவர்களுடைய உறுதிப்பாட்டுக்கும் உயர்ந்த செயற்பாட்டுக் கும்,கட்டுப்பாடு அவசியம் என்றுஅவர் நம்பி னார். அவருடைய உயர்ந்த நல்லொழுக்கம் , அவரைத் தூய்மைவாதி என்று கூறும் அளவிற்கு ,அவருக்கு நல்ல பெயரைப் பெற்றுக் கொடுத்தது. தலைவன் ஒருவன் தனது அதிகாரத்தைக் தங்க வைக்க வேண்டுமானால் தனிப்பட்ட அவனுடைய வாழ்க்கையில் அவன் அப்பழுக்கற்ற நடத்தையுடன் இருக்க வேண்டும் என்று அவர் கருதுகிறார். அவருடைய ஆளுமையின் இச் சிறப்பம்சங்கள் இத்தனை ஆண்டுகள் ஆகியும் சிறிது கூட மழுங்கவேயில்லை. பிரபாகரனை விமர்சித்துக் கொண்டிருப்பவர்கள் அவரது பண்பமைதியின் இலட்சணங்களை அடிப்படையாகக் கொண்டே அவரைச் சர் வதிகாரத் தன்மை பொருந்தியவர் என்று கூறி யிருக்கிறார்கள். ஆனால்ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகிய பண்புகள் பரந்து பட்ட தமிழ் மக்களி டையே அவர் தமது ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ள வழிகோலின எனலாம். பிரபாகரன் ஒரு இரும்பு மனிதன் என்ற பெயர் நிலவிய போதி லும், எமது முதற் சந்திப்பின் போது, பழகுவதற்கு இனிய, அன்பும் , பண்பும் மிக்க ஒரு மனித ரையே நான்கண்டேன். அவரை விட மூத்தவர்களும் அவரோடு நெருங்கிப் பழகியவர்களும் பாசத்தோடு அழைக்கும் அந்த "தம்பி" எமது தங்கிடத்தின் வசதிக் குறைபாடுகளை உடனே புரிந்து கொண்டார். அங்கு எத்தகைய அசௌகரியங்களை நான் எதிர் கொள்கின்றேன் என்பதையும் ஊகித்துக் கொண்டார். ' வசதியான' விடுதி ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு தமது போராளி ஒருவரை அனுப்பினார். மறுநாளே நாம் விடுதி மாறினோம். (பதிவுதொடரும்)

அக்கினி குமாரன்

# குற்றங்களின் கூடாரம்

குற்றங்கள் என்பன தண்டிக்கப்பட வேண்டியவை.ஆனால் குற்றங்கள் தவறானவை என்பதை உணர்ந்து குற்றவாளிகள் அதற்காக வருந்தும் போதோ , அவற்றுக்குப் பரிகாரம் தேடும் போதோ அவை மன்னிக்கப்படுவதுமுண்டு.

ஆனால் குற்றங்கள் மறைக்கப்படும் போதோ அல்லது அவை குற்றங்களாக ஏற்றுக் கொள்ளப் படாமல் வீரதீரச் செயல்களாகக் காட்டப்படும் போதோ அவை மன்னிக்கப்பட முடியாத -மீள முடியாத- ஒரு கட்டத்தை எட்டி விடுகின்றன.

இலங்கையின் அரசசார் அதிகார பீடங்கள் குற்றங்களை மறைப்பதிலும் , மறுதலிப்பதிலும்,





குற்றங்களை வீரதீரச் செயலாக, வர்ணித்துப் பாராட்டி ஊக்குவிப்பதிலும் முன்னிலை வகிக்கின்றன.

அதன் பிரதிபலன் அந்தக்குற்றங்கள் குட்டிமேல் குட்டியாகப் போட்டுத் தள்ள அவற்றின் நிழலிலும் , அரவணைப்பிலும் வளர்ந்து கொழுத்து விஸ்வரூபம் எடுத்து விட்ட குட்டிகள் அரசையும் அதன் அதிகார பீடங்களையும் கூடத் திணறடித்துக் கொண்டிருக் கின்றன. அது மட்டுமன்றி முலாம் பூசி மறைக்கப்பட்ட பொய்களும் புனை காட்சிகளும் மெல்ல மெல்ல வெளியே தெரியவும் ஆரம்பித்து விட்டன.

இலங்கையின் ஜனாதிபதிக்கு அடுத்த அதிகார முள்ளவராகக் கருதப்படும் பிரதமர் டி.எம். ஜெயரத்னா வுக்கு எதிராக- அவர் பதவி விலக வேண்டு மென-, அவர் கைது செய்யப்பட வேண்டு மென-குரல்கள் எழ ஆரம்பித்துவிட்டன. இப்படிக் கோபக்குரல் எழுப்புவதில் முக்கிய பாத்திரம் வகிப்பவர் அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் நடாளுமன்றக் குழுத் தலைவர் சோபித தேரா். கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கெதிரான இன ஒடுக்குமுறை நடவடிக்கை களிலும், தமிழர்களுக்கு எதிரான சட்ட விரோத நடவடிக்கைகளிலும் தீவிரமாக ஈடுபட்டவர்கள் இவர்கள். அரசு தான் நேரடியாக மேற் கொள்ள முடியாத தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான சட்ட விரோத நடவடிக்கைகளை இத்தகையோர் மூலமாகவே மேற்கொள்வதுண்டு. இவர்களும் தங்கள் மஞ்சள் அங்கிகளின் துணையுடன் தங்கள் குற்றங்களை நியாயப்படுத்து வதுண்டு. இதற்கு அரசும் தன் ஆசிகளை மறைமுகமாக வழங்கி வந்தது.

அப்படியான அரசின் நம்பிக்கைக்குரிய பங்காளி களே இப்போது போர்க்கொடி தூக்கி விட்டனர். அடுத்த பிரதமராக வருவதற்குக் கனவு கொண்டிருக்கும் ஒருவரே இவர்களை பின்னின்று இயக்குவதாகவும் கூறப்படுகின்றது. எப்படியிருந்த போதிலும் சோபிததேரர் பிரதமருக்கு எதிரான குற்றச் சாட்டுக்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென உறுதியாகவே குரலெழுப்பி வருகிறார் .

அண்மையில் போதைவஸ்து அடங்கிய கொள்கலன் ஒன்று சுங்கப் பகுதியினரால் வைக்கப்பட்டது. உடனடியாக அதை விடுவி பிரதமர் அலுவலகத்திலிருந்து பிரதமரின் தலைப்புக் கொண்ட ஒரு கடிதம் சுங்கப் பகுதியினருக்கு அனுப்பப்பட்டது. அதில் பிரதமரின் இணைச்செயலாளர் ஒருவரே கையை முத்திட்டு இருந்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

போதைவஸ்து கடத்தல், விற்பனை என்பன மரண தண்டனைக்கு அல்லது நீண்ட கால சிறைத் தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனால் இது பற்றி பிரதமருக்கு எதுவும் தெரியாதெனவும், அவரின் இணைச் செயலாளர் ஒருவரே இந்தக்கடிதத்தை அனுப்பினார் எனவும் கூறப்படுகிறது. எப்படியிருந்த போதிலும் பிரதமர் அலுவலகத்திலிருந்து பிரதமரின் கடிதத் தலைப்பில் ஒரு கடிதம் அனுப்பப்படுமானால் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர் பிரதமர்தான் என்பது முக்கியமானதாகும். தார்மீக அடிப்படையில் பிரதமர் தனது பதவியை இராஜி னாமா செய்து சுதந்திரமான ஒரு விசாரணைக்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் பிரதமர் இதுவரை அப்படியான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. அது மட்டுமன்றி இதுவரை குறித்த இணைப்புச் செயலாளர் கைது செய்யப் பட்டரா இல்லையா என்ற விபரமோ, அவர் மேல் ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டாதா இல்லையா என்ற எந்த ஒரு தகவலோ வெளிவரவில்லை. ஆனால் அரச தரப்பிலிருந்தே இப்படிப் பிரதமரின் மீது பழி போடுவதால் , அந்தப் போதைவஸ்து கடத்திய வர்த்தகர் தப்பி விட வாய்ப்பளிப்பதாகப் போய் விடும் எனக் கூறப்படுகிறது. எனினும் அந்த வர்த்தகர் யார் என்பதோ அந்த இணைப்புச் செயலாளர் யார் என்பதோ எவரும் மூச்சுக் கூட விடவில்லை.

இப்படி அரச தரப்புடன் சம்பந்தப்பட்ட குற்றங்கள் அவர்களுக்குள்ளேயே அமுங்கிப் போவது இதுவொன்றும் முதற் தடவையல்ல. இது தொடர்பாக சோபிததேரரின் குரலும் வரவர தேய்ந்து போய் பலவீனமாகஒலிப்பதையும் அவதானிக்க முடிகிறது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் உடனடியாக நடை முறைக்கு வரும் வகையில் இரவோடிரவாகக் கலைக் கப்பட்டது. காரணம் உடனடியாக அறிவிக்கப்படா விட்டா லும், பின்பு அது பல முனைகளினாலும் வெளி வந்தது.

கொழும்பில் சட்ட விரோதமாக இயங்கி வந்த ஒரு சூதாட்ட மத்திய நிலையம் ஒன்று சுற்றி வளைக்கப்பட்டு அங்கு சோதனை நடாத்தப்பட்டதாகவும் அப்படிச் சோதனை நடத்திய பொலிஸார் அத்தனை பேரும் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் உத்தியோக பூர்வப் பேச்சாளர் லக்ஷமன் கிரியெல்லவின் கட்டளையின் பேரில் இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன. எனினும் மீண்டும் அந்தச் சூதாட்ட நிலையம் கைப்பற்றப்பட்டு சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச்சம்பவம் ஊடகங்களில்வெளிவந்த பின்பும் லக்ஷ்மன் கிரியெல்ல மீது எந்தவித நடவடிக்கையும் நேரடியாக எடுக்கப் பட வில்லை. மாறாக ஊடக மத்திய நிலையமே கலைக்கப்பட்டு விட்டது. எனினும் கொழும் பைச் சேர்ந்த ஒரு வர்த்தகர் தனது மனை விக்கும் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு மிடையே தகாத உறவு இருந்ததாகவும் தனது மனைவியின் கோரிக்கையின் பேரிலேயே சூதாட்ட நிலையத்தைச் சுற்றி வளைத்த பொலிஸார் இடமாற்றம் செய்யப்பட்டனர் எனப் பகிரங்க மாகவே ஊடகங்களுக்குத் தெரிவித்திருக் கின்றார். அது தொடர்பாக விசாரணைகளோ அல்லது நடவடிக்கை களோ மேற்கொள்ளப்பட்டனவா இல்லையா என்ற எந்தச் செய்தியும் இது வரை வெளிவரவில்லை.

பொலிஸாரும் , படையினரும் பொதுமக்கள் மீது மேற்கொள்ளும் -குறிப்பாக தமிழ் மக்கள் மீது நடத்தும்அக்கிரமங்களை- மறைப்பதில் மிகவும் புகழ் பெற்றவர் லக்ஷ்மன் கிரியெல்ல. ஏதாவதொரு அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டால் உடனடியாகவே அதனை மறுதலிப்பதிலோ அல்லது அது பற்றி எவ்வித முறைப்பாடும் கிடைக்க வில்லை எனக் தெரிவிப்பதிலோ அவர் மிகவும் வல்லவர். எனவே அவரின் குற்றங்கள் மறைக்கப்படுவதில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை.


ஆனால் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு என்பன எவ்வாறு சீர்குலைந்துள்ளன. என்பதும் , அவற்றைச் சீர்குலைப்பதில் அரச அதிகார பீடங்கள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதும் வெட்ட இப்போது வெளிச்சமாகி யுள்ளது. அது மட்டுமன்றி இவர்களைப் போன்றே சட்ட மீறல்களில் ஈடுபடும் அரசின் பங்காளிகளே போர்க்கொடி தூக்குமளவுக்கு அதிகார வர்க்கத்தின் மோசடி, ஊழல், அதிகார துஷ்பிரயோகம் என்பன உச்சம் பெற்று விட்டன.

எனினும் நாம் இவற்றைத் தனி விடயங்க ளாகப் பார்க்க முடியாது. கொழும்பு கொலன்னா வவில் இடம் பெற்ற பாரத லக்ஷ்மனின் கொலை, களனிப் பிரதேச சபைத் தலைவரால் பிரிட்டன் பிரஜை ஒருவர் கொல்லப் பட்டு அவரின் நண்பி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை என்பன தொடர்பான நடவடிக்கை கள் பொய்மை யோடே நகர்கின்றன. குறித்த குற்றங்களில் சம்பந்தப் பட்டதாகக் கருதப்படுபவர்கள் தண்டிக்கப் படுவார்களா என்பது கேள்விக்குரியதாகவே இருக்கு மளவுக்கு அவர்கள் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர். இவையெல்லாம் இலங்கையின் நீதித்துறை மீது இயல்பாகவே நம்பிக்கை யீனத்தை ஏற்படுத்துகின்றன. இந்த நம்பிக்கை யீனங்களைப் பயன்படுத்திக் கொண்டு கிடைக் கின்ற வரை தமக்கானவற்றை வாரி சுருட்டிக் கொள்ளுவதில் அதிகார ப் பெருச்சாளிகள் அக்கறை காட்டுகின்றன.

அப்படியான நிலைமையே இன்றைய சட்ட மீறல்களுக்கு துணிச்சலை வழங்குகிறது என்றால் பிழையாகாது. எனவே அரச அல்லது அரச சார்பு அதிகார பீடங்கள் குற்றங்களின் கூடாரமாக விளங்கி வருகிறது. ஆனால் நீதி தொடர்ந்தும் உறங்குவதில்லை. இதற்கு உதாரணமாக கனடா, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் ராஜதந்திரியாகப் பதவி உயர்த்தப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரி ரவீந்திர சில்வாவுக்கு விசா வழங்க மறுத்தமையைக் குறிப்பிடலாம். எப்படியி ருப்பினும் இலங்கையின் ஆட்சிப்பீடத்தை குற்றங்களின் கூடாரமாக சர்வதேசம் நோக்க ஆரம்பித்து விட்டதால் இலங்கை அரசு திணறிக் கொண்டிருப்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை.

# இன்னுமொரு சாட்டையடி

நீலன்



இத்தாலியின் தலைநகரான ரோமைத் தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டு வரும் 'நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்' இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்த முதற்கட்ட விசாரணைகளை 2010 ஜனவரியில் அயர்லாந்தில் மேற்கொண்டது.

அதன் தொடர்ச்சியாக அனைத்துலக மனித உரிமைகள் ஒன்றியம் மற்றும் இலங்கையின் சமாதானத்திற்கான ஐரீஸ் பேரவை ஆகியவை விடுத்த வேண்டுகோளுக்கு அமைய ஜேர்மனியின் ப்ரீமன் நகரில் அதன் இரண்டாவது கட்ட அமர்வினை நடத்தியுள்ளது.

அயர்லாந்தில் நடைபெற்ற முதற்கட்ட அமர்வில் இலங்கையில் அரச படைகள் மேற்கொண்ட படுகொலைகள் மன்னிக்க முடியாத - மானுடகுலத்துக்கு ஒவ்வாத - போர்க்குற்றம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த முறை ப்ரீமனில் வழங்கப்பட்ட தீர்ப்பில் "இலங்கையில் இடம்பெற்றது திட்டமிட்ட இனப்படுகொலைதான். அந்த இனப்படுகொலைக்கு உடந்தையாக அமெரிக்காவும், பிரிட்டனும், இந்தியாவும் செயற்பட்டுள்ளன'' என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இந்தியா மீதான குற்றச்சாட்டுக்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்கிற கருத்தும் குறித்த தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த அமர்வில் ஜேர்மனி, இத்தாலி , பர்மா, ஆர்ஜென்ரினா, துருக்கி ஆகிய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சிங்களத் தோழர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

மே17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களான திருமுருகன், உமர் மற்றும் தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடமாகாண சபைத் தேர்தலில் அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களில் இரண்டாம் இடத்தில் உள்ள வரான அனந்தி எழிலன், சனல் - 4 தொலைக் காட்சியின் ஆவணப்படத்தயாரிப்பாளர் கெலும் மக்ரே, டாக்டர் என்.மாலதி ஆகியோர் இங்கு சாட்சியமளித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

அத்தோடு 30 இற்கும் மேற்பட்ட நேரடிச் சாட்சியங்களும் இந்தத் தீர்ப்பாயத்தின் முன்னால் பிரசன்னமாகியிருந்தனர். இன்னும் ஓரிரு வாரங்களில் குறித்த தீர்ப்பாயத்தின் முழுமையான அறிக்கை வெளிவருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் இந்தியா குறித்த விடுபட்டுப் போன விடயங்களும் உள்ளடக்கப்படுமென நம்பப்படுகிறது.

இலங்கை தொடர்பாக இரண்டாவது தடவையாகக் கூட்டப்பட்ட அமர்வில் பூகோள அரசியல் நகர்வுகளை அதிர வைக்கும் விடயமாக அமெரிக்கா,பிரிட்டன் மற்றும் இந்தியா மீது சுமத்தப்பட்ட இனப்படுகொலைக்கு அனுசரணை வழங்கிய விவகாரம் மிக ஆழமாக விவாதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தத் தீர்ப்பாயத்தின் இறுதி அறிக்கை சர்வதேச மட்டத்தில் விவாதிக்கப்படும் போது , இலங்கை அரசின் மீது இந்த வல்லரசுகள் வழுவழுத்த அழுத்தங்களைப் பிரயோகிக்காமல், உறுதியான நிலைப்பாட்டினை எடுக்கத் தூண்டுமென எதிர்பார்க்கலாம். இதனைச் சர்வதேச அரங்குக்கு கொண்டு செல்ல வேண்டிய பெரும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

அதேவேளை, கடந்த இரண்டு தடவைகளும் "உள்நாட்டிலேயே விசாரணைகளை மேற்கொள்ளுங்கள்" என்று அமெரிக்கா ஐ.நாவில் கொண்டு வந்த தீர்மானங்களின் பின்புலத்தை நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் முடிவுகள் அம்பலமாக்கியுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

நவிப்பிள்ளை அம்மையார் முன்மொழிந்த "சர்வதேச விசாரணையை நாம் ஆதரிப்போம்" என்ற கருத்தை முழங்கிய பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி, இவர்களாகவே தீர்மா னத்தை முன்மொழிய வேண்டிய நிர்ப்பந்தத் தினை இந்தத் தீர்ப்பாயம் உருவாக்குமா? என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு முடிவடைந்த பின்னர், இலங்கை அரசின் மீது தொடர்ச்சியாக மேற்குலகின் அழுத்தங்கள் அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. ஐரோப்பிய ஒன்றியமும் ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள விருப்பதாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆயினும் அது என்ன தீர்மானம் என்று எவருக்கும் தெரியாது. அநேகமாக அந்தத் தீர்மானமும் தமிழர்களுக்குச் சாதகமாகவே இருக்குமென்ற திருப்தி அளிக்கும் வகையிலான நம்பிக்கையை ஊட்டும் செய்திகள் வெளிவந்தவண்ணமுள்ளன.

மேற்குலகம் எமக்குச் சார்பாக மனித உரிமைப் பேரவையில் தீர்மானங்களைக் கொண்டு வர உத்தேசித்துள்ள நிலையில் "இனப்படுகொலைகளின் பங்காளிகளாக மேற்குலகைச் சேர்த்து விட்டதே இத்தாலியத் தீர்ப்பாயம்" என்று குறைபட்டுக் கொள்வோரும் இருக்கவே இருக்கின்றார்கள்.

ஆனால், இனிமேலும் இரட்டை வேடம் போட முடியாத இக்கட்டான சூழ்நிலைக்குள், இந்த மகா வல்லரசுகளை இத்தாலியத் தீர்ப்பாயம் நிறுத்தியிருக்கிறது என்பதே யதார்த்தமானது. இருப்பினும் ஐ.நாவின் தீர்மானங்களுக்கே அசையாத அல்லது அதனைப் பொருட்படுத்தாத வல்லரசுகள், இந்த நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் முடிவுகளுக்கா பயப்படப் போகின்றன? என்கின்ற கேள்வி எழுவதும் நியாயமானதே.

ஒரு தேசிய இனமானது,இன அழிவுக்கு உள்ளாக்கப்படுகிறது என்கிற விழிப்புணர்வு இந்த வல்லரசுகளுக்கு இருக்க வேண்டுமென நாம் எதிர்பார்ப்பதும்,அவர்களால் அது புரிந்து கொள்ளப்பட முடியாததால் நாமே அவர்களுக்கு எடுத்துச் சொல்லி புரிய வைப்போம் என்று அவர்களை அணுகுவதுமே, தற்போது இராஜதந்திரம் என்கிற பெயரில் நடை பெறும் போராட்ட அரசியல் கோட்பாடாக நிறு வப்பட்டுள்ளது.

இலங்கையின் அமைவிடம், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கடல் வழித் தலைவாசலில் உள்ளது. இது தான் சர்வதேச அரங்கில், இலங்கை பெறும் மூலோபாய கேந்திர முக்கியத்துக்கான காரணியாக அமைகின்றது.

ஈழத்தமிழ் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை, இந்த வல்லரசாளர்களின் பிராந்திய நலன்களைத் தீர்மானிக்கும் நகர்வில் ஒரு முக்கிய துருப்புச் சீட்டாக இங்கு பயன் படுத்தப் படுகிறது.

இந்த வல்லரசுகளை நேரடியாகவோ அல்லது பிரதிநிதித்துவம் செய்யும் ஆசியான், ஷங்காய் ஒத்துழைப்பு ஒன்றியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றோடு அனைத்துலக நாணய நிதியம், உலக வங்கி, நேட்டோ என்பன இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவைச் சூழவுள்ள நாடுகளில் தமது வர்த்தக நலன்களையும் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் அளவினையும் பார்க்கின்றார்கள்.

இதே போன்று, ஆசியாவுக்கு இன்னுமொரு முக்கியமான கடல் வாசல் உண்டு. வட துருவப் பனிப்பாறைகள் உருகினால் இதன் முக்கியத்துவம் அதிகரிக்கும் என்று நம்பப்படுகின்றது. தற்போது சர்வதேச ஊடகப்பரப்பில் அதிகமாகப் பேசப்படும் கிழக்குச் சீனக்கடல் தான் அது. இந்தக் கடற்பரப்பில், வான் பாதுகாப்பு இனங்காணும் வலயம் என்கிற முன்னெச்சரிக்கை வான் பிரதேசத்தை சீனா பிரகடனம் செய்ததால் அந்தப் பிராந்தியத்தில் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

சீனாவுடன் மோதிக்கொள்பவர்கள் அமெரிக்காவின் மிகப்பெரிய பொருண்மிய பங்காளிகளான ஜப்பானும், தென்கொரியாவுமே. போர் விமானங்களும், நாசகாரிக் கப்பல்களும் இந்தக் கடலை ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன.

இந்தப்பிரகடனம் புதிய விடயமல்ல. இதனூடாக சீனாவுக்கு எதிராக நேட்டோ போன்றதொரு இராணுவக் கூட்டமைப்பினை ஆசியாவில் நிறுவிவிடவே அமெரிக்கா அடித்தளமிடுகிறது என்கிற கணிப்பும் உள்ளது.

முரண்பாடுகளை உருவாக்கி, அதனூடாக நட்புச் சக்திகளை இணைத்துக் கொள்ளும் தந்திரோபாயங்கள் பழைய அணுகுமுறையாக இருந்தாலும் அமெரிக்காவின் இந்த நகர்வினை சீனா எவ்வாறு முறியடிக்க முயலும் என்று பார்ப்போம்.

தென்சீனக் கடலில் ஏற்பட்ட பிராந்திய முறுகல் நிலைமை இடம் மாறுவதால், அதாவது கிழக்குச் சீனக்கடலில் அக்களத்தினைத் திறந்து கொள்வதால் சீனாவிற்கு என்ன இலாபம் என்கிற ஐயமும் ஏற்படுவது சகஜமே.

ஆனால், இலங்கை விவகாரத்தில் மேற்குலகம் காட்டும் சடுதியான அக்கறைக்கும், சீனாவின் கிழக்குச் சீனக்கடல் வான்களத் திறப்புக்கும் ஏதாவது தந்ரோபாய இணைவு உள்ளதா வென்பதை கவனிக்க வேண்டும்.

திசை திரும்பலுக்குத் திறக்கப்படும் புதிய களமுனைகள், சில வேளைகளில் உணர்திறன் மிக்க கொந்தளிப்புக்களமாக மாறக்கூடிய சாத்தியப்பாடுகளும் உண்டு. "தென்சீனக்கடலுக்குள் சீனாவின் ஆசிய வல்லாதிக்கத்தை முடக்கி விடுதல்" என்கிற அமெரிக்காவின் 10 ஆண்டு ஆசிய பசுபிக் திட்டம் வலுவிழந்து போவது போலத் தெரிகிறது.

எதுவித ஆராய்ச்சியும் இன்றி இறுதிப் போரின் போது இலங்கை அரசுக்கு உதவிய இந்த நாடுகள் இன்று வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டும் என்று சர்வதேச மட்டத்தில் குரல் கொடுக்கின்றன.

நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்புப்படி விடுதலைப் புலிகள் அமைப்பு கடும் போக்குடைய பயங்கரவாத அமைப்பு இல்லை எனக் கருதினால் இந்த நாடுகள் இன ஒடுக்கு முறைக்கு துணை போயிருக்கின்றன என்பதே உண்மையாகும்.

ஆனாலும் சர்வதேசச் சட்டம் ஒன்றைச் சரிவர இயற்றுவது இந்த நாடுகளின் கைகளிலேயே உள்ளது. ஆயினும் அவை ஒரு போதுமே தம்மைக் காட்டிக் கொடுக்க முன்வர மாட்டா. அங்கேயும் இன்னொரு உரிமை மீறல் நிகழ இருக்கின்றது என்பது கவலைக்குரியதே. என்றாலும் இலங்கைக்கும் அதன் இனப்படுகொலைக்கு துணைநின்ற நாடுகளுக்கும் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் இரண்டாவது தீர்ப்பு இன்னொரு சாட்டையடியாகவே விழுந்திருக்கிறது. ஆனால் இந்த அடிகூட அவற்றுக்கு உறைக்குமா என்பது புரியாத புதிர்தான்.

# எங்கெங்கு தோண்டிலும்...

பூமுகன்

ஆண்டாண்டு காலமாகத் தமிழன் வாழ்ந்த வரலாறுகளைக் கூறும் வடக்கு கிழக்கு மண் இப்போது அவனின் மரணம் பற்றி பேசிக்கொண்டிருக்கிறது. மண்ணுக்குள் புதைந்துபோன எம் வரலாறுகள் இன்னும் வெளிக்கொண்டுவரப்படவில்லை. இருட்டடிப்புச் செய்வதற்கான பணிகள் எக்காலத்திலும் தயாராகவே இருக்கின்றன.

இப்படி இருக்கையில் இன்று தமிழினத்தின் தலைவிதி மாறியிருக்கிறது. தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்ட அழிவுகளில் இருந்து மீண்டெழுவதற்குள் நிலங்கள் தரும் அதிர்ச்சிகள் எம் இனத்தின் மீதான வன்முறைகளையும் கொடூரப் பழிவாங்கல்களையும் இன்னமும் நினைவூட்டிக்கொண்டே இருக்கின்றன.

ஒரு காலத்தில் எங்கு தலை நீட்டினாலும் குண்டுகளும் சன்னாங்களும் வந்து வீழ்ந்தன. கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்பட்டனர். அந்த ஆபத்து இப்போதைக்கு தமிழ் மக்களிடத்திலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது எனலாம்.

குண்டுகளுக்குள் தப்பித்த தமிழ் மக்களுக்கு அதிர்ச்சி குண்டுகள் வீசுவதாக இப்போதைக்கு புதைகுழிகளே இருக்கின்றன.

திருக்கேதீஸ்வரம் பாடல் பெற்ற திருத்தலம். போர் உக்கிரம் பெற்ற காலத்தில் இத்திருத்தலத்துக்கு சென்று பக்தர்கள் வழிபடமுடியாத சூழல் இருந்திருக்கிறது.

இந்தச் சூழலில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நீண்ட காலமாகவே இருக்கிறது. மக்கள் நடமாட முடியாத ஆபத்தான பகுதியாகவே ஆலயச் சூழல் தவிர்ந்த ஏனைய இடங்கள் இருந்தன. கடற்கரையோரமாக வரண்ட பற்றைக்காடுகளையும் வெளிகளையும் கொண்ட இந்தப் பிரதேசம் மனித நடமாட்டத்துக்கு அச்



சுறுத்தலாக காட்சியளித்துக் கொண்டிருந்தது.

இராணுவ ஆக்கிரமிப்புக்குள் மட்டுமே அதிக காலமாக இருந்த இந்தப் பிரதேசத்தில் போர் முடிவுற்ற பின்னர் படிப்படியாக விடுவிக்கப்பட்டு தள்ளாடி இராணுவ முகாம் நிரந்தரமாகவும் ஏனைய முக்கிய இடங்களில் சிறுசிறு மினி முகாம்கள் அமைக்கப்பட்டு வெள்ளாங்குளம் மன்னார் வீதியின் போக்குவரத்து கெடுபிடி தளர்த்தப்பட்டு சுமூக நிலை கொண்டு வரப்பட்டது.

இப்படி இருக்கையில் அந்தப் பகுதியின் சுற்றையல் கிராமங்களில் மக்கள் மீள் குடியமர்ந்தனர்.

இந்தப் பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு இருப்பதால் சன அடர்த்தி குறைவாகவே இருக்கிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும் குடிகள் பருவகால குடியேறிகளாகவே பெரும்பாலும் வசிக்கின்றனர்.

இவர்களுக்கான குடிநீர் தேவை கருதி அண்மையில் குழாய் மூல குடிதண்ணீர் விநியோகத்துக்காக வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. மாந்தை சந்தியில் இருந்து திருக்கேதீஸ்வரம் செல்லும் வீதியில் குழி வெட்டி குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கின. கடந்த வெள்ளிக்கிழமை குறித்த வீதியின் ஓரமாக குழி தோண்டப்பட்ட போது அதிலிருந்து மனித எலும்பு எச்சங்கள் வெளிக் கிளம்பின.

பத்துக்கு மேற்பட்ட மனித உடல்களுக்கான எச்சங்கள் இதுவரைக்கும் அங்கிருந்து மீட்கப்பட்டிருக்கின்றன.


இதுவரைக்கும் இந்த எச்சங்கள் குறித்த தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. பல வருடங்களுக்கு முன்னர் புதைக்கப்பட்ட உடல்களின் எச்சங்களாகவே இருக்கலாம் என உணரப்படுகின்றது. அதாவது போர் உக்கிரம் பெற்றிருந்த காலப்பகுதியில் இராணுவப் பிடிக்குள் இந்தப் பிரதேசம் இருந்த போதுஇந்தப் புதை குழி உருப்பெற்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

தோண்டும் பணிகளும் விசாரணைகளும் நடைபெற்று வருவதால் இது குறித்த உண்மைகளை அறிவதற்கு காத்திருக்க வேண்டியிருக்கும்.

தள்ளாடி மற்றும் அதனை அண்டிய இராணுவ முகாம்கள் ஒரு காலத்தில் மிக ஆபத்தானவையாகவே இருந்தன. இதனைக் கொண்டு சிந்திக்கையில் திட்டமிட்டபடு கொலையின் பின் ஏற்படுத்தப்பட்ட மனித புதைகுழியாகவே திருக்கேதீஸ்வரத்தில் தென்பட்டுள்ள புதைகுழியை நோக்கமுடியும்.

தற்செயலாகத் தோண்டப்பட்ட குழிகளில் பத்துக்கு மேற்பட்ட மனித உடல்கள் தென்படுகையில் இன்னும் எத்தனையோ ஆபத்து நிறைந்த பகுதிகள் எம் மண்ணில் இருக்கின்றன என் பதை நாம் மறந்து விட முடியாது. புதைபொருள் தோண்டுவதற்கு அனுமதி கிடைக்குமானால் வடக்கு கிழக்கு பகுதி யில் சந்தேகத்துக்கு, இடமான பகுதிகளை தோண்டினால் அவற்றில் மனித எச்சங்களே தென்படும். தங்கங்களோ, வரலாற்றுச் சின்னங்களோ இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றே கூற வேண்டும்.

செம்மணிப் புதைகுழயின் குருதி தோய்ந்த கதைகளைப் போல் எத்தனை கண்ணீர்க் கதைகள் திருக்கேதீஸ்வர புதைகுழியில் இருக்குமோ? ஆய்வுகளும் விசாரணைகளும் என்ன பதில் கூறுமோ? எதுவும் உறுதிப்படுத்தப்படாத சூழ்நிலையிலேயே தமிழினத்தின் இருப்பு ஊசலாடுகிறது.



* நிபந்தனைகளுக்குட்பட்டது
4,000/- ரூபாவிலிருந்து
விநியோகஸ்தர்கள் தேவைகளுக்கு அழையுங்கள்: 077 3613045 | 071 5101130 | 077 5719240 | 071 2128119 | 077 5171783
Follow us on Titan Watches Sri Lanka
ABSTRACT
• வெலிசறை: 011 2981335
• கண்டி சிட்டி சென்டர்: 081 2235150
Abans Elite
• கொள்ளுபிட்டி: 011 4520989 • கம்பஹா: 033 223005 • மஹரகமை: 011 2844985 • ஹோமாகமை: 011 2894620
• இரத்தினபுரி: 045 2231157 • இராஜகிரியை: 0112676589 • அனுராதபுரம்: 025 2226832
• லிபர்ட்டி ஆர்காட்: 077 3732977 • கல்கிசை: 077 2561031
Abans

டிச.25 – 31, 2013
sudarolijaffna@gmail.com
சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# பழகிப்போன மனிதப் புதைகுழிகள்

இந்துக்களின் புனிதத் தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரமே இப்போது எல்லோரின் கவனத்தையும் தன்பக்கம் ஈர்த்திருக்கிறது. இந்தக் கவன ஈர்ப்பு ஆன்மிகத்தால் உருவானதல்ல. மாறாக இலங்கையில் முற்றுப்பெறாமல் நீண்டுகொண்டிருக்கும் மனிதப்புதைகுழி வரலாற்றின் புதிய அத்தியாயம் இங்கே திறக்கப்பட்டிருக்கிறது.

குறித்த பகுதியில் நீர் வழங்கும் குழாய்களை இணைப்பதற்கான குழி வெட்டப்பட்டபோது அதற்குள் சில எலும்புகள் தென்பட்டிருக்கின்றன. ஏதேனும் விலங்குகளின் எச்சமாக இருக்கலாம் என்ற நினைப்பில் மண்ணள்ளிப்போட்டன தொடர்ந்து கிடைத்த மனித மண்டையோடுகள். அவ்வளவுதான் வேலையை அப்படியே விட்டுவிட்டு அலறிப்புடைத்துக்கொண்டு பொலிஸிடம் ஓடினார்கள் பணியாளர்கள். பின்னர் நீதிபதியின் பிரசன்னத்தோடு நாளும்பொழுதும் மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் கண்டறியப்பட்ட அந்தப் புதைகுழியை அகழும் பணிகள் முழுவீச்சில் நடக்கத் தொடங்கின.

இதுவரை மன்னார் மனிதப் புதைகுழியில் பத்துக்கும் மேற்பட்ட மனிதர்களின் சடல எச்சங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்தும் அகழ்வுப்பணிகள் நடைபெறுவதால் இன்னும் ஏராளமான சடலங்களின் எச்சங்கள் மீட்கப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறித்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் சில காலத்துக்கு முன்னர் வரை படையினரின் மிகப்பெரிய முகாம் ஒன்று இருந்துள்ளது. அப்போதே இது ஒரு சித்திரவதைக் கூடம் என்பது மக்களுக்குத் தெரிந்திருந்தது. சித்திரவதைகளின்போது கொல்லப்பட்டவர்களின் சடலங்களே இப்போது மீட்கப்பட்டிருப்பதாக மன்னார் மக்கள் கருதுகிறார்கள். சடலங்களின் எச்சங்கள் மேலதிக பரிசோதனைக்காக இனி கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும். அதன் பின்னர் கொழும்பில் இருந்து விசேட குழுவினர் இந்தப் பகுதிக்கு வந்து முற்றுகையிட்டு உலகத்தையே புரட்டிவிடுவது போன்று ஆய்வில் ஈடுபடுவார்கள்.

பக்கம் பக்கமாக அறிக்கைகள் எழுதப்படும். குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக வாரம் ஒருமுறை பொலிஸ் பேச்சாளர் மறக்காமல் சொல்லிக் கொள்வார். உலகநாடுகளும் இது தொடர்பிலான உரிய விசாரணை அவசியம் என்று அறிவுறுத்திவிட்டு அடங்கிப்போகக் கூடும். கொஞ்சக்காலத்துக்குப் பின்னர் ஊடகங்களும் இந்தப் புதைகுழியை மறந்துவிட எல்லாமே கிடப்பில் போடப்பட்டுவிடும். அறிக்கைகள், விசாரணைகள், சாட்சியங்கள், பரிசோதனை முடிவுகள் என்பனவெல்லாம் குழிவெட்டி மூடப்படும். இன்னும் சில காலத்துக்கு பின்னர் எங்கோ ஓர் இடத்தில் மற்றுமோர் மனிதப்புதைகுழி கண்டுபிடிக்கப்படும். அப்போதும் இதே பரபரப்பும் இதே நடைமுறையும்தான். தொடர்ச்சியாக மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவதுடன் அவை மெல்ல மெல்ல மறத்தலுக்குள்ளாவதும் எங்களுக்குப் பழகிப்போனவையே.

# சிங்களக் குடியேற்றங்களுக்கு பாதை திறக்கிறதா இரணைமடு ?

ஹரீஸ்

இரணைமடு நீர்த் திட்டப் பிரச்சினை சூடுபிடிக்கும் விவகாரமாக தற்போது மாறிவருகின்றது. மத்திய அமைச்சிலிருந்து புதிதாகக் கிடைத்த திட்டத்தை ஏதோ தேவாமிர்தம் கிடைத்ததைப் போல வரிந்துகட்டிக் கொண்டு நடைமுறைப் படுத்த துடிக்கும் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனாலும் அதற்கு எதிராகக் குரல் எழுப்பும் கிளிநொச்சி வாழ் விவசாய அமைப்புக்களின் போர்க்கொடிகளாலும் இப்பிரச்சினையின் கொதிநிலை மேலும் மேலும் உக்கிரமடைந்து வருகின்றது. ஆனால், இப்போது எழுந்துள்ள இரணைமடு தொடர்பான பெரும் பிரச்சினையை அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமிழ் மக்களிடம் பிரிவினைகளை ஏற்படுத்தி அதன் மூலம் தனது கொள்கைகளை நிறைவேற்றிக்கொள்ளத் துடிக்கிறதோ என்ற சந்தேகமும் மக்களிடம் வலுவாகப் பீடித்திருக்கின்றது.

இலங்கையின் கடந்தகால, நிகழ்கால அரசியல் போக்குகளில் இலங்கை அரசுக்கு கைவந்த கலையாக இருப்பது பிரித்தாளும் தந்திரமே. ஒரு கட்சி அல்லது ஒரு அமைப்பு தனக்கெதிராகக் கிளம்பிவிட்டால் அதனை இரண்டாகப் பிரித்து உடைப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றது மஹிந்த அரசு. இந்த வகையில் இரணைமடுப் பிரச்சினையாலும் பிரதேசம் சார், மாவட்டம் சார் வேறுபாடுகளை அரசு ஏற்படுத்த முயலக் கூடும் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

தண்ணீர்ப் பிரச்சினையால் பல அரசியல் தலைவிதிகள் தலைகீழான வரலாறு நம் கண்முன்னேகூட நிகழ்ந்திருக்கிறது. சாதாரணமாக பேசித் தீர்க்கப்படவேண்டிய மாவிலாறு பிரச்சினையைக் கூட அரசியலாக்கும் நோக்கோடு அரசு செயற்பட்டது. புலிகள் மாவிலாறு அணையைப் பூட்டியவுடன் இதுதான் சந்தர்ப்பம் என்று போர் நிறுத்தத்தை முறித்து, தண்ணீருக்கான சண்டை என்ற போலி லேபிளில் சர்வதேசத்தை ஏமாற்றி தமிழினம் மீதான மிகப்பெரிய போர் ஒன்றை இலங்கை அரசு திணித்த வரலாறு கடந்த காலங்களில் நிகழ்ந்திருக்கின்றது.

அந்த வகையில் வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தண்ணீர் என்ற திட்டத்தையும் புதிதாகத் தயாரித்துள்ளது அரசு. அதன் மூலம் எல்லாவற்றையும் இழந்த பின்னும் விடுதலை வேட்கையை மட்டுமே கைவசம் வைத்துக் கொண்டு ஒரு அரசியல் வெற்றிடத்தில் தவிக்கும் தமிழ் மக்களிடையே பிளவினை ஏற்படுத்த அரசு விளைகின்றது. அபிவிருத்தி என்ற போர்வையில் வெளிநாடுகளை ஏமாற்றி குறித்த திட்டத்தை வடமாகாண சபையில் சமர்ப்பித்து தன் பிரித்தாளும் தந்திரத்தை மறைமுகமாக கைக்கொள்ள அரசு முனைகிறது.

இரணை மடு நீர்த்திட்டப் பிரச்சினை தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்திய மார்கழித் திங்கள் முழுநிலா நிகழ்விலேயே உக்கிரமடைந்திருக்கின்றது. இதில் கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் இது தொடர்பான முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டமையே இரணைமடு விவகாரம் மிக முக்கிய விடயமாக அரசியல் மட்டங்களில் உலா வருவதற்கான பிரதான காரணமாக அமைந்



திருக்கின்றது. ஆனாலும் எத்தனையோ திட்டங்களை போர் நிகழ்ந்த பகுதிகளில் செயற்படுத்தப்போவதாக அரசு முழங்கியிருந்தது. எனினும் போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான அபிவிருத்திச் செயற்பாடுகளையும், மீள்கட்டுமானங்களையும், கண்ணிவெடி அகற்றல் போன்ற துரித செயற்றிட்டங்களையும் அரசு நிதி போதாது என இழுத்தடித்து வருகிறதே தவிர அவற்றை இதயசுத்தியோடு நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையில் இரணைமடு நீர்த்திட்டத்தை மட்டும் அரசு வரிந்துகட்டிக்கொண்டு ஏன் அவசரமாக ஒப்பேற்றத் துடிக்கின்றது என்பதற்கான காரணங்களை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் தமிழ்மக்களுக்கும், கிளிநொச்சி வாழ் விவசாயிகளுக்கும் வேதனையைக் கிளப்பும் விடயமாக உள்ளது.

நிலத்தடி நீர் உன்னதமான நிலையில் இருக்கும் பிரதேசங்களில் இலங்கையிலேயே முன்னிலையில் திகழ்வது யாழ்ப்பாணம்தான். இங்கு கரையோர பிரதேசங்களில்தான் உவர் நீர்ப் பிரச்சினை காணப்படவே செய்கிறது. ஆயினும் அப்படிப்பட்ட பிரதேசங்களில் உவர் நீர்ப் பிரச்சினையை இல்லாமல் செய்வதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் பலவும் நிதிப்பற்றாக்குறையால் இன்னும் நிலுவையிலேயே இருக்கின்றன. இவ்வாறு உவர் நீர்ப்பரம்பலை கட்டுப்படுத்தும் திட் டங்கள் தொடர்பில் அரசு பாராமுகமாகவே இருந்து வருகின்றது. இதனை நிகழ் கால அரசியல் போக்கில் தெளிவுடைய அனை வரா லும் ஊகித்து அறிந்து கொள்ள முடியும்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நன்நீர்த் தட்டுப்பாடு பிரச்சினை இருக்குமாயின் மழைநீர் சேகரிப்பு, தரவை நீர் சேகரிப்பு, குளங்களின் அபிவிருத்திகள் என்பவற்றை அரசு இனங்கண்டு செயற்படுத்த முடியும். அத்துடன் குடாநாட்டில் அபிவிருத்தி செய்யப்படவேண் டிய நீர் நிலைகள் பல உள்ளன. அவற்றை அபிவிருத்தி செய்வதன் ஊடாகவும் புதிய நன்னீர் நிலைகளை ஏற்படுத்துவதன் மூலமும் யாழ்ப்பாணத்துக்குள்ளேயே அதன் நன்னீர் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய நிலையை உருவாக்க முடியும். ஆனாலும், இத்தகைய யதார்த்தத்துக் குப் பொருந்தக்கூடிய திட்டங்களை கவ னத்தில் எடுக்காது இரணைமடுவில் இருந்து சுமார் இருபது ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் யாழ்ப்பாணத்திற்கான தண்ணீரைக் கொண்டு வருவதன் பின்னணியில் அரசின் கபட நோக்கமொன்று உண்டு. இதனைத் தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளுக்காக போராடி வருகின்றோம் எனக் கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருக்கும் வடமாகாணசபை புரிந்து கொள்ளாதது வேதனையாக இருக்கின்றது. வடக்கு முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் கூறுவதைப்போல் "எந்த அபிவிருத்தித்திட்டத்தையும் உணர்ச்சி ரீதியாக அணுகாமல் அறிவியல் ரீதியாக அணுகவேண்டும்" எனக்கூறுவது ஏற்புடையதுதான். ஆனாலும், இந்த விடயத்தை அறிவியல் ரீதியாக அணுகும்போது வெளிப்படும் சந்தேகங்களுக்கான கோணத்தை மட்டும் முதல்வர் அறிய முற்படாதது ஏன் என்றுதான் விளங்கவில்லை.

கிளிநொச்சியில் இருந்து பல கிலோமீற்றர் தூரத்தில் உள்ள குடாநாட்டுக்கு தண்ணீரை கொண்டுவருவதென்றால் அதற்குப் பின்னால் பல நடைமுறைப்பிரச்சினைகளை அத்திட்டம் சந்திக்க வேண்டியிருக்கும். குறிப்பாக கால்வாய்கள் அமைப்பு ஊடாக பொதுமக்களின் காணிகள் மற்றும் வீடுகளை ஊடறுத்து நீரைக் கொண்டு செல்லவேண்டிய நிலை ஏற்படும். இதற்காக மக்களின் பெருமளவான காணிகள் இந்தத் திட்டத்துக்குள் விழுங்கப்படும் அபாயம் உண்டு. ஏற்கனவே வீதி அகலிப்பால் தங்களின் காணிகளின் பெரும்பகுதியை இழந்து நிற்கும் மக்கள் இன்னொருமுறை இரணைமடுத் திட்டத்தால் இழக்கவேண்டிய நிலை ஏற்படும். அதிலும் குறிப்பாக கிளிநொச்சி மக்களுக்கே பாதிப்பு அதிகம்.

அபிவிருத்தி என்பது அந்தப் பிரதேசத்தின் வளங்களிலும், அந்தப் பிரதேசம் சார் மக்களின் வாழ்வாதாரத்திலும் எந்தவிதமான எதிர்மறையான தாக்கத்தையும் ஏற்படுத்தாததாகவே இருக்கவேண்டும். ஆனாலும், இரணைமடு நீர்த்திட்டம் தங்களின் வாழ்வாதாரத்தையே கருக்கிவிடும் என்று கிளிநொச்சி வாழ் விவசாயிகள் போர்க்கொடி தூக்கியிருக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயச் சங்கமும் தனது பூரண எதிர்ப்பை அறிக்கையாக வெளியிட்டு இருக்கிறது. இந்தநிலையில் "கிளிநொச்சி மக்களினதும் விவசாயிகளினதும் வாழ்க்கையில் என்ன தாக்கம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. வந்த நிதி திருப்பிப்போகக் கூடாது'' என முரண்டு பிடிப்பது புத்திசாலித்தனமான நிர்வாகத் திறனாகப்படவில்லை என்பதே மக்களின் கருத்து. ஒருவேளை இப்படியான சிந்தனை கொண்டவர்கள் யாழ்ப்பாணத்திற்கு இலவச நச்சு மருந்துகளை விநியோகிக்கும் திட்டம் ஒன்றை அரசு கொண்டுவந்தாலும் நிதி திரும்பிப் போய்விடக்கூடாது என்ற நோக்கோடு அதையும் மும்முரமாக செயற்படுத்தக்கூடும்.

"இரணைமடுக் குளத்தில் உள்ள மேலதிக நீரையே யாழ்ப்பாணம் அனுப்பப்போகின்றோம்" என அரசு அறிவித்துள்ளது பொருத்தமானதுதானா என்ற கேள்வியும் எழுகின்றது. தற்போது இரணைமடுக்குளத்தில் உள்ள நீரின் கொள்ளளவின் அடிப்படையில் 8 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களே விவசாயத் தேவைகளுக்காக இந்தக் குளத்து நீரை பயன்படுத்த முடிகிறது. நீர்ப்பற்றாக்குறை காரணமாக மேலும் பல ஏக்கர் வயல்களை செய்யமுடியாத சூழலிலேயே கிளிநொச்சிவாழ் மக்கள் இருக்கின்றனர். இந்தநிலையில் தனக்கு அரிசி இல்லாதபோது ஊருக்கு உழுந்திடிக்கும் இந்தத் திட்டம் தேவைதானா என்ற கேள்வி கிளிநொச்சி மக்கள் மனதில் தவிர்க்க முடியாமல் எழவே செய்யும். தமிழ் மக்கள் மீது திடீர்ப்பாசம் கொண்டு இரணைமடு நீர்த்திட்டத்தை அரசு நிறைவேற்ற முனைவதன் பின்னணியில் சிங்களக்குடியேற்றங்களுக்கான திறவுகோல் இருப்பதாகவும் நம்பிக்கையான தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏனெனில் இரணை மடு நீர்த்திட்டத்தை மகாவலி அபிவிருத்தித் திட்டத்தோடு இணைக்கும் ஓர் நோக்கம் அரசுக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது. எப்படி மகாவலி அபிவிருத்தித் திட்டத்தைச் சாட்டாகக் கொண்டு திருகோணமலை வரை சிங்களக் குடியேற்றங்கள் பரம்பலடையச் செய்யப்பட்டனவோ அதேபோன்று இரணை மடு நீர்த்திட்டம் என்ற மறைப்பில் வன்னி முதல் யாழ்ப்பாணம் வரை சிங்களக் குடியேற்றங்களைப் புதிதாக நிர்மாணிப்பதற்கு பேரினம் திட்டமிட்டிருக்கிறது. ஏனெனில் இரணைமடு நீர்த்திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் அதற்கான பணிகளில் வழமையைப் போல தென்னிலங்கை வாசிகளே இறக்குமதி செய்யப்பட இருக்கிறார்கள். இந்த நீர்த்திட்டம் ஒன்று வீதி அகலிப்புப் போல ஓரிரண்டு வருடங்களுக்குள் முடிந்துவிடக்கூடிய ஒன்றல்ல. அதற்கு மிக நீண்ட காலம் பிடிக்கும் எனவே அதுவரை தங்கள் குடும்ப சகிதம் பணிநடைபெறும் இடங்களில் தற்காலிக குடியிருப்புக்களை அமைத்து வாழத்தொடங்கும் சிங்களத் தொழிலாளிகள் மெல்ல மெல்ல அவற்றையே தங்கள் நிரந்தர வசிப்பிடங்களாகவும் மாற்றிவிடுவார்கள். அதிலும் வளமான இரணைமடுத் தண்ணீர் பாய்ந்து செல்லும் பகுதியை அண்டியிருப்பதால் மழையை நம்பாமல் விவசாயத்திலும் தாராளமாக ஈடுபட முடியும். ஆகமொத்தத்தில் இரணை மடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் வந்து சேர்வதற்கு முன்னர் இடைநடுவிலேயே அவற்றை இந்தச் சிங்களக் குடியேற்றங்கள் உறிஞ்சிவிடும். கடைசியில் கிளிநொச்சி மக்களுக்கும் தண்ணீர் இல்லாமல், குடாநாட்டு மக்களுக்கும் தண்ணீர் இல்லாமல், எங்கிருந்தோ வந்து குடியேறிய சிங்களக் குடும்பங்களுக்கு மட்டுமே இரணைமடுத் தண்ணீர் வாழ்வளிக்கும் நிலை உருவாகி விடலாம். முதலமைச்சர் சொன்னதைப் போன்று இந் தத் திட்டத்தை அறிவு பூர்வ மாக அவரும் ஒருமுறை ஆராயவேண்டும். அப்போதுதான் அதன் பின்னால் ஒளிந் துள்ள அதிகார பீடத்தின் சூட்சுமங்கள் அவருக்குப் பிடிபடலாம். தனக்கு இலாபம் இல்லாத எதனையும் பேரினம் எங்களுக்கு வலிந்து தந்துவிடப்போவதில்லை.



ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்களின் வாழ்க்கை இன்னும் தறப்பாள் கொட்டகைக்குள் தள்ளாடிக்கொண்டிருக்கும் நிலையில் அவர்களின் வாழ்வை மேம்படுத்தவும் மீள் கட்டுமான நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் போதிய நிதி இல்லை என்று கைவிரிந்திருந்தது அரசு. ஆனால் இப்போது அதே அரசுதான் திடீரென இரண்டாயிரம் மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுத் தண்ணீரை கொண்டு செல்லப் போவதாக தம்பட்டம் அடித்துக்கொள்கின்றது. இவ்வளவு பெருந்தொகை செலவில் அவரசமாக இரணைமடுத் தண்ணீரை கொண்டு வந்து தாருங்கள் என்று நாவறண்டுபோய் யாழ்.மக்கள் கேட்கவேயில்லை. ஆனால் கேட்காமலே வாரிக்கொடுக்கும் வள்ளல் குணம் அரசுக்கு எப்படி வந்தது? இதே பணத்தைக் கொண்டு ஏன் போரால் இருப்பிழந்த மக்களுக்கு வீடமைத் துக்கொடுக்கக் கூடாது? குந்தியிருக்க ஒரு குடிமனை இப்போது அவசியமா? அல்லது வேலை மினக்கெட்டவனைப் போல இரணை மடுக்குளத்தில் இருந்த கால்வாய் வெட்டி தண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவருவது அவசியமா? இப்படி அவசியமே இல்லாத ஒன்றுக்கு ஏன் சுடுகுது மடியைப்பிடி என்று அரசு அந்தரிக்க வேண்டும்? இப்படி நிறையக் கேள்விகள். எல்லாக் கேள்விகளையும் பின்தொடர்ந்து சென்றால் அவை சொல்லும் பதில் ஒன்றாகத்தான் இருக்கும். அது இன்னொரு குடியேற்றப் படையெடுப்புக்கான நடவடிக்கையாக இரணைமடு மையாக இருக்கப் போகிறது என்பதுதான். மாவிலாறில் தொடங்கிய இந்த பேரின விரிவாக்கல் போர் இரணைமடுவில் மையம் கொண்டுள்ளது. இதனை உரியவர்கள் சரிவரப் புரிந்துகொள்ளவேண்டும்.

# கவிதைப் புனல்

## என் மகனே



அன்பு .பாசம் உறவு
எல்லாம் நவ உலகில்
நாசமாகி விட்டதென்று
நானிருந்தேன்

உன் வருகையின் பின் தான்
இன்னும் உயிர் வாழ
ஆசைப்படுகின்றேன்
பிள்ளையென்ற சொல்லிற்குள்
இத்தனை அர்த்தங்கள்
இருக்கிறது என்று
எனக்குத் தெரியப்படுத்தியவனும்
தெளிவு படுத்தியவனும்
புரிய வைத்தவனும்
நீ...

மு.இகா. முகம்மது அஸ்சர்,
திருகோணமலை.

## யாழ் சுமப்பவள்

முல்லை ரமணன்

அவள் தோளில் யாழ்
சுமந்தவள்
இந்த மண்ணின்
இதயத்தில் துன்ப
வாள்... சுமப்பவள்
யுத்தத்தின் வலி
சுமப்பவள்
யாழையும்
வலியையும்ஒன்று
கூட்டி தன் மண்ணில்
புதிய இதய தாகத்தை
இசையில் என்றோ
ஓர் நாள்
விதைப்பாள்

## அநாதை

வசந்தமாது .
கொற்றவையூர்.



எத்தனை உறவுகள் நம்முடன்
இருந்தாலும் -எம்
நண்பர்கள் எம்மைச் சுற்றியிருந்தாலும்
உலகமே எமக்காக வந்தாலும்
இறைவன் கூட
அருகில் இருந்தாலும்- நமக்கு
அம்மா என்ற உறவு
நம்மை விட்டு
விலகிச் சென்றால்
நாம் அநாதைதான்

## தாய்மை

வ. நிரோஜினி.



அவதரித்த அவதரிக்கும்
தசாப்தங்களின் ஆதாரம்
அணுவிற்கும்
அண்டத்திற்கும்
ஆதாரமான
கூர்ப்பின் சக்தி

புனிதம் பூத்தெழும்
பூப்படுகை
புரளும் பூமியின்
காந்தப் புலம்

தவழும் இயற்கையின்
தத்தெடுப்பு
காருண்யத்தின்
காரண கர்த்தா
தன்னலம் மறந்த
தாயின் மடி

## மரணம் வராத மறதி

நா. ஜெயபாலன்,
பிபிலை.

மரணம் வராத மறதியே
உனக்கு என் மனமார்ந்த
நன்றி!

ஒன்றா இரண்டா ஓராயிரம்
துன்பங்கள் எல்லாம்
உன்னால் தானே
ஓடோடிப் போனது!

நடந்ததைக் நினைத்து
அமைதியைக் கெடுத்து
நாயாய் அலைந்து
பேயாய் மாறியதெல்லாம்
பிழையெனஉணர்த்தியது நீ
தானே...?

உழைப்பவர் ஊதியத்தை
ஒரு தலைப்பட்சமாக்கி
காரியம் பார்த்த கூட்டு
ஒப்பந்தம் கடைசி
வரைக்கும் கைகூடாமல்
கஷ்டத்தில் ஆழ்த்தியும்
கவலையின்றி
வாழும் ஏழைகளை
மறந்ததும் உன்தயவுதானே!

எண்ணியதை முடிக்கத்
துடித்த இளம் சேனை
அடித்தது,பிடித்தது,
அடங்கிப் போனது!
அத்தனையும் அடியோடு
நீர்த்துப் போனது உன்
தயவால் தானே!

போருக்கு ப் பின்னாலும்
புலம்புகின்றார் துயரம்
யாருக்கும் பயமின்றி
ஊருக்குள் உதவாச்
சட்டம் பேசும் காவல்
தேசத்து காக்கிகள்
கட்டவிழ்த்து விடும்
கண்மூடித் தன
துன்புறுத்தல்கள் நித்தமும்
நினைவுக்கு வராதது
நின் தயவுதானே!

ஓ...மரணம் வராத
மறதியே உனக்கு
என் மனமார்ந்த நன்றி!

## மனநோய்

ஸ்ரீ. நமணன்.
கொழும்புத்துறை

நித்தம் என்னுள்
ஏன் இந்தப் பதற்றம்
சிந்தனையில் முடிவில்லா
தடக்கம் மெளனங்களில்
கூட எரிகின்ற தீ
வார்த்தைகளை விலக்கி
விட்டு விண்ணுயர
பாய்கிறது

அசாதாரணத்தின்
உச்சம் இது வாழ்வின்
வீண் கலக்கம் இது
உயிரை உருக்கி
வஞ்சம் செய்கிறது
உடலுக்கு மாறுமா
இந்நிலை மீளுமா
என் வழி

தீயாய் எரியுது மனம்
நாலாய் நொருங்குது திடம்
பெயர் தெரியா உருக்கு
வழி தெரியா பயணமா?
இது இனம் புரியா ஒரு
பயம் அதில் தினம் தடம்
புரளும் என் மனம்
முடிவு????

## என் விடுதலை

கு.தவசீலன்,
பளை.

நியாயம் என்னை
நிரபராதி என்கிற போதும்
சட்டம் அதற்கு சாட்சி
சொல்கின்ற போதும்
சாத்தியமற்றுப் போகிறது
என் விடுதலை!

ஏனெனில்
இவர்கள் மனங்கள்
உண்மைகளை
உதாசீனப்படுத்திவிட்டு
ஊகங்களின் பின்னால்
ஊர்வலம் போகிறது

## தேவை

சேனையூரன்
மூதூர் கிழக்கு.

வீட்டுக்கு கதவு
தேவை
வெற்றிக்கு விடாமுயற்சி
தேவை
நாட்டுக்கு நல்ல
தலைவன் தேவை
நாட்டு மக்களுக்கு
ஜனநாயக
அரசாட்சி தேவை!

பாட்டுக்கு சுருதி
தேவை
பாரதத்திற்கு அபிநயம்
தேவை
ஏட்டுக்கு எழுத்தாணி
தேவை
ஏழைத் தொழிலாளர்களுக்கு
ஏற்ற வாழ்வாதாரம் தேவை!

பூட்டுக்கு திறப்புத்
தேவை
பூவையற்கு புன்னகை
தேவை
மொட்டுக்கு காம்பு
தேவை
மோதகத்திற்கு பயறு சீனி
தேவை
தோட்டுக்கு சுரை
தேவை
தொற்று நோய் வராமலிருக்க
சுற்றுப் புறச் சுத்தம் தேவை!

# கோமாளிகளின் காலம்

ஹரன்

தென்னிலங்கையில் முன்னொரு காலத்திலே எங்கள் நவீன கால இனவாதிகளைப் போல மாதனமுத்த என்றொரு அதிமேதாவி இருந்தார். அந்த ஊர் பெரியவர்கள் முழுவதும் அவரை ஒரு பெரிய மனிதராக எண்ணுவது வழக்கம். ஒருமுறை வீடொன்றுக்குள் புகுந்த பசுக்கன்று ஒன்று தண்ணீர் குடிப்பதற்காக குடமொன் றுக்குள் தலையை செலுத்திவிட்டு தாகம் தணிந்ததும் தலையை வெளியே எடுக்க முனைந்தது. ஆனால் தலையை வெளியே எடுக்க முடியவில்லை. அதைப் பார்த்த வீட்டின் உரி மையாளனும் பானையை உடைக்காமல் கன் றின் தலையை எவ்வாறு எடுப்பது என முயன்று தோற்றுவிட்டான். இறுதியாக மாதனமுத்தவைக் கேட்டால் ஏதாவது நடக்கமுடியும் என உறுதியாக நம்பினான். வீட்டுக்காரன் மறுகணம் மாதனமுத்தாவிடம் முறையிட்டான். நான் எடுத்துக் காட்டுகிறேன் என்று கிளம்பினார் மாதனமுத்த. குடியானவனின் வீட்டைச்சுற்றி மதில் கட்டப்பட்டிருந்தது. இரு குதிரைகள் பூட்டிய மாதனமுத்தவின் வண்டில் வீட்டுக்குள் நுழைய முடியாது போனது. நடந்த உள்ளே போகவும் மாதன முத்தவுக்கு விருப்பமில்லை. தன் சேவகர்களை அழைத்து "நான் உள்ளே செல்ல மதிலை உடையுங்கள்" என உத்தர விட்டார். மறு கணம் மதில் அடித்து உடைக்கப் பட்டு குதிரை வண்டி லுடன் உள்ளே சென்ற மாதனமுத்த கன் றின் தலை பானைக்குள் சிக்கியி ருப்பதை அவதானித்தார். "இது சிறிய பிரச்சினை. கன்றின் கழுத்தை வெட்டுங்கள்" உத்தரவு பிறந்தது. மறுகணம் கன்றின் கழுத்து துண்டா டப்பட்டது. இரத்த வெள்ளத்தில் சரிந்தது கன்று.

வெட்டிய சேவகனும் எங்கள் மேதாவிகளில் ஒருவனாக இருந் தான். "ஐயா கன்றின் கழுத்து உள்ளே சிக்கிவிட்டது" என்றான். "சரி சரி பானையை உடைத்து கன்றின் தலையை வெளியில் எடு" என்று உத்தரவு பிறந்தது மறுகணம் பானை உடைக்கப்பட்டது. கன்றும் போனது. பானையும் போனது மதிலும் போனது. எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர மக்களுக்கு வேறு எதுவும் தெரியவில்லை. இத்தகைய மாதனமுத்தக்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு எங்கள் பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாதான்.

"புத்த பெருமான் ஒரு அமெரிக்கர். அவரின் பிறப்பிடம் அமெரிக்கத் தலைநகர் வொஷிங் டன். கொலம்பஸ் அமெரிக்காவைத் தேடிச் செல்லும்போது கௌதமன் எனும் பெயரு டைய புத்த பெருமானை அமெரிக்காவில் சந்தித்தார். பின் அவரை படகில் ஆசியா நோக் கிச் சென்றுகொண்டிருந்த வாஸ்கொட காமா வின் கப்பலில் புத்தரை ஏற்றிவிட்டான். புத்தரை அழைத்துவந்த வாஸ்கொடகாமா இந்தியாவில் அவரை இறக்கிவிட்டார். அங்கு துறவறத்தில் ஏற்பட்ட அதீத நாட்டம் காரண மாகப் புத்த பெருமான் பௌத்த மதத்தை ஸ்தாபித்தார். பின் எதேச்சையாக இலங்கைக்கு வந்தபோது இலங்கையிலும் பௌத்தம் பரவி யது. பின்னர் புத்தர் காலத்துக்குக் காலம் பண்டாரநாயக்க, பிரேமதாஸ, மஹிந்த ராஜ பக்ஷ என்ற நாமங்களோடு அவதரித்து நாட்டில் சாந்தியையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தி உயிர்களிடத்தே அன்பைப் பேண அரும்பாடு பட்டார்." இது பார்த்தவுடனேயே பச்சைப் பொய் என்று பச்சிளம் குழந்தைகூடச் சொல் லிவிடும். ஆனால் இந்தக் கதையைஇலங்கை நாடாளுமன்றத்தில் யாராவது ஒரு உறுப்பினர் கூறினால் அதனைஉண்மையென்று ஏற்று ஹன்சார்ட் அறிக்கையில் பதிவு செய்யும் நிலையே எமது தேசத்தில் இருக்கின்றது.

அந்தளவுக்கு அரச தரப்பு தன் இனவாத நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள நாடா ளுமன்ற சிறப்புரிமை என்ற அதிகாரத்தை முற்றுமுழுதாகப் பயன்படுத்திக் கொண்டிருக் கின்றது. இந்தத் திமிர்த்தனத்தில் வேற்று மதங்கள் மீதான அடக்குமுறைகள், தடைகள், பிற மதங்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் பொய்மைக் கதைகள் என்பவற்றை கண்மண் தெரியாமல் அள்ளி வீசிக்கொண்டிருக்கின்றது அதிகாரம். அதற்காக சில அமைச்சர்களையும் உறுப்பினர்களையும், இனவாதப் பேச்சாளர் களையும், இனவாத மதவாத தீவிரவாத குழுக்களையும் அரசு வளர்த்துவிட்ட வண்ண மிருப்பதுபோல் தெரிகின்றது. நாடு கெட்டுக் குட்டிச்சுவராவதற்கும், மதவன்முறைகள் இனவன்முறைகள் பெருகி நாடு சுடுகாடாக மாறுவதற்கும் இத்தகைய குழுக்களே காரண மாக இருக்கப் போகின்றன. இதனைக் கண் டும் காணாமல் இருக்கிறது அரசு. இனவாத இலக்குகளை அடைந்து கொள்வதற்காக




வெறிபிடித்த குழுக்களைச் சார்ந்தோரையும் அரச தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச் சர்களையும் கைவசம் வைத்துக்கொண்டு கூத்தாடிக்கொண்டு இருக்கின்றது அரச அதிகார பீடம். இதற்காக அமைச்சர் மேர்வின் சில்வா, அமைச்சர் சம்பிக்க ரணவக்க, அரச தரப்பு பிரதிநிதி அஸ்வர், எல்லாவல மேதானந்த தேரர் ஆகியோரும் பொதுபலசேனா, சிங்கள ராவண, ஹெல உறுமய போன்ற குழுக்களும் தங்கள் முழுநேரத் தொழிலாக மத, இனவாதக் கருத் துக்களைப் பரப்புவதிலேயே குறியாக இருக் கின்றன.

அண்மையில் இப்படிப்பட்ட கருத்தொன்றை நாடாளுமன்றத்தில் முன்வைத்து தன் அரச விசுவாசத்தைக் காட்டியிருக்கிறார் பொதுமக் கள் தொடர்பு அமைச்சர் காமெடிநாயகன், கலியாணராமன், அடிதடிமன்னன் என்றெல் லாம் புகழப்படும் ஈழத்து இம்சை அமைச்சர் மேர்வின் சில்வா. தான் கூறும் கருத்து தவ றென்பதை மிகச் சரியாகத் தெரிந்துகொண்டு அதனை எந்தவித வெட்க துக்கமும் இல்லாது அவிழ்த்துவிட்டுள்ளார் அவர். தான் பள்ளிக் கூடப் பக்கமே போகாதவன் என்ற உண்மையை இதன் மூலம் நாடாளுமன்றத்தில் போட்டு உடைத்திருக்கிறார் அமைச்சர் மேர்வின். "இராவணன் ஒரு சிங்களவர். கதிர்காமக் கந்தனும் விஷ்ணுவும்கூட இலங்கையில்தான் பிறந்தவர்கள்" என்று தனது மாபெரும் உலக மகா கண்டுபிடிப்பைச் சபையில் அவிழ்த்து விட்டு எல்லோரையும் மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சரியப்படுமளவுக்கு கருத்துக்களை அள்ளிக்கொட்டியுள்ளார் விஞ்ஞானி மேர்வின் சில்வா.

"கதிர்காமத்தில்தான் முருகன் பிறந்தார். அதேவேளை அவருடைய மாமனாரான விஷ்ணு எங்களுடைய மேன்மைதங்கிய ஜனாதிபதியின் அயலூரான உடப்பலன்னவில் அவதரித்தார். இதுதான் உண்மை" என்று தன்னுடைய கண்டு பிடிப்பை நாடாளுமன்றில் விளக்கிய அமைச்சர் மேர்வின்சில்வா யாராவது இது குறித்து சந் தேகம் எழுப்பியிருந்தால் குறித்த கடவுளர்களு டைய பிறப்புச் சான்றிதழ்களைக்கூட சமர்ப்பித் திருக்கக் கூடும். அந்தளவுக்கு ஆள் பலே கில்லாடி.

இப்படிப்பட்ட கருத்துக்கள்மூலமும் தனது செயற்பாடுகள் மூலமும் 21ஆம் நூற்றாண்டின் மாதனமுத்தவாக வலம் வருகிறார் மேர்வின் சில்வா. சிங்கள இனவாத அரசும் இத்தகைய மாதனமுத்தக்களைத் தமது அமைச்சரவையில் ஆலோசகராகவும், அமைச்சர்களாகவும் வைத் துக்கொண்டே தன் சீவியத்தை நடத்திக் கொண்டிருப்பது அரசுக்கும் ஒரு வகையில் பெருமைதான். ஏற்கனவே, தமிழர் தேசங்களில் நடத்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் மூலமும் கண்டுபிடிக்கப்பட்ட சின்னங்களின் அடிப்படையில் இலங்கையில் தொன்று தொட்டு வாழ்ந்து வருகின்ற இனமாக தமிழி னம் உறுதிப்படுத்தப்பட்டிருக் கின்றது. குறிப்பாக இலங்கையின் தேசிய மர புரிமைகள் அமைச்சராக இருந்தவர் களும் இலங்கையில் இந்து சமயத்தின் தொன்மை பற்றியும் இலங் கையில் இந்துக்கோயில்கள், பௌத்த மதத் தெய்வங்கள் வைக்கப்பட்டு வழிபட்ட முறையைப் பற்றியும் தெளிவாகவே வரையறுத்திருந்தனர். பூநகரி தொடக் கம் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அகழ் வாய்வுகள் வரை எல்லாமுமே தமிழ் மக்களின் இருப்பின் தொன் மையை ஆணித்தரமாக நிரூபித்து விட்டன. எனவே, இத்தகைய மாதன முத்தக் களின் கதை எந்த வகையியிலும் தமி ழினத்தின் இருப்பின் தொன்மை யில் தாக்கத்தைச் செலுத்தாது என்பது உண்மையே.


ஆனாலும் பொய்யை திரும்பத் திரும்பச் சொல்வதன் ஊடாக அதை உண்மையோ என்று சந்தேகம் கொள்ள வைத்து பின்னர் அந்தப் பொய்யையே நம்ப வைத்து கடைசியில் உண்மை பொய்யாகிவிடும். பொய் உண்மையாகிவிடும். அநேக இடங்களில் இதுவே நடந்திருக்கிறது. இவ்வாறு பொய்யை உண்மையாக்குதல் என்பது பேரினத்துக்கு கைவந்தகலை. அதற் கான வேலைத்திட்டங்கள் பல தசாப்தங்களுக்கு முன்னரே தொடங்கிவிட்டன. தமிழ் மன்னர் களின் பெயர்களை சிங்கள மயப்படுத்தி தொன்று தொட்டு இது சிங்கள நாடுதான் என்று நிறுவ அவர்கள் படாதபாடு பட்டுவருகிறார்கள் அதுபோன்றே இலங்கையின் அடையாளங் களில் முக்கியமான சிகிரியாக் குன்றுகூட தமிழ் மன்னனான இராவணனின் கோட்டை என்றே நம்பப்படுகிறது. ஆனால் சிகிரியாவை மட்டு மல்லாது யாழ்ப்பாணத்தில் சம்பில்துறை யைக்கூட சிங்களச் சாயம் பூசி அதைச் சொந்தம் கொண்டாட நினைக்கிறது அதிகாரம். ஆரம் பத்தில் தன்னிடம் உள்ள கோமாளிகளை வைத்து பகிடி போன்று சில கருத்துக்களைச் சொல்லிவிட்டு பின்னர் அதனையே "சீரிய ஸான" விடயமாக பரப்பி கடைசியில் அதையே உண்மையாக்க அதிகாரம் முனைகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இது கோமாளிகளின் காலம். சிரித்து கைதட்டிவிட்டு போவது மட்டுமே எங்கள் கடமை.

# ரஜினியும் தமிழ்ச் சமூகவியலும்




ஆர். அபிலாஷ்

ஐம்பது வருடங்களுக்கு முன் இந்தியா சிதறி விடும் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்படி நிகழாமல் இருந்ததற்கு வேற்றுமையில் ஒற்றுமை எண்ணம் அல்ல காரணம். நம் பக்கத்தில் சுத்தமாய் பிடிக்காமல் இருவர் இருந்து சுத்தமாய் பிடிக்காத ஒரு காரியம் பண்ணிக் கொண்டிருந்தால் கூட எளிதில் நம்மால் அதைத் தாங்கிக் கொள்ள முடியும். நம் நாடு கடந்த ஐநூறு வருடங்களில் பல பெரும் மாற்றங்களை, ஆக்கிரமிப்புகளை, கொந்தளிப்புகளை எளிதில் ஒன்றுமே நடக்காதது போல் கடந்து வந்தது இப்படித்தான். எதையும் செய்யாமல் இருந்தாலும் ஏதோ ஒன்று நடக்கும் என நம்பிக் கொண்டு இருக்கிறோம். உளவியல் ரீதியாக, உறவுகளைக் கையாள்வதைப் பொறுத்தவரையிலும், அக ஆரோக்கியத்துக்கும் இந்தப் பட்டும்படாத அணுகுமுறை மிக நல்லதுதான். எல்லா ஆசியர்களுக்கும் இந்த ஒட்டாமை கருதுகோளின் மீது ஆகர்சம் உள்ளது. புரூஸ்லீயின் படங்களுக்கும் ரஜினியின் தொன்மத்துக்கும் உள்ள முக்கிய ஒற்றுமை இந்த ஒட்டாமை தான். இறுதிக்காட்சியில் வில்லனைக் கொன்று விட்டு ஒன்றுமே நடக்காதது போல் அவனது கல்லறைக்குச் சென்று மரியாதை செலுத்தி விட்டு தனியான பாதையில் நடந்து செல்வார் புரூஸ்லி ரஜினியின் பல படங்களில் வில்லன் ஏதோ திருஷ்டி பூசணிக்காய் போலத்தான் இருப்பான். ஒரு சடங்கு போல் ஈடுபாடில்லாமல் அவனை தூக்கிப் போட்டு உடைத்து விட்டுப் போவார். சிவாஜி, பாட்ஷா போன்ற படங்களை சொல்லலாம். தளபதியில் ரஜினி அவ்வளவு ஆவேசமாக வில்லனை அடித்துக் கொல்லும் போது அவன் ஏற்கனவே தன் நண்பனை இழந்து வில்லனிடம் தோற்றுப் போயிருக்கிறான். அது ஆரண்யகாண்டத்தில் பிணத்தை நோக்கி நீ மட்டும் உயிரோட இருந்திருந்தால் உன்னைக் கொன்றிருப்பேன் என்று கூறுவது போலத் தான். வில்லனை ஒரு பொருட்டாகவே கருதாமல் கடந்து செல்வதைப் பின்னர் மிஷ்கினும் தன் அஞ்சாதே , முகமூடி, ஓநாயும் ஆட்டுக்குட்டியிலும் சித்தரித்தார். அஞ்சாதேவில் சுவாரஷ்யமாக பிரசன்னா கொல்லப்படும் போது தன் நின்று போன கைக்கடிகாரத்தை பார்த்து தனக்குள் சிரித்துக் கொள்வான். அவனை நாயகன் கொல்லவில்லை. அவன் காலம் நின்று விட்டது. கூட அவனும் நின்று விட்டான். முகமூடியிலும் வில்லன் தன் சாவை இதே கனிவுடன்தான் ஏற்கிறான்.




இதே போன்றதுதான் பெண்கள் மீதான கடும் வெறுப்பு. ரஜினியின் படங்களில் தான் நாயகி ஒரு கட்டத்துக்கு மேல் கதையில் பயணிக்க மாட்டாள். அல்லது அவள் ரஜினியை தன் அப்பாவித்தனத்தால் காட்டிக் கொடுப்பாள் (சிவாஜி) அல்லது அவனைப் புரிந்து கொள்ள முடியாதவளாக இருப்பாள் (பாபா). கல்லூரியில் படிக்கையில் கதம் கதம் என்கிற வசனம் என்னை மிகவும் ஈர்த்தது. பெண்கள் மீதான வெறுப்பும் கோபமும் இன்று பல படங்களில் வெளிப்படுகிறது. இது பெண் மீதான பயத்தில் இருந்து வருவது தான். ஜெயலலிதாவிடம் மோதல் ஏற்பட்ட பின் பெண்களைப் பழிக்கும் வசனங்களும் பாத்திர, கதை அமைப்புகளும் ரஜினி படங்களில் வந்ததைப் பார்த்தோம். ஆனால் அதற்கு முன்பிருந்தே பெண்களுக்கும் சமூக மாற்றத்துக்கும் எதிரான நிலப்பிரபுத்துவ கருத்துக்கள் தான் ரஜினி தொன்மத்தின் வேராக இருந்து உள்ளன. பெண்கள் தவிர்க்கப்பட வேண்டியவர்கள் எனும், ஆண்களால் மட்டும் நிரம்பிய வைதீக மரபின் தாக்கம் அவரது ஆரம்ப படங்களில் இருந்தே உள்ளது. பெண்களின் முன்னேற்றம், அவர்கள் முன்பை விட அதிக வன்முறையுடன் ஆண்களிடம் இன்று நடந்து கொள்வதும், வீட்டுக்குள்ளும் வெளியேயும் நம் முதுகில் ஒரு துப்பாக்கியை சதா அழுத்திப் பிடித்துக் கொண்டிருப்பதும் சமூக மாற்றத்தின் அசலான பிரதிபலிப்பு எனலாம். ரஜினியை நமக்குப் பிடிப்பதற்கு இன்னொரு காரணம், இந்த சமூக மாற்றம் நமக்குப் பிடிக்கவில்லை என்பதும்தான்.







**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

உங்கள் ராசிநாதன் செவ்வாய், தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் மட்டுமே, நற்பலன் வழங்குகின்றனர். மற்ற கிரகங்கள் அத்தனையும் எதிர்மறையாக உள்ளனர். இதனால் சுயகவுரவம், பண சேமிப்பை பாதுகாத்தலில், உரிய அக்கறை வேண்டும். உடன் பிறந்தவர் ஓரளவு உதவிகரமாக நடந்து கொள்வர். பெண்கள் குடும்ப செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது. மாணவர்கள் படிப்பில் சிறந்தவர்களின் உதவியுடன் நல்ல தரமான தேர்ச்சி பெறுவர்.




**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு கேது, செவ்வாய், சூரியன் தவிர, மற்ற கிரகங்கள் அனுகூலமாக உள்ளனர். நடை, உடை, செயலில் புதிய மாற்றம் கொண்டு வருவீர்கள். உங்களின் ஆலோசனையை, நண்பர்கள் விருப்பமுடன் கேட்டு பின்பற்றுவர். வீடு, வாகனத்தில் பொருள் திருட்டு போகாமல் தவிர்க்க, உரிய பாதுகாப்பு நடைமுறை பின்பற்ற வேண்டும். புத்திரர், நண்பர்களிடம் உருவாகிற அதிருப்தி சிந்தனைகளை போக்க, இயன்ற அளவில் உதவுவர். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்த, தாராள பண வசதி துணை நிற்கும்.




**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு சுக்கிரன், கேது, சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். புதிய முயற்சிகளை துவங்குபவர்கள், பின்விளைவுகளை கவனத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டும். அக்கம் பக்கத்தவர் மற்றும் நண்பரின் குறையை பெரிதுபடுத்தி பேச வேண்டாம். வீட்டிற்கு தகுந்த பாதுகாப்பும், வாகனத்தில் மித வேகமும் பின்பற்ற வேண்டும். புத்திரரின் உடல் நலம் ஆரோக்கியம் பெற, சிறு அளவிலான மருத்துவ சிகிச்சை உதவும். எதிர்மறை குணம் உள்ளவரிடம் விலகுவதால், மன அமைதி, பொன்னான நேரத்தை பாதுகாக்கலாம்.




**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உங்கள் ராசிக்கு செவ்வாய், சூரியன், புதன் நற்பலன் வழங்குகின்றனர். மற்ற கிரகங்கள் எதிர்மறை பலன் தருகின்றனர். சுயகவுரவம் பாதுகாக்க, தாராள அளவில் பணம் செலவு செய்வீர்கள். இதனால், சேமிப்பு பணம் குறைவதும், பணம் கடன் பெறுகிற சூழ்நிலையும் ஏற்படலாம். கவனம் தேவை. உடன் பிறந்தவர்களின் நற்குணத்தால், குடும்பத்தில் ஒற்றுமை, மங்கல நிகழ்வு உருவாகும். பூர்வசொத்தில், வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும்.




**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

உங்கள் ராசிக்கு, மூன்றாம் இடத்தில் உள்ள சனி, ராகு தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். தாமதமான பணி நிறைவேற, புதிய வாய்ப்பு வரும். ஆர்வமுடன் பயன்படுத்துவதால் அளப்பரிய நன்மை பெறுவீர்கள். அக்கம் பக்கத்தவர்கள் நல் அன்பு பாராட்டுவர். வீடு, வாகனத்தில் அஷ்டமுகம் இல்லாதவர்களுக்கு இடம் தர வேண்டாம். புத்திரரின் பிடிவாத செயல் பேச்சுக்களை, பொறுமையுடன் சரி செய்வீர்கள். பணத் தேவையின்நெருக்கடியை சமாளிக்க, நண்பரின் உதவி கிடைக்கும்.




**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு நான்காம் இடத்தில் உள்ள புதன், தினகதி சுழற்சி கிரகம், சந்திரன் நற்பலன் தருகின்றனர். ஐந்தாம் இடத்தில் உள்ள சுக்கிரன் அஷ்டமுகமான,பெண்களின் உதவியால், சில நன்மை வழங்குவார். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி நிலவும். வீடு, வாகனத்தில் அதிக பயன்பாட்டு வசதி பெற, பராமரிப்பு பணி மேற்கொள்வீர்கள். புத்திரரின் கடின சொற்களை பெரிதுபடுத்தி, பேச வேண்டாம். உடல் நல் ஆரோக்கியம் பலம் பெற, சத்தான உணவு உண்பது, சீரான ஓய்வு உதவும். இல்லறத் துணை குடும்ப நலனில், அக்கறையுடன் நடந்து கொள்வார்.




**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு சூரியன், சுக்கிரன், குரு அளப்பரிய வகையில் நற்பலன் வழங்குகின்றனர். உறவினர், நண்பர்களின் வாழ்வியல் சூழ்நிலை உணர்ந்து, இயன்ற அளவில் உதவுவீர்கள். கூடுதல் அன்பு, பாசம் கிடைத்து மனம் மகிழ்வீர்கள். தம்பி, தங்கைக்கான கடமைகளை உணர்த்துவீர்கள். வீடு, வாகனத்தில், உரிய பயன்பாட்டு வசதி கிடைக்கும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து நல்வழி நடத்துவீர்கள். எதிரியினால் உருவாகிற தொந்தரவு பலமிழந்து போகும். இல்லறத் துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார்.




**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

உங்கள் ராசிக்கு செவ்வாய், சுக்கிரன், கேது நற்பலன் தருகின்றனர். மற்ற கிரகங்கள் எதிர்மறையாக செயல்படுகின்றனர். விற்பனையாளரின் பகட்டான பேச்சை நம்பி, அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம். சிலர், உங்களின் புகழ், கீர்த்தியை சகித்துக் கொள்ள மனமின்றி அவதூறு பேசுவர். சொந்தப் பணியில் ஆர்வம் கொள்வது நன்மை பெற உதவும். தாயின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவதால், குடும்பத்தில் ஒற்றுமை வளரும். சொத்து தொடர்பான ஆவணத்தை, கவனமுடன் பாதுகாக்க வேண்டும். விருந்து, விழாவில் கலந்து கொள்வதில், அதிக நேரம் செலவிட வேண்டாம்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

உங்கள் ராசிக்கு சுக்கிரன், குரு, சனி, ராகு அதிக நற்பலன் தருகின்றனர். தாமதமான பணிகளை, புதிய முயற்சியால் நிறைவேற்றுவீர்கள். நண்பர், உறவினரின் ஆதரவு கிடைக்கும். இனிய வார்த்தை பேசி சமூகத்தில் பெற்ற அந்தஸ்து பாதுகாத்திடுவீர்கள். சிலர், புதிய வாகனம் வாங்குகிற முயற்சி இனிதாக நிறைவேறும். புத்திரர் உடல் நலக் குறைவை எதிர்கொள்வர். உரிய சிகிச்சை, ஓய்வு ஆரோக்கியம் பலப்படுத்தும். வாழ்க்கைத் தரம் உயர்ந்து மனதில் மகிழ்ச்சி, புத்துணர்வு




**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசியில் உள்ள சுக்கிரன் தினகதி சுழற்சி கிரகம், சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். மற்ற கிரகங்கள் எதிர்மறையாக உள்ளனர். தகுதி, திறமையை முறையாக பயன்படுத்துவதால், பணி உரிய காலத்தில் நிறைவேறும். மற்றவர்களை பார்த்து பணச் செலவில் ஆடம்பரம் பின்பற்ற வேண்டாம். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு முறை பின்பற்ற வேண்டும்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு கேது, குரு, சூரியன், சுக்கிரன், புதன் அளப்பரிய வகையில் நற்பலன் வழங்குகின்றனர். உறவினர்கள், கூடுதல் அன்பு பாராட்டுவதும், புதிய சொந்தங்கள் அறிமுகம் ஆவதுமான நன்னிலை உண்டு. சமூகப் பணியில் ஆர்வம் கொள்வீர்கள். வீடு, வாகனத்தில் பயன்பாட்டு வசதி திருப்திகரமாக இருக்கும். புத்திரர் இனிய வார்த்தை பேசி, பெற்றோருக்கு பெருமை தேடித் தருவர். எதிரியினால், தொந்தரவு வராத சுமுக வாழ்வு பெறுவீர்கள். இல்லறத் துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.




**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

உங்கள் ராசிக்கு சூரியன், புதன், சுக்கிரனின் அமர்வு நற்பலன் வழங்கும் வகையில் உள்ளது. அதிக விலையுள்ள வீட்டு உபயோகப் பொருட்களை, உரிய கவனத்துடன் பாதுகாத்துக் கொள்வீர்கள். பணியில், புதிய சாதனை நிகழ்த்த வாய்ப்பு தேடி வரும். உடன் பிறந்தவர்களின் அன்பு, பாசம் திருப்திகர மாக கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரரின் மனக்குழப்பம், உரிய விளக்கத்தினால் சரி செய்வீர்கள். எதிரி சொந்த சிரமங்களால் இடம் மாறிப் போவர். விருந்து, விழாவில் இல்லறத் துணையுடன் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறை மாற்று உபாயத்தினால் சரி செய்வீர்கள்.





# ஆஷஸை பறிகொடுத்த இங்கிலாந்து

ஆஷஸ் கிண்ணம் தோன்றிய வரலாறு உங்களுக்கு நினைவிருக்கலாம். அவ்வாறு, மீண்டும் ஒரு முறை விக்கெட் பெயில்ஸை எரித்து கிண்ணமாக்கினாலும் தப்பில்லை. இங்கிலாந்து கிரிக்கெட் இறந்து விட்டதோ என எண்ணும் அளவிற்கு மிக மோசமான தோல்வியை அவுஸ்திரேலிய மண்ணில் இங்கிலாந்து பெற்றிருப்பதுடன், கடந்த 8 வருடங்களாக தன் வசம் வைத்திருந்த ஆஷஸ் கிண்ணத்தையும் அவுஸ்திரேலியாவிடம் தரை வார்த்துக் கொடுத்திருக்கின்றது. சகல துறைகளிலும் அசத்தி வரும் அவுஸ்திரேலியா கிண்ணத்தை தனதாக்கியதில் வியப்பில்லை.

கடந்த ஜூலை, இங்கிலாந்தில் இடம்பெற்ற ஆஷஸ் தொடரை 3 : 0 என்ற கணக்கில் வெற்றி கொண்ட இங்கிலாந்து அணி, குளிர்கால ஆஷஸையும் வெற்றி கொள்ளும் பலமிக்க அணியாகவே அவுஸ்திரேலியாவில் காலடி வைத்தது. ஆனால், நிலைமைகளோ தலைகீழாக மாறிவிட்டது. பிறிஸ்பேனில் இடம்பெற்ற முதலாவது போட்டியில் 381 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், அடெலைட்டில் இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் 218 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், போத்தில் இடம்பெற்ற மூன்றாவது போட்டியில் 150 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் இங்கிலாந்து அணியை அவுஸ்திரேலியா தோற்கடித்திருந்தது. இதன் மூலம், தொடரின் ஏனையை இரண்டு போட்டிகளையும் வெற்றி கொண்டு வெள்ளையடிப்புச் செய்வதற்கு காத்திருக்கின்றது அவுஸ்திரேலியா.

இங்கிலாந்தில் இடம்பெற்ற தொடரில், முற்று முழுதாக இங்கிலாந்து வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். துடுப்பாட்டத்தில் இயன் பெல் (562 ஓட்டங்கள்), பீட்டர்ஸன் (388 ஓட்டங்கள்), கெவின் ரூட் (339 ஓட்டங்கள்), ஜெனாதன் ட்ரொட் (293 ஓட்டங்கள்), அலெக்ஸ்டயா குக் (277 ஓட்டங்கள்) என அசத்த பந்துவீச்சில் ஸ்வான் (26 விக்கெட்டுக்கள்), ப்ரோட் (22 விக்கெட்டுக்கள்), அண்டாஸன் (22 விக்கெட்டுக்கள்) எனச் சரித்திருந்தார்கள். அவுஸ்திரேலிய மண்ணில் இதுவரை



ஒரேயொரு சதம் மட்டுமே இங்கிலாந்து வீரரால் (ஸ்ரோக்ஸ் - 120) பெறப்பட்டிருக்கின்றது. மாறாக, வோனா, வட்சன், கிளார்க், ஜோன்ஸன் என அசத்துகின்றார்கள்.

ஒழுக்கயீனம் காரணமாக இங்கிலாந்திலிருந்து திருப்பியனுப்பப்பட்ட டேவிட் வோனா சதங்களின் துணையுடன் தன்னை மீண்டும் நிரூபித்திருக்கின்றார். அணித்தலைவராக மைக்கேல் கிளார்க் பொறுப்புணர்ந்து ஆடியிருக்கின்றார். இழந்த முதலிடத்தை மீண்டும் பெறுவதே தமது இலக்கு என அவர் தெரிவித்திருக்கிறார். தற்போது ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் ஐந்தாவது இடத்திலிருக்கும் அவுஸ்திரேலியா, இத்தொடரை வெள்ளையடிப்புச் செய்வதன் மூலம் (தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தியாவுடனான தொடரில் தென்னாபிரிக்கா தோற்றால்) முதலிடத்திற்கு முன்னேற வாய்ப்பிருக்கின்றது.

மிக முக்கியமாக, அவுஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளராக முன்னாள் வீரா டெரன் லீமன் பொறுப்பேற்றதும், இங்கிலாந்தில் படுமோசமாக அவுஸ்திரேலியா தோல்வியடைந்திருந்தது. அதனைத் தொடர்ந்து அவர் மீது பல எதிர்மறையாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், உறுதியுடன் அணியைக் கட்டியெழுப்பி ஜெயித்துக் காட்டியிருக்கிறார் லீமன். மறுபுறத்தில், இங்கிலாந்தின் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றும் அன்டி பிளவா, தற்போது கடும் விமர்சனங்களை எதிர்கொண்டிருக்கின்றார். தோல்வி குறித்து வரும் விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும் என அவர் கூறியிருக்கின்றார்.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 4ஆவது போட்டி பொக்ஸிங் டே என அழைக்கப்படும் கிறிஸ்மஸ் தினத்திற்கு அடுத்த நாள் மெல்போனில் இடம்பெறுகின்றது. தமது, குறைகளை சரிப்படுத்திக் கொண்டு இனி வரும் இரண்டு போட்டிகளையும் வெற்றி கொள்ளும் பட்சத்தில் முதலிடத்தை தக்க வைக்க இங்கிலாந்து போராடலாம்.

# ஜூனியர் ஹொக்கி ஜேர்மனி வசம்

புது டெல்லியில் இடம்பெற்ற ஆண்களுக்கான 10வது ஜூனியர் உலகக் கிண்ண ஹொக்கி போட்டியில் நடப்பு சம்பியன் ஜேர்மனி, பிரான்ஸைத் தோற்கடித்து 6ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று சாதித்தது. இறுதிப் போட்டியில் 5 : 2 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் தோற்றுப் போனதால் இரண்டாம் இடத்தையே அவர்களால் பெற முடிந்தது. சொந்த மண்ணில் கிண்ணம் வெல்லும் கனவுடன் களமிறங்கிய இந்திய அணி 10ஆம் இடத்தைப் பெற்றது.

ஜேர்மனி அணி, கடந்த 1982, 1985, 1989, 1893, 2009 ஆண்டுகளில் சம்பியன் பட்டத்தை வென்றது. தவிர, பிரான்ஸ் இம்முறை முதன்முறையாக இறுதிப் போட்டிக்கு நுழைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மறுபுறத்தில், 3ஆம், 4ஆம் இடங்களைத் தீர்மானிக்கும் போட்டியில் நெதர்லாந்து, மலேசியா அணிகள் மோதின. இதில் கோல் மழை பொழிந்த நெதர்லாந்து அணி, ஆட்டநேர முடிவில் 7 : 2 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

5ஆவது, 6ஆவது இடங்களுக்கான போட்டியில், அவுஸ்திரேலியா, பெல்ஜியம் அணிகள் மோதின. இதில், 2 : 2 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் சமநிலை பெற்றதைத் தொடர்ந்து வெற்றியைத் தீர்மானிக்கும் பெனல்டி ஷூட் அவுட் முறையில் அவுஸ்திரேலிய அணி 3 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 7ஆம், 8ஆம் இடங்களுக்கான போட்டியில் நியூசிலாந்து, தென்கொரியா அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆடிய நியூசிலாந்து அணி 4: 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# கோஹ்லி மீதான அழுத்தம்

சச்சின் விளையாடும் காலத்திலேயே, அடுத்த சச்சின் என வர்ணிக்கப்பட்ட இந்தியாவின் இளம் வீரர் விராட் கோஹ்லி, தற்போது சச்சின் அணியில் இல்லாத இடைவெளியால், அவரைச் சச்சினாகவே உருவகப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். விளையாட்டில் மட்டும் அல்ல விளம்பரத்திலும் சச்சின் இடத்தை நிரப்பியவர் இவர் தான்.

வழமையாக சச்சின் ஆடும் நான்காம் இலக்கத்தில் கோஹ்லி களமிறங்குவதால், தென்னாபிரிக்க தொடருக்கு முன்னரே சச்சின் இடத்தை ஹோஹ்லி நிரப்புவாரா? என்ற எதிர்பார்ப்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இது, மனதளவில் கடும் அழுத்தத்தைப் பிரயோகிப்பதால், கோஹ்லியால் சரியாக விளையாட முடியாது போய்விடும் எனக் கூறப்படுகின்றது. சச்சினின் இடத்தை நிரப்புவது அவ்வளவு இலகுவான காரியம் கிடையாது. இதை கோஹ்லியே பல பேட்டிகளில் குறிப்பிட்டிருக்கின்றார்.



தற்போது, கிரிக்கெட் துறை சார்ந்த பலரும் கோஹ்லியையும் சச்சினையும் ஒப்பிடுகின்றார்கள். விராத் கோஹ்லியின் துடுப்பாட்டத்தைப் பார்க்கும் போது, எனக்கு சச்சின் தான் நினைவுக்கு வந்தார் என தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் ஆலன் டொனால்ட் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் திணறிய கோஹ்லி, தற்போது டெஸ்ட் தொடரில் தனது அதியுச்ச பெறுபேற்றை வெளிப்படுத்தி வருகின்றார். இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களான சுனில் கவாஸ்கா, ரவி சாஸ்திரி ஆகியோரும் கோஹ்லிக்கு ஆதரவாக தங்கள் கருத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

# தோசைக் கில்லாடி!

''தோசை சுடுவதில் நான் கில்லாடி'' என்கிறார் நடிகை தமன்னா.எட்டு ஆண்டுகளில் முப்பது படங்களில் நடித்து விட்டார் தமன்னா. இவருடன் வந்த பல நடிகைகள் தரம் இழந்து ஓரம் கட்டப்பட்டு விட்டனர்.ஆனால் இவர் மட்டும் தமிழ், தெலுங்கு மொழிகளில் இன்னும் மும்முரமாக நடித்துக் கொண்டு இருக்கிறார். தற்போது அஜித்துடன் நடித்த 'வீரம்' படம் பொங்கலுக்கு வருகிறது. மேலும் இரண்டு ஹிந்தி படங்களிலும் ஒரு தெலுங்கு பட்த்திலும் நடித்து வருகிறார்.

என்னதான் படங்களில் தீவிரமாக நடித்தாலும் குடும்பம்தான் தமன்னாவுக்கு மிகவும் முக்கியமாம்.இதுகுறித்து அவர் கூறுகையில்,

''சினிமாவா? குடும்பமா? என்றால் குடும்பத்துக்குதான் முதல் இடம் தருவேன். குடும்பம் எனக்கு ரொம்ப முக்கியம். என் பலம், பலவீனம் இரண்டுமே குடும்பம் தான். மேலும் வீட்டில் இருந்தால் நான் ஒரு நடிகை என்பதையே மறந்து விடுவேன். வீட்டில் இருக்கும் போது நான் சமையலிலும் வெளுத்து வாங்குவேன். அதிலும் குறிப்பாக தோசையை சிறு கோணல் கூட இல்லாமல் அற்புதமாக சுடுவேன் . அந்தத் தோசையை பார்த்தால் எல்லோருக்கும் சாப்பிட ஆர்வம் தோன்றும்'' என்று கூறுகிறார் தமன்னா.



# நல்லா வருவ

சிம்பு, நயன்தாரா, சூரி நடிப்பில் பாண்டிராஜ் இயக்கும் படத்தின் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு டிசெம்பர் 20இல் தொடங்கியுள்ளது.இந்தப் படப்பிடிப்பில் சிம்புவும், நயன்தாராவும் கலந்துகொண்டனர்.ஆறேழு வருடங்கள் கழித்து இவர்கள் இரண்டுபேரும் ஒரு படத்தில் இணைவது உண்மையிலேயே ஒரு விநோத நிகழ்வு தான்.

இணைவது உண்மையிலேயே ஒரு விநோத நிகழ்வு தான் அதைவிட முக்கிய மான விஷயம் இந்தப்படத்தில்

சிம்புவின் தம்பி குறளரசன் இசைய இந்தப் படத்துக்கான முதல் பா இசையை லயித்துக் கேட்ட சிம்புவு என ருவிட்டரில் பாராட்டு மழை பெ சிம்பு தன் தம்பியை 'நல்லா இ புகழ்ந்து தள்ளுகிறாராம்.

# வருகிறார் சின்ன விஜயகாந்



புரட்சிக் கலைஞர் விஜயகாந்தின் மகன் சண்முக பாண்டியன் 'சகாப்தம்' என்ற படத்தின் மூலம் நாயகனாக அறிமுகமாவுள்ளார்.காதல், நகைச்சுவை கலந்த திரைப்படமாக இது உருவாக உள்ளது. இதில் சண்முக பாண்டியனுக்கு ஜோடியாக யாரை நடிக்க வைக்கலாம் என்று தீவிரமாக ஆலோசித்து வருகிறார்கள்.

ஸ்ரீதேவியின் மகள் ஜான்வியை நடிக்க வைத்தால் நன்றாக இருக்கும் என்பதால் ஜான்வியை நடிக்க வைக்க முயற்சித்து வருகிறார்கள்.

ஏற்கனவே, ஜான்வியை திரையுலகில் அறிமுகப் படுத்தியே ஆக வேண்டும் என சிலர் உறுதியுடன் இருக்கின்றனர்.அல்லு அர்ஜுன் உட்பட சில பெரிய நாயகர்களின் படங்களில் ஜான்வி நடிக்க அழைப்புகள் வந்தன.ஆனால், ஜான்வி இதுவரை சினிமாவில் நுழையவில்லை.எனினும் அவர் விஜயகாந்த் மகனுடன் தமிழில் அறிமுகமானாலும், அதில் ஆச்சரியம் இல்லை.

# வாய்ப்பு

மலையாளத்தில் ப்ரி ஜனனி அய்யர்.பால விஷாலுக்கு ஜோடிய அதன்பிறகு ஸ்ரீக நடித்தார். ஆனால் ஓடாததால் ராசியி இயக்குநர்கள் ஜனனி தற்போது மலை வந்ததால், கேரளாவி கியுள்ளார்.

இப்படி அவர் எடுத்த அ காரணமாக தற்போது ப்ரு 'செவன்த் டே' என்ற ப ஜோடியாக நடிக்கிறாராம்.

இப்படத்தில் தலைமைப் ஒருவரின் கொலை கண்டுபிடிக்கும் வேடத் நடிப்பதால், மறைமுகமா உதவி செய்யும் முக்கிய ரத்தில் நடிக்கிறாராம் ஜனன

இந்தப் படத்துக்கு பிறகு தனக்கு ஒரு நிலையான க கிடைக்கும் என்ற நம்பிக்க குள்ள முன்னணி நடிகர்களுடன் இ கான பட வேட்டை யையு ளாராம்.

# மீண்டும் ஜித்தன்



'ஜித்தன்' படத்தின் இரண்டாம் பாகம் விரைவில் தயாராக இருக்கிறது.வின்செண்ட் செல்வா இயக்கத்தில் ஆர்.பி.சௌத்ரியின் மகன் ரமேஷ் கதா நாயகனாக நடித்த இந்தப்படத்தின் வெற்றியை தொடர்ந்தே ரமேஷை, 'ஜித்தன் ரமேஷ்' என்று அழைக்கத் தொடங்கினார்கள்.இந்தப் படத்திற்குப் பிறகு மதுரை வீரன், புலி வருது, பிள்ளையார் தெரு கடைசி வீடு போன்ற பல படங்களில் நடித்த ஜித்தன் ரமேஷுக்கு அந்தப்படங்கள் சொல்லும் படியான வெற்றியை கொடுக்கவில்லை.

சமீபகாலமாக எந்தப் படங்களிலும் நடிக்காமல் இருந்த அவர் அடுத்து, ஜித்தன் படத்தின் இரண்டாம் பாகமாக உருவாக இருக்கும் ஜித்தன் 2 படத்தில் நடிக்கவிருக்கிறார்.

க்ரைம், த்ரில்லர் படமாக உருவாக இருக்கும் இந்தப்படத்தின் கதை, திரைக்கதை வசனத்தை வின்செண்ட் செல்வா எழுத, ராகுல் இயக்குகிறார்.

இந்தப் படத்தின் கதாநாயகி யார், இசை அமைப்பாளர் யார் என்பன போன்ற விடயங்கள் இன்னும் முடிவாகவில்லை.

# ஒரு பாடகர் இயக்குநர் ஆ

மலையாளத்தில் பிரபல பின்னணிப் பாடகராக இருப்பவர் ராஜேஷ் விஜய்.மோகன்லால், பிருத்விராஜ், ஜெயசூர்யா படங்களில் பாடல்கள் பா கோல்டன் ஐலேண்ட்'என்ற மலையாளப் படத்துக்கும் இசையமைத்துள்ளவர்.ஒரு உண்மைக்கதை கிடைக்கவே இதைப் படமாக்கினால் என் இயக்குநராகக் களம் இறங்கிவிட்டார்.கதை , திரைக்கதை இசை, நடிப்பு, இயக்கம் என சகல துறைகளிலும் தன் அடையாளத்தைப் பதித்திருக்கி

''நம் உடலில் ஒட்டிக் கொண்டிருக்கும் உயிர் கூட ஒரு பறவை போலத்தான். எப்போது கூட்டைத் திறந்து விடுவார்கள் சிறகடித்து வெளியே காத்துக் கிடக்கிறது .இந்த உடல் கூட்டை விட்டு உயிர்ப்பறவை பறப்பதற்குக் காரணமாகும் ஒரு நோய்தான் இப்படத்தின் மைய முடிச்சு.

இந்தப்படத்தில் வரும் நோய் வழக்கமாக படத்தில் காட்டப்படுவது அல்ல.இது லட்சத்தில் ஒருவருக்குத்தான் இருக்கும். நான் சந்தித்த நண்ப நிகழ்ச்சிதான் இது.'' என்கிறார் ராஜேஷ்.

## ல்லா வருவாயடா



சிம்பு, நயன்தாரா, சூரி நடிப்பில் பாண்டிராஜ் இயக்கும் படத்தின் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு டிசெம்பர் 20இல் தொடங் கியுள்ளது.இந்தப் படப்பிடிப்பில் சிம்புவும், நயன்தாராவும் கலந்துகொண்டனர்.ஆறேழு வருடங்கள் கழித்து இவர்கள் இரண்டுபேரும் ஒரு படத்தில் இணைவது உண்மையிலேயே ஒரு விநோத நிகழ்வு தான்.

இணைவது உண்மையிலேயே ஒரு விநோத நிகழ்வு தான் அதைவிட முக்கிய மான விஷயம் இந்தப்படத்தில்

ிம்புவின் தம்பி குறளரசன் இசையமைப்பாளராக அறிமுகம் ஆகிறார்.சமீபத்தில் ந்தப் படத்துக்கான முதல் பாடல் படப்பிடிப்பு நடந் தது. குறளரசன் சையை லயித்துக் கேட்ட சிம்புவும் பாண்டி ராஜும்'' நீ நல்லா வருவாயடா'' ன ருவிட்டரில் பாராட்டு மழை பொழிந்துள்ளார்கள்.

ிம்பு தன் தம்பியை 'நல்லா இசையமைக்கிறான்' என பார்ப்பவர் களிடம் ழ்ந்து தள்ளுகிறாராம்.

## காத்திருக்கும் ரசிகர்கள்



வீரம்' படத்தின் இசைக்குப் பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. 'ஆரம்பம்' படத்தின் பிரம்மாண்ட வெற்றிக்குப் பிறகு அஜித் நடித்த படம் 'வீரம்'.'சிறுத்தை' சிவா இயக்கத்தில் உருவாகிவரும் இந்தப்படத்தில் தமன்னா, சந்தானம், விதார்த், பாலா, அப்புக்குட்டி என பெரிய நட்சத்திரப் பட்டாளமே நடித்துள்ளது. வீரம்' படத்தின் இசைக்குப் பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

'ஆரம்பம்' படத்தின் பிரம்மாண்ட வெற்றிக்குப் பிறகு அஜித் நடித்த படம் 'வீரம்'.'சிறுத்தை'சிவா இயக்கத்தில் உருவாகிவரும் இந்தப்படத்தில் தமன்னா, சந்தானம், விதார்த், பாலா, அப்புக் குட்டி என பெரிய நட்சத்திரப் பட்டாளமே நடித்துள்ளது.

தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைப்பதால் படத்தில் பாடல்கள் குறித்து ரசிகர்கள் பெரும் எதிர்பார்ப்போடு காத்திருந்தார்கள்.

இந்தநிலையில் டிசெம்பர் 20ஆம் திகதி 'வீரம்' படத்தின் இசை வெளியிடப்பட்டது.

படத்தின் பாடல்கள் எல்லாமே சிறப்பாக வந்திருப்பதாக அஜித் ரசிகர்கள் கொண்டாடத் தொடங்கியிருக்கிறார்கள். வீரம் படத்தின் பாடல்களே இப்படி என்றால் படம் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று' தல' யின் ரசிகர்கள் பொங்கல் விருந்துக்காக தயாராகிவருகிறார்கள்.


## த்ரிஷாவுக்கு ஒரு கோடி?



த்ரிஷா சினிமாவில் நடிக்க ஆரம்பித்து, பத்து ஆண்டுகளைக் கடந்துவிட்டார். இதுவரை தமிழ், ஹிந்தி, தெலுங்குப் படங்களில் மட்டுமே த்ரிஷா நடித்துள்ளார். இப்போது முதன் முறையாக ஒரு கன்னடப் படத்தில் நடிக்க இருக்கிறார். தெலுங்கில் மாபெரும் வெற்றி பெற்ற 'தூக்குடு' படத்தின் கன்னடமீளுருவாக்கப் படத்தில் புனித் ராஜ்குமார் நயகனாகவும்,அவருக்கு ஜோடியாக த்ரிஷாவும் நடிக்கவுள்ளனர்.

இந்தப்படத்தில் நடிக்க த்ரிஷா ஒரு கோடி ருபா சம்பளம் வாங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.இதேவேளை, இந்தப் படத்தில் நடிக்க த்ரிஷாவுக்கு 25லட்சம் தான் சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது. கன்னடப் படங் களில் நடிக்க அதிகளவு சம்பளம் வழங்கப்படுவதில்லை என்றும் சொல்லப்படுகிறது.அடுத்த மாதம் இந்தப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகி , பெப்ரவரியில்முடிவடைய உள்ளது.

## வாய்ப்பு வேட்டை



மலையாளத்தில் ப்ரித்விராஜ்க்கு ஜோடி போட விருக்கி றாராம் ஜனனி அய்யர்.பாலா இயக்கிய 'அவன் இவன்' படத்தில் விஷாலுக்கு ஜோடியாக நடித்தவர் ஜனனி அய்யர்.

அதன்பிறகு ஸ்ரீகாந்துடன் 'பாகன்' என்ற படத்தில் நடித்தார். ஆனால் இவர் நடித்த இரண்டு படங்களுமே ஓடாததால் ராசியில்லாத நடிகை என்று திரையுலக இயக்குநர்கள் ஜனனியை ஓரங்கட்டினார்.

தற்போது மலையாளத்தில் இருந்து சில வாய்ப்புகள் வந்ததால், கேரளாவில் முகாமிட்டு தீவிர முயற்சியில் இறங் கியுள்ளார்.

இப்படி அவர் எடுத்த அதிரடி முயற்சியின் காரணமாக தற்போது ப்ருதிவிராஜ் நடிக்கும் 'செவன்த் டே' என்ற படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்கிறாராம்.

இப்படத்தில் தலைமைப் பொலிஸ் அதிகாரி ஒருவரின் கொலை குற்றத்தைக் கண்டுபிடிக்கும் வேடத்தில் ப்ருதிவிராஜ் நடிப்பதால், மறைமுகமாக ப்ருதிவிராஜ்க்கு உதவி செய்யும் முக்கியமான கதாபாத்தி ரத்தில் நடிக்கிறாராம் ஜனனி அய்யர்.

இந்தப் படத்துக்கு பிறகு மலையாளத் தில் தனக்கு ஒரு நிலையான கதாநாயகி அந்தஸ்து கிடைக்கும் என்ற நம்பிக்கை யில் மேலும் அங் குள்ள முன்னணி நடிகர் களுடன் இணைந்து நடிப்பதற் கான பட வேட்டை யையும் முடுக்கி விட்டுள் ளாராம்.



## "கதிர்வேலன் காதல்" எப்போது?

பரபரப்பான இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது இது கதிர்வேலன் காதல் திரைப்படம். ரெட்ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் சார்பில் உதயநி தி ஸ்டாலின் தயாரித்துள்ள படம் 'இது கதிர்வேலன் காதல்'.

ஒரு கல் ஒரு கண்ணாடி படத்துக்குப் பிறகு உதயநிதி ஸ்டாலின் நாயகனாக நடித்துள்ள இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக நயன்தாரா நடித்திருக்கிறார்.

ஹாரிஸ் ஜெயராஜ் இசை அமைத்திருக் கிறார்.சுந்தரபாண்டியன் படத்தைத் தொடர்ந்து எஸ்.ஆர்.பிரபாகரன் இயக்கியுள்ள இந்தப்படத்தின் ஒரு பாடல் காட்சி தவிர மற்ற படப்பிடிப்புகள் எல்லாம் முடி வடைந்து தற்போது படத்தின்பின்னணி வேலைகளும் முடிந்து விட்டன. மீதமுள்ள ஒரு பாடல் காட்சியின் படப்பிடிப்பு தற்போது நடந்து வருகிறது. படத்தின் இசை மற்றும் படத்தின் வெளியீடு என்பன எப்போது நடைபெறும் என்பதை படக்குழுவினர் விரைவில் அறிவிக்க உள்ளனர்.

## ்குநர் ஆகிறார்!

ிராஜ், ஜெயசூர்யா படங்களில் பாடல்கள் பாடியிருக்கிறார்.'
ுத கிடைக்கவே இதைப் படமாக்கினால் என்ன என்கிற உந்துதலில்
ுகளிலும் தன் அடையாளத்தைப் பதித்திருக்கிறார்.
டைத் திறந்து வீடுவார்கள் சிறகடித்து வெளியேறலாம் என்று
நோய்தான் இப்படத்தின் மைய முடிச்சு.
வருக்குத்தான் இருக்கும். நான் சந்தித்த நண்பரின் வாழ்வில் நடந்த

# ஆணுக்கு எதிரானதா பெண்ணியம்?

**(எம் ஆர் ஶோபனாவின் ஆணுக்கு எதிரானதா பெண்ணியம் கட்டுரையின் இரண்டாம் பகுதி)**

மறுபுறம் அப்பாவின் 'அரவணைப்பில்' வளர்ந்து, அண்ணனின் 'பாசத்தில்' நனைந்து, கணவனின் 'காதலில்' திளைத்து வாழும் பெண்கள் பெண்ணியமே தேவையில்லை என்கின்றனர். இத்தகைய பெண்கள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தினர். இவர்கள் அனைவரும் ஆண்கள் 'கொடுத்த' சுதந்திரத்தைக் கொண்டு நன்றியோடு வாழ்பவர்கள். இவர்கள் வாழ்க்கையைச் சிக்கலாக்கிக்கொள்ள விரும்பாதவர்கள். ஆனால் 'அரவணைக்கும்' அப்பாவும், 'பாசம்' பொழியும் சகோதரனும், 'காதல்' கணவனும் எடுத்துக் கொடுக்கப் பெண்ணுரிமை என்பதும் சுதந்திரம் என்பதும் சமத்துவம் என்பதும் சுக்கோ மிளகோ இல்லை என்கிற புரிதலில் முகிழ்ப்பதுதான் பெண்ணியம்.

ஓர் ஆண் சினிமா பார்க்க இரவு நேரக் காட்சிக்குத் தன் நண்பர்களுடன் செல்ல முடியும். ஆனால் இன்றைய சூழலில் ஒரு பெண்ணால் அது முடியாது. ஓர் இளைஞன் தன் நண்பர்களுடன் வெளியூர் சென்று எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் தங்கிவிட்டு வரலாம். ஆனால், ஓர் இளம் பெண் அவ்வாறு செய்ய முடியாது. வேலை நிமித்தமாகவோ, கல்லூரிச் சுற்றுலாவுக்கோ சென்றாலும்கூட அதற்கான பயண அட்டவணை, அவள் உடன் செல்பவர்கள் குறித்த விவரங்கள் ஆகியவை அவளின் பெற்றோர் கையில் இருக்கும். இது என்ன சின்ன விஷயம் தானே என்று புறக்கணித்துவிடலாம். ஆனால் இதில் நுட்பமான உடல் அரசியல் அடங்கியுள்ளது.



ஒரு பெண்ணின் உடலானது குடிப்பெருமை, குலப்பெருமை, சமயம், சமுதாயம் ஆகியவற்றின் பெருமை அனைத்தையும் சுமந்து திரியும் தெய்வீக வஸ்து. அப்படி எல்லாம் எந்தக் கடமையும் ஆணுக்கு விதிக்கப்படவில்லை, அல்லது அந்த விதிக்கு விசுவாசமாக ஒரு ஆண் இருக்கவும் தேவை இல்லை.

சொத்துடைமைச் சமுதாயம் தோன்றிய காலத்தில் 'கற்பு எனும் திண்மை' முதன் முதலாக ஆண் வாரிசு முறையை உத்திரவாதப் படுத்த உருவாகி நிலைபெற்றதாகச் சமூக அறிவியல் தெரிவிக்கிறது. தனக்குப் பிறகு தன் சொத்துக்கள் யாருக்குப் போய்ச் சேருமோ அவர்கள் தன் குழந்தைகளாக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்துகொள்ளவே பெண்ணுக்குக் கற்பொழுக்கம் வலியுறுத்தப் பட்டது. அதோடு இன்னொரு விஷயமும் நடந்தது.


---

# மெலிதான உடலில் ஆசைப்படும் பெண்களிற்கு

**புதுயுகத்தைத் தேடி......**

**மகளிர் பக்கம்**

தொகுப்பு: ஸ்ருதி



உடல்மெலிய ஆக வேண்டுமா? அதிகாலையில் விழித்து பழகுங்கள். அப்படி அதிகாலையில் விழித்து விடுபவர்கள் மெலிவுடன் ஆவதுடன் மகிழ்ச்சியாகவும், நல்ல உடல்நலத்துடன் இருப்பார் கள் என்று லண்டன் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் கூறு கிறார்கள்.

லண்டனில் உள்ள பிரபல பல்கலைக்கழகம் ரோஹாம்டன் பல்கலைக்கழகம்.

இதில் ஆராய்ச்சிப் பிரிவில் உள்ள பேராசிரியர்கள், அதிகாலையில் படுக்கையில் இருந்து எழுபவர்களை பற்றி ஒரு ஆய்வு மேற்கொண்டனர். அதில், காலையில் வெகு நேரம் கழித்து எழுபவர்களை விட அதிகாலையில் எழுபவர்கள் சுறுசுறுப்பாக இயங்குவதையும் மனதில் உற்சாகத்துடன் காணப்படுவதையும் உணர்ந்தனர்.

ஆராய்ச்சியாளர்கள் ஆய்வில் 1068 பேரிடம் அவர்களின் தூக்கம், விழிப்பு பற்றி பல்வேறு கேள்விகளை எழுப்பி பதில் பெற்றனர். அவர்களில் ஒரு பிரிவினர் சராசரியாக அதிகாலை 6.58 மணிக்குள் விழித்து விடுபவர்கள். இன்னொரு பிரிவினர் 8.54 மணிக்கு பின் எழுபவர்கள். இவர்களின் உடல் நலம், செயல்பாடுகள், தோற்றம் ஆகியவற்றை ஒப்பிட்டுப்பார்த்தனர்.

அதில் அதிகாலையில் விழித்து விடுபவர்கள் பெரும்பாலும் மெலிதாக காட்சியளித்தனர். அவர்களிடம் காலையில் வேலையை துவங்கும் போது காணப்படும் உற்சாகம் வெகு நேரம் நீடித்தது. அதே சமயம், தாமதமாக ஆக எழுபவர்களிடம் உற்சாகம் குறைந்து காணப்பட்டது.

அதே போல், இரவில் அதிகமாக டி.வி. பார்ப்பவர்களே காலையில் தாமதமாக விழிக்கிறார்கள் என்பதும், அவர்களில் பலரும் காலை உணவை தவிர்த்து விடுகின்றனர் என்றும் ஆய்வில் கண்டறியப்பட்டது

# ஈ புலியும்

பகுதி 2

பிரமன்



பதுமன் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட விடயம் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அது மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டடிருந்தது. ஏனெனில் முன்னாள் போராளியான - அதுவும் முக்கியமான தளபதியாக இருந்த - ஒருவரை எந்த விதக் குற்றங்களும் அற்றவர் என்று கூறி விடுவிப்பதை யாரும் நம்பப் போவதில்லை என்று அரசுக்கும் தெரியும். ஆனால் பதுமனை விடுவித்தால் மட்டுமே அவர் தலைமையில் புலிகள் உருவாகின்றார்கள் என்று கதைவிட முடியும்.

ஒரு காலத்தில் கிழக்கு மாகாண தளபதி கருணாவும் பதுமனும் மிக நெருக்கமானவர்களாவே இருந்தார்கள். ஆயினும் இடைப்பட்ட காலத்தில் கருணாவுக்கும் பதுமனுக்கும் இடையில் அதிகாரப் போட்டி எழுந்ததால் திருமலை அணியும் மட்டு அணியும் எதிரெதிர் முனைகளிலேயே செயற்பட்டதாக முன்னாள் போராளி ஒருவர் கூறுகிறார். குறிப்பாக திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட சில தாக்குதல்களுக்கு தமது அணியை அனுப்ப கருணா மறுத்துவிட்டதாகவும் அதற்குப் பதிலடியாக மட்டக்களப்புத் தாக்குதல்களுக்கு பதுமனும் படையணிகளை அனுப்பமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு ஆட்சியில் இருந்தபோது புலிகளைப் பிரித்தாளும் தந்திரத்தில் சிக்கி கருணா கிழக்கு பிரதேசவாதக் கொள்கையை முன்னெடுத்தார். இதற்கு எந்தவித எதிர்ப்பையும் பதுமன் வெளியிடவில்லை. இவ்வாறு கிழக்குப் பிரதேச வாத விடயத்தில் பதுமன் திடீரென பம்மியதால் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அவர் மீது சந்தேகம் ஏற்பட்டது. உடனடியாக அவரையும் எழிலனையும் வன்னிக்கு அழைத்தார் பிரபாகரன். சில விசாரணைகளின் பின்னர் எழிலன் மீண்டும் திருகோணமலைக்குச் செல்ல பதுமன் மட்டும் "காற்றுக்குறைக்கப்பட்டு" வன்னியிலேயே நிற்குமாறு பணிக்கப்பட்டார்.

ஒரு தளபதியாக இருந்துவிட்டு எந்தவித அதிகாரங்களும் அற்று சும்மா இருப்பது என்பதைவிட மிகப்பெரும் தண்டனை வேறு எதுவும் இருக்கமுடியாது. ஆனாலும் பதுமன் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் வன்னியிலேயே வாழ்ந்து வந்தார். இயக்கச் செயற்பாடுகளில் அதிக அக்கறை காட்டாத ஒருவராகவே கடைசிவரை பதுமனைக் காண முடிந்தது. இறுதிக்கட்டப் போரில் கூட மற்றய தளபதிகள் களமுனையில் நிற்க பதுமன் முள்ளிவாய்க்கால்பிரதேசத்தை அண்டிய பகுதியிலேயே நின்றதாக நேரில் கண்டவர்கள் சொல்கின்றார்கள்.

ஆனாலும் போர் முடிவுக்கு வந்தபின்னர் வேறு ஒரு கதை பரவலாக் அடிபட்டது.

*போரின் இறுதிக்கட்டத்தில் புலிகளின் தலைவர், கடற்புலிகளின் தளபதி சூசை, புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மான், தளபதி பானு ஆகியோர் முள்ளிவாய்க்காலில் கடைசிவரை நிற்பது எனவும், பதுமன் தலைமையிலான ஒரு தொகுதி போராளிகள் கடல் வழியாக தப்பிப்பது எனவும் திட்டமிடப்பட்டது.*

*அதைச் செயலாக்க மே 16 ஆம் திகதி இரவு நந்திக்கடல் ஓரமாக பெரும் போர் வெடித்தது. தம்மிடம் இருந்து கடைசிக்கட்ட ஆயுதங்கள் ஆளணி என்பவற்றை புலிகள் இதன்போது பயன்படுத்தினார்கள். வெடிமருந்துகளோடு சீறிச்சென்ற கரும்புலிகளின் படகுகள் கடற்படையினரின் சுற்றிவளைப்பை உடைத்தெறிந்து பாதையேற்படுத்திக் கொடுக்க பதுமன் தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் ஊடறுத்துக்கொண்டு கடல்வழியாகத் தப்பிச் சென்றார்கள்.*

இதுவே அந்தக் கதை. 16 ஆம் திகதி இரவு அதுவரை இல்லாத அளவு பெரும் போர் ஒன்று வெடித்தது உண்மைதான். கடைசிவரை அங்கிருந்து பின்னர் உயிரோடு மீண்டவர்கள் காதுசெவிடாகும்படி எழுந்த குண்டுச்சத்தங்களைக் கேட்டதாகச் சொல்கின்றார்கள்.

ஆனால், மூன்று அடுக்குகளில் முற்றுகையிட்டிருந்த இலங்கைக் கடற்படைக் கலங்களை உடைத்தெறிந்துகொண்டு புலிகளின் அணி ஒன்று தப்பிச் சென்றதைத்தான் எவரும் உறுதி செய்ய முடியவில்லை. ஆனாலும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலிகள் இன்னமும் செயற்திறனோடு இயங்கும் வகையில் அதிநவீன ஆயுதங்களோடு இறுதிப்போர் நடைபெற்ற இடத்தில் இருந்து வெளியேறி பத்திரமாக இருப்பதாக நம்புபவர்களும் இருக்கிறார்கள். குறிப்பாக புலம் பெயர்ந்தோர் மத்தியில் இந்தக் கதை மிக ஆழமாகவே வேரூன்றி இருக்கிறது. ஏனெனில் தங்களுடைய மீட்பர்களாக அவர்கள் மனதில் வரித்திருந்த புலிகளின் வீழ்ச்சியை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. ஆகவே மீண்டும் புலிகளின் உயிர்ப்பை உறுதி செய்யும் கதையாடல்களை அவர்கள் விரும்புகிறார்கள். ஏதோ ஒரு காலத்தில் அற்புதம் ஒன்றின் மூலம் புலிகளின் இரண்டாம் பிரசன்னம் வலுவாக நிகழும் என்று எண்ணுகிறார்கள். அந்த நம்பிக்கைதான் இன்னமும் ஈழம் நோக்கிய செயல்களில் அவர்களை உந்தித்தள்ளிக்கொண்டிருக்கிறது. போர் முடிந்த காலத்தில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த மக்கள் தங்கள் கோபப்பார்வையை முதலில் புலிகள் மீதே காட்டினார்கள்.

"உவங்களாலதானே எல்லாம்" என்ற புலம்பலே நலன்புரி நிலை யங்களைச் சென்றடையும் வரை வன்னி மக்களின் வாயில் இருந்து வெளிவந்தது. சிலர் மிகக் கடுமையாக புலிகள் பற்றிய எதிர்மறையான விமர்சனங்களை தம்மைச் சந்திக்க வந்தவர்களிடம் பரப்பத் தொடங்கினார்கள். இந்தப் பரப்பு ரையின் இறுதிப்போரில் நடந்த தைவிடவும் கூட்டிக் குறைத்து தங்களுடைய கற்பனையையும் சேர்த்து உண்மையிலேயே புலி களைப் பயங்கரவாதிகளைப் போலவே சித்தரித்து இந்தக் கதைகள் எழுந்தன. ஒருவகையில் அதிலும் தவறு சொல்லமுடியாது.

அடிவாங்கிய வலியின் வேதனையை தங்களுடைய பிள்ளைகள் மீதுதானே அவர்கள் காட்டமுடியும்? ஏதோ புலிகள் தமது சுய நலத்துக்காகவும் சொகுசுவாழ்வுக்காகவுமே போரிட்டார்கள் என்பது போலவே இந்த எதிர்க்கதையாடல்கள் சிருஷ்டிக்கப்பட்டன. இந்தக் கதையாடல்களின் உருவாக்கத்தின் பின்னணியில் படைப்புலனாய்வுத் துறையின் கரங்கள் பலமாக இருந்தன. தொடர்ந்து உயிரோடு வாழ வேண்டுமானால் புலிகளைப் பற்றிய அவதூறுகளைப் பரப்ப வேண்டும் என்று அவர்கள் பலவந்தப் படுத்தப்பட்டார்கள். எனவே வேறு வழியின்றி தங்களைக் காத்துக் கொள்வதற்காக மனதுக்கு ஒப்பாவிடினும் புலிகளைப் பற்றிய தவறான கருத்துக்களை வெளியிலிருந்து தம்மைப் பார்க்க வரும் நெருங்கிய உறவுகளிடம் சொல்லிச் சொல்லி மாய்ந்தார்கள். "அவர் ஒருக்காலும் பொய் சொல்ல மாட்டார்" என்ற உறவுகளின் நம்பிக்கை இந்தக்கதைகளை ஆரம்பத்தில் நம்ப வைத்தன. ஆனால், போகப் போகத்தான் புலிகளின் அருமை எல்லோருக்கும் புரிந்தது. திறந்த வெளிச் சிறைச்சாலையாக நலன்புரி நிலையங்கள் மாற்றப்பட்டு, அங்கிருந்த மக்கள் விலங்குகளைப் போல நடத்தப்பட்ட போதுதான் விடுதலையின் பெறுமதி அவர்களுக்குப் புரிந்தது. அதன் பின்னர் காணாமல் போதல்களும் விசாரணைகளும், இளம்பெண்கள் மீதான காமவேட்டைகளும் புலிகளின் அவசியத்தை தங்களுக்கான காவற் தெய்வங்களின் கட்டாய இருப்பை நலன்புரி நிலைய மக்களிடமும் ஏனையோரிடத்திலும் உண்டுபண்ணின. மெல்ல மெல்ல புலிகளைப் பற்றிய வசைபாடல்கள் மறைந்து மீண்டும் புலிகளின் வருகைக்கான எதிர்பார்ப்பு உச்சாடனங்கள் ஒவ்வொருவரின் உதடுகளில் இருந்தும் பிறக்கத் தொடங்கின.

இவ்வாறு புலம் பெயர்ந்தவர்களும், தாயக மக்களும் எப்படி புலிகளின் மீள்வருகைக்காக காத்திருக்கத் தொடங்கினார்களோ அதேபோன்று புலிகளை ஒழித்ததாகக் கூறிக்கொண்ட அரசும் மீண்டும் புலிகள் உருவெடுக்க மாட்டார்களா என்று ஏங்கத் தொடங்கியது. ஏனெனில் அந்தளவுக்கு சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் அது பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தது. இந்த நெருக்கடிகளில் இருந்து தப்பிப்பதற்கான ஒரே ஒரு உபாயம் புலிகளின் மீளுயிர்ப்பு மட்டுமே. புலிகளை மீளுயிர்ப்பு செய்வதன் மூலம் ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்த முடியும் என்று ஆளும்தரப்பு கணக்குப்போட்டது. இதனால்தான் புலிகளின் மீளுயிர்ப்புக்கான முதலாவது முயற்சி மட்டக்களப்பு, அம்பாறை எல்லைகளை ஒட்டியிருந்த காட்டுப்பகுதியில் அரச தரப்பால் அரங்கேற்றப்பட்டது. அந்த முயற்சி என்ன?, புலிகளின் மீள்வருகை அதன் மூலம் சாத்தியமானதா?...

(அடுத்தவாரம்)

உண்மைச்சம்பவம் ■ ஜெகன்

# புரட்டிப்போட்ட பூகம்பம்

அமெரிக்காவில் உள்ள செழிப்பும், வனப்பு மிக்க நகரங்களில் ஒன்றுதான் சான்பிரான் சிஸ்கோ. அதே சமயத்தில், உலெகங்கிலும் இருந்து அதிகளவில் உல்லாசப் பயணிகள் வருகை தரும் உல்லாசபுரியாகவும் அது பெயர் பெற்று விளங்கியது. அங்குள்ள 'சைனா ரவுன்' எனும் பகுதியில் சீனத் தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்தவர்களுடன் ஒரே சமூகமாக வசித்தார்கள்.

கார்லோ மற்றும் பெட்ரோ எனும் இரு உல்லாசப் பயணிகள் 'சைனாரவுன்' பகுதியிலமைந்துள்ள இரவு விடுதியொன்றில் இராப்பொழுதை உல்லாசமாகக் களித்து விட்டு அதிகாலையில் அவர்கள் தங்கியிருந்த விடுதிக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். இரவு அருந்திய மதுவின் போதை முறிவடைந்தமையால் இருவரும் மிகவும் சோர்வடைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

காலைக் கதிரவன் தன் பொன்னிறமான ஒளிக் கதிர்களை சான்பிரான்சிஸ்கோ நகரத்தின் மீது



எங்கும் பரப்பிக் கொண்டிருந்தான். நகரம் களை கட்டத் தொடங்கியது. நண்பர்களான கார்லோ, பெட்ரோ இருவரும் தாம் களித்த இரவுப் பொழுதினைப் பற்றிக் கேளிக்கை யாகக் கதைத்தபடி மெதுவாக நடைபயின்று கொண் டிருந்தனர்.

அச்சமயத்தில், எதிர்பாராத விதத்தில் திடீரெனக் கார்லோ தூக்கி வீசப்பட்டான். அவனருகில் வந்து கொண்டிருந்த பெட்ரோவும் நில அதிர்வின் காரணமாக நிலையிழந்து தரையில் வீழ்ந்து புரண்டான்.

வானுயர்ந்த கட்டடங்கள் யாவும் ஒருக்களித்துச் சாய்ந்தன. அதன் காரணமாக உடைந்த கற்களும், கண்ணாடிகளின் சிதறல்களும் மேலிருந்து தரையை நோக்கி மழை போல் சொரிந்து வீழ்ந்தன.

காலைப் பொழுதில் எவருமே எதிர்பார்த்திராத இந்த அனர்த்தத்தினால் எங்கும் ஒரே அல்லோலகல்லோலம். உயிரைக் காப்பாற்றுவதற்காக மக்கள் திக்குத் திசை தெரியாது ஓடினார்கள். வீதியால் ஓடிக்கொண்டிருந்த ஒருவன் பீதியில் "ஐயோ பூகம்பம்" என அலறியவாறு ஓடினான்.

மக்கள் உடைந்து நொறுங்கி விழும் தமது வீடுகளில் இருந்து உயிரைக்காப்பாற்றும் எண்ணத்தில் தப்பி ஓடிக்கொண்டே இருந்தார்கள். அந்த வேளையில் அவர்கள் எழுப்பிய அவலக்குரல்களும், ஓலங்களும் நகரெங்கும் எதிரொலித்தன. உயிரைக்காக்க ஓடுபவர்களில் பெரும்பாலானோர் இரவு உடையுடனேயே இருந்தார்கள். ஒருசிலர் அரைநிர்வாண நிலையிலும் இருந்தனர்.

நில அதிர்வு ஒரு சில நிமிடங்களே நீடித்தது. செய்வதறியாது திகைப்புற்ற நிலையில் இருந்த கார்லோவும், பெட்ரோவும் சுற்றிவரப் பார்த்தார்கள். அங்குள்ள உயரமான கட்டடங்கள் மற்றும் தெருக்கள் யாவும் தரைமட்டமாகிக் குவியல் குவியல்களாகத் தென்பட்டன. எத்தகைய அதிர்ச்சிகளையும் தாங்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்த நகர மண்டபம் கூட சிதைவடைந்து அதன் உச்சிக் கோபுரமும் இடிந்த நிலையில் எலும்புக் கூடு போன்று காட்சியளித்தது.

சான்பிரான்சிஸ்கோவில் நிரந்தரமாக வாழும் மக்களுக்குப் பூகம்பம் ஒன்றும் புதிய விடயமல்ல. புவியோட்டின் மேற்பரப்பில் உள்ள வெடிப்பு அமைந்துள்ள இடத்திலேயே சான்பிரான்சிஸ்கோ அமைந்துள்ளது. அதன் காரணமாக புவியோடுகள் இரண்டு ஒன்றொடொன்று உராய்கின்ற வேளைகளில் இவ்வாறாகப் பூமியதிர்வுகள் ஏற்படுவது அங்கு சகஜம்.

கார்லோவும், பெட்ரோவும் விரைந்து தமது விடுதிக்குத் திரும்பினார்கள். ஆனால் அங்கே கண்ட காட்சி அவர்கள் கண்களையே அவர்களால் நம்பமுடியாதிருந்தது. வேறிடத்தைச் சேர்ந்த உல்லாசப் பயணிகளான அவர்கள் இருவருக்கும் அது உண்மையில் அச்சமூட்டுவதாகவே இருந்தது. விடுதியில் தங்கியிருந்த சகல விருந்தினர்களும் நொருங்கி வீழ்ந்த கட்டட இடிபாடுகளில் சிக்கி நசிந்து இறந்து கிடந்தனர்.

அபாயம் அத்துடன் நின்றுவிடவில்லை. கட்டடங்களில் இருந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படும் எரிவாயுச் சிலிண்டர்களின் உடைந்த குழாய்களில் இருந்து வெளியேறிய வாயு ஆகாயத்தில் காற்றுடன் கலந்தது. அதனையடுத்து எங்கும் தீ பரவத் தொடங்கியது. வீசிய காற்றின் வேகத்தால், விரைவில் தெருக்களெங்கும் பெருந்தீ பரவிக் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது.

நீர்விநியோகக் குழாய்கள் முற்றிலுமாகச் சேதமுற்றிருந்தன. அதனால் குடிதண்ணீர் விநியோகம் அறவே இல்லாமற் போய் விட்டது. தீயணைக்கும் படையினராலும், தீயை அணைக்க முடியாமற் போய் விட்டது. விடுதி உரிமையாளர்கள் தீயை அணைப்பதற்குத் தண்ணீர் இன்மையால் தம் விடுதிகளில் கைவசம் இருந்த பழரசப்பானங்களை தீச்சுவாலைக்களின் மீது ஊற்றினார்கள்.

எப்படியிருந்த போதிலும், தீயினைக் கட்டுப்படுத்த எவராலும் முடியவில்லை. அவர்களின் முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. தீ ஆவேசமாகப் பரவியது. இறுதியில் தீ தானே எல்லாவற்றையும் எரித்து முடித்தபின்அணைந்து ஓய்ந்தது.

இதில் மூவாயிரத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். ஆயிரத்திற்கும் அதிகமானோர் கடும் எரிகாயங்களுக்குள்ளாகினர். இரண்டு லட்சத்துக்கும் அதிகமானோர் வீடுவாசல்களை இழந்து நடுவீதிக்கு வர வேண்டியிருந்தது. சில கர்ப்பிணித்தாய்மார்கள் புற்றரையில் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பரிதாப நிலைக்கும் தள்ளப் பட்டனர்.

எனினும், நகரத்தின் மீள்கட்டமைப்பு, புனர் நிர்மாண வேலைகள் யாவும் உடனடியாகவே காலதாமதமின்றி ஆரம்பிக்கப்பட்டன. இடைநிறுத்தாது தொடரப்பட்ட ஆக்கப் பணிகளின் காரணமாக நான்கு வருடங் களுக்குள்ளாகவே பூகம்பத்தினால் அழிவுற்ற நகரம் என்பதற்கான எந்த ஒரு தடயமுமே இல்லாதவாறு புதுப்பொலிவுடன் சான் பிரான்சிஸ்கோ கம்பீரமாக மீண்டும் எழுந்தது.

இருந்த போதிலும் அதன் பின்னரும் கூட பல தடவைகள் பூமியதிர்வுகள் சான்பிரான் சிஸ்கோவைத் தாக்கின. 1997 இல் அவ்விதம் ஏற்பட்ட பூகம்பத்தில் 81 பேர் மட்டுமே காவு கொள்ளப்பட்டனர்.

தற்பொழுது எவ்வித அதிர்வுகளை தாங்கக் கூடிய நவீன தொழில் நுட்பங்களுடன் தீ பரவலைத் தவிர்க்கும் வகையில் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. எனவே இனி மேலும் ஒரு பெரும் பூகம்பம் நிகழ்ந்தாலும் கூட சான்பிரான்சிஸ்கோ நகரத்தை புரட்டிப்போட முடியாது. அந்தளவுக்கு அழிவில் இருந்து பாடம் பெற்று சாகா வரம் பெற்ற நகராக அது எழுந்து நிற்கிறது.



# இருளின் கதவைத் திறந்தவன்

32

● ஒளண்யன்

**போ**ரும், ஊடகங்களின் பங்கும் என்ற தலைப்பில் 'புலனாய்வுஇணையத்தின் போர்வாள்' யூலியன் சிறப்புரையாற்ற வேண்டுமென சுவீடனைச் சேர்ந்த ஒரு தேவலாயக் குழுமத்தின் ( Sweden association of Christian social democrats) செயலாளரும், ஊடகத் தொடர்பாளாருமான அன்னா (anna ardin)' என்பவர் தொலைபேசி அழைப்பினூடாக யூலியனை வேண்டினார். தொடர்ச்சியாக விக்கிலீக்ஸ் பணிகளில் மூழ்கியிருந்த யூலியன் இந்தக் கருத்தரங்கில் உரையாற்ற சம்மதித்த போதும், ஒரு நிபந்தனையை விதித்தான். அடுத்தடுத்து அமெரிக்காவுக்கு எதிராக சமகாலக் கொலைகள் காணொளி மற்றும் ஆப்கான் போர்க் குறிப்புகள் வெளியானதாலுண்டான அதிர்வுகள் எங்கும் வியாபித்திருந்தது.

இதனால் யூலியனின் உயிர் எந்தக்கணமும் பறிக்கப்பட்டுவிடக்கூடிய ஆபத்திருந்தது. எனவே சுவீடனில் தான் தங்குவதற்கு ரகசியமான இடம் வேண்டும் என்ற வேண்டுகோள் யூலியன் தரப்பிலிருந்து விடுக்கப்பட்டது.

ஊடகங்களின் பிரதானதீனியாக யூலியன் இருந்த நேரம் என்பதால், அவன் என்ன கேட்டாலும் செய்து கொடுத்து தங்கள் நிகழ்ச்சிகளில் யூலியனைக் கலந்துகொள்ள வைப்பதற்கு பலரும் 'கியூ'வில் நின்றிருந்தனர்.எனவே யூலியனின் நிபந்தனைக்கு சம்மதிப்பதைத் தவிர அன்னாவுக்கு வேறுவழி தெரியவில்லை. தனது வீட்டிலேயே தங்கிக் கொள்ளலாம் எனவும், நிகழ்ச்சி நாள்களில் தனக்கு வேறொரு முக்கிய வேலை இருப்பதால், தான் வெளியூர் சென்றுவிட்டு, நிகழ்ச்சி நடக்கும் தினத்தன்றே திரும்புவதால் தனக்கு எந்த வித தொந்திரவும் இல்லை என்றும் அன்னா தயங்காமல் சொல்ல, யூலியனும் சம்மதித்தான்.

சுவீடன் சென்றதும் ஒரு இரகசியப் பயணத்தின் முடிவில் அன்னாவின் வீட்டுக்குச் சென்று யூலியன் தங்கிக் கொண்டான். எனினும் அன்னாவின் வெளியூர்ப் பயணம் எதிர்பார்த்ததை விடவும் முன்னரே முடிந்ததால் அன்றிரவே வீட்டுக்குத் திரும்பிவிட்டார்.

யூலியன் -அன்னா சந்திப்பு அன்றைய இரவுணவின் போது நிகழ்ந்தது. யூலியன் வாழ்க்கையில் தோற்றிருந்தாலும் கன்னி ராசிக்காரன். தன் உடலெங்கும் வசியத்தைப் பூசிக்கொண்டிருப்பவன். எப்போதுமே நாடோடி போன்று அலைந்துகொண்டிருந்தாலும் அவனை நாடி வரும் பெண்களுக்கு மட்டும் எப்போதுமே பஞ்சமிருந்ததில்லை. பார்த்தவுடனேயே எல்லோரையும் ஈர்த்துவிடக்கூடிய உடல்வாகு கொண்ட யூலியன், எடுத்த எடுப்பிலேயே அன்னாவைக் கவிழ்த்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. அன்னாவும் அழகிதான். 32 வயதானாலும் பார்ப்பதற்கு 20 வயதுப் பெண் போலவே அன்னாவின் தோற்றம். உலகமே அண்ணார்ந்து பாக்கும் ஒரு நபர், இணையத்தின் புரட்சி நாயகன், அட்டகாசமான தோற்றமும், தொழிநுட்ப அறிவும் கொண்ட யூலியனுடன் தனியே தங்குவதற்கு கிடைத்த வாய்ப்பைத் தவறவிடுவதற்கு அன்னா தயாராகவில்லை. எனவே அன்றிரவு யூலியன் என்ற காந்தம், அன்னா என்ற இரும்புத்துண்டை ஈர்த்துக்கொண்டது.

செல்லுமிடமெல்லாம் யூலியனின் வலையில் சிக்குவதற்காக பெண்கள் தாங்களே கையில் வலையுடன் காத்திருந்த தருணத்தில், யூலியன் அன்னாவை நோக்க, அன்னா யூலியனை நோக்க........மேற்கத்தியக் கலாசாரத்தின் சம்பிரதாய வைபவங்கள் இருமன விருப்பத்துடன் இனிதே அரங்கேறின. எனினும் அதனிடையில் யூலியன் பயன்படுத்திய ஆணுறை கிழிந்து போனதும், அதனால் முதலில் அன்னா சற்றுத் தயங்கினாலும் யூலியனின் அணைப்பில் அதனைப் பொருட்படுத்தவில்லை. மறுநாள் காலை இருவருக்கும் நன்றாகவே புலர்ந்தது. அத்துடன் கருத்தரங்கில் உரையாற்றும் நிகழ்ச்சியும் நன்றாகவே நடந்தது. நிகழ்ச்சியின் போது எல்லாரும் யூலியனைப் பார்க்க, யூலியன் மட்டும் முதல் வரிசையில் இருந்த ஒரு தேவதையையே வைத்தகண் வாங்காமல் நோக்கிக் கொண்டிருந்தான். அப்போது அது தனக்காக விரிக்கப்பட்ட சோபியா என்ற இரண்டாவது வலை என்பது யூலியனுக்கு தெரிந்திருக்கவில்லை.

(திரைகள் இன்னும் திறக்கும்)

## ஹாய்! செல்லப்பா!!

### எழுதுவது......



சாப்பாட்டிடத்திற்குச் சென்றேன். இரண்டு பேர் சேர்ந்தால், அங்கு யாரையாவது பற்றிக் கதைத்துக் கொண்டு சாப்பிடுவதுதான் வழக்கம். கலந்துரையாடலைக் காது கொடுத்துக் கேட்டேன். அவர்களின் கலந்துரையாடலில், அவர்கள் வழமைபோல அவ்விடத்தில் சமூகமளிக்காத ஒருவரைப் பற்றியதாகவே இருந்தது. மெதுவாகக் காது கொடுத்துக் கேட்டேன். அவர் ஒரு நல்ல மனுசன் என்ற வார்த்தைகள் மட்டும் என் காதில் விழுந்தன. அப்போது தெரிந்தது அவர்கள் நிட்சயமாக என்னைப் பற்றிக் கதைக்கவில்லையென. அவ்வளவில் திருப்திதான்.

ஒருவர் மற்றவரிடம் தன்னைப்பற்றிப் புகழ்ந்து பேசுவது, புழுகுதல் - Boasting - எனப்படும். இருவர் சேர்ந்து அங்கு இல்லாத ஒருவரைப்பற்றிப் பேசும்போது அது Gossip - அவதூறு எனப்படும் என பேராசிரியர் வித்தியானந்தன் அடிக்கடி கூறுவார். இரண்டும் அழகல்ல என்றும் அவரே சொல்லுவார். ஆனாலும் பின்னையதை விட முன்னையது ஓரளவு பரவாயில்லை. பின்னையது- gossip- என்பது படுமோசமான செயற்பாடு என்பார்.

# உருப்படியான யோசனைகளை வழங்கக் கூடியவர்கள் யார்?

**மே**ம்பட்டுக்கான யோசனைகளைக் கூறிடும் (பரிசுகள் பெறும்) வாய்ப்புத் தங்களிடம் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டும் தான் என்று தொழில் வர்த்தக நிலையங்கள் சட்டதிட்டம் போடக்கூடாது. வாடிக்கையாளர்களிடமிருந்து பொருள்கள் மற்றும் சேவைகள் குறித்து மேம்பாட்டுக்கான கருத்துக்களை வரவேற்க வேண்டும். செய்யப்படுகின்ற எல்லா விளம்பரங்களிலும் இந்த அம்சம் இடம்பெற வேண்டும்.

பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதில் மேம்பாடுக்காண அவற்றை அபிவிருத்தி செய்திட - வாடிக்கையாளர்களிடமிருந்து, யோசனைகளை எந்தக் கம்பெனி அல்லது வர்த்தக நிலையம் வரவேற்றாலும் கூட, அத்தகைய நிறுவனங்கள் மீது வாடிக்கையாளர்கள் வைக்கின்ற மதிப்பு உயரும். கம்பெனிகள் தற்போதுள்ள வாடிக்கையாளர்கள் மட்டுமன்றி வருங்கால வாடிக்கையாளர்களையும் அரவணைத்துக் கொண்டு வளர்ச்சிக்கான கருத்துக்களைப் பெறுமானால் அதன் மூலம் வாடிக்கையாளர்களும் உங்களுடைய கோஷ்டியைச் சேர்ந்தவர்களாகி விடுவார்கள்.



பழைய வாடிக்கையாளர்கள் அல்லது வாங்குவதை நிறுத்திவிட்ட வாடிக்கையாளர்களிடம் யோசனை கேட்டால் அவர்கள் ஏன் வாங்குவதில்லை என்பதைத் தெரிந்து கொண்டு - அதன்படி வாடிக்கையாளர்கள் விரும்புவதை அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கலாம்; அவர்கள் விரும்பாததைத் தவிர்க்கலாம்.

மேம்பாட்டுக்கான யோசனைகளை யாரும் அவர்களாக முன்வந்து அனுப்பமாட்டார்கள். அவர்களிடம் 'கருத்துக்' கேட்பதை எல்லா வாடிக்கையாளர்களும் பாராட்டுவார்கள். இந்தக் கம்பனியானது மக்கள் விரும்புகின்ற பொருள்களையும் சேவைகளையும் கண்டறிந்து, அதை வழங்குவதற்கு உண்மையான முயற்சிகளை மேற்கொள்கிறது என்று, அந்தக் கம்பனிமீது வாடிக்கையளர்கள் மேலும் மதிப்பு வைப்பார்கள். அதே போல மக்களுக்கு வெறுப்பை ஊட்டுகின்ற அம்சங்களையும் கண்டறிந்து, அவற்றை நீக்க முயற்சி எடுக்கும் கம்பனியை வாடிக்கையாளர்கள் கூடுதலாக மதிப்பார்கள்.

செய்தித் தாள்கள், மாத வார இதழ்கள், வர்த்தக பத்திரிகைகள் இவற்றில் எதுவானாலும் அவற்றில் "மேம்படுத்தும் யோசனைகள்" என்ற தலைப்பில் ஒருபகுதியை ஒதுக்க வேண்டும். இதில் வாசகர் தெரிவிக்கும் யோசனைகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டும். ஆசிரியருக்கு கடிதங்கள் வாசகர் குரல் போன்ற பகுதிகளோடு இதைச் சேர்க்கக் கூடாது. ஏன் என்றால் இந்தப் பகுதி களில் வாசகர் தெரிவிக்கும் யோசனைகளுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. எனவே யோசனைகள் தெரிவிக்க தனிப்பகுதி ஆரம்பிக்கப் பட்டால் அதை வாசகர்கள் வரவேற்பார்கள்.

இதோ மேம்பாட்டுக்கான சில யோசனைகள் என்ற பெயரில் தொடர்ந்து சில நிகழ்ச்சிகளை வானொலியும் தொலைக்காட்சியும் வழங்கலாம். வானொலி தொலைக்காட்சி நேயர்களிடமிருந்து யோசனைகளைப் பெற்று அவர்கள் பெயரால் அதை வெளியிடலாம். யோசனைகளை அனுப்புமாறு நேயர்களை ஊக்கப்படுத்தலாம். எந்த ஒரு பொருளாகட்டும் அதை மேம்படுத்த யாருக்காவது ஒரு யோசனை தோன்றக் கூடும். யோசனைகளை உருவாக்கும் வகையில் சிந்திப்பது என்பது எளிதில் தொற்றிக் கொள்ளும். ஆக தொலைக்காட்சியும் வானொலியும் யோசனைகள் தோன்றுவதற்கான வகையில் ஆர்வத்தைக் கிளறிவிடலாம். வீட்டுக்கான குறிப்புக்கள், நகர் அபிவிருத்திக்கான யோசனைகள் இவற்றை வானொலி தொலைக்காட்சி நிலையங்கள் தொடர்ந்து வழங்கினால் மக்கள் அதில் அக்கறை கொள்வார்கள். அவற்றை வரவேற்பார்கள்.

மேம்பாட்டுக்கான யோசனைகளை உருவாக்கும் உத்திகள் குறித்து மாணவர்களுக்குத் தொடக்கப்பள்ளி முதல் கல்லூரி வரை பாடமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இதற்கென்று வாரத்துக்கு குறிப்பிட்ட வகுப்பு நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட வகுப்புக்களில் பதிய திட்டங்களைக் குறிப்பிட்டு பாடம் நடத்த வேண்டும். எடுத்துக் காட்டாக "பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுடைய வேலை வாய்ப்பைப் பெருக்கிட நீங்கள் என்ன யோசனை கூறுகிறீர்கள்?" என்பது போன்ற அம்சங்களை மாணவர்கள் முன்பு வைக்கலாம். இது முதுகலை வகுப்பினருக்குப் பயனுள்ள கருத்தாக இருக்கும். கடினமின்றி சுலபமாக, சுவையாகக் கற்பது எப்படி என்று யோசனைகள் கேட்டால் அது எல்லாத் தரப்பு மாணவர்களுடைய சிந்தனையைக் கிளறிவிடுவதாக அமையும்.

யோசனைகளை உருவாக்கும் உத்திகளை சொல்லிக் கொடுக்கும் வகுப்புகளுக்குப் பிறகு, யோசனை வகுப்புக்கள் சுயேட்சையாக நடக்க வேண்டும். எதுவானாலும் அவற்றை மேம்படுத்தும் யோசனைகள் பற்றி வகுப்பில் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம் நடக்க வேண்டும். பிறகு மாணவர்களிடையே சவால்களை எழுப்பும் போட்டிகள் வைக்க வேண்டும். வேறு வேறு வகையான இந்த நூறு அம்சங்களை மேம்படுத்துவதற்கு நடைமுறைச் சாத்தியமான யோசனைகளை முதலில் எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கு யார் முன் வருகிறீர்கள்? என்று போட்டி வைக்க வேண்டும். இதில் நூறு என்பது அதிகமல்ல. எதையும் எல்லாவற்றையும் ஆக்கபூர்வமான சிந்தனை மூலம் மேம்படுத்த முடியும்.

" கல்வியின் மொத்தக் குறிக்கோளும் என்ன என்றால் அது எப்படி இருக்க வேண்டும் என்றால் சிந்தனை ஆற்றலைப் பெருக்குவது தான். மனம் என்பது இயங்குவதாக இருக்க வேண் டும்" என்று ஹெர்வுட் ஆண் டர்சன் என்பவர் கூறினார். மேம்பாட்டுக்கான யோசனைகளை, திட்டங்களை வழங்கும் வழங்கும் வகையில் சிந்தனைகளை கிளறுவது, மனத்தை செயல்பட வைக்கும் சிறந்த வழியாகும். மனத்தை இயக்க வைக்க இதை விட வேறு சிறந்த வழி எது?

இவ்வாறான பயிற்சி அளிப்பதற்கு வீடே சிறந்த இடம். சிந்தனைகளைக் கிளறிவிடும் பயிற்சி என்பது- சிறுவர்களுக்கு மட்டுமே உரியது அல்ல. சிந்திக்க வைப்பதற்கான பயிற்சி இளம் பிராயத்திலேயே தொடங்கப்பட வேண்டும் என்றாலும் நெகிழ்வுமிக்கதாக -புதிய எண்ணங்களுக்கு இடம் அளிப்பதாக மனத்தை வைத்துக் கொள்ள வயதானவர்களுக்கும் சிந்தனைப் பயிற்சி மிகவும் முக்கியமாகும்.

பெரும்பாலான மக்களும், அமைப்புக்களும்,வர்த்தக தொழில் நிறுவனங்களும் "வழி வழி வந்த முடக்கு வாதம்" என்கிற வியாதியால் பீடிக்கப்படுகிறார்கள் என்று மனோ தத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். வழிவழி வந்த சிந்தனைகள் நடவடிக்கைகள் இவற்றிலேயே அவர்கள் முடங்கிப் போய் விடுகிறார்கள். வழி வழி வந்த பாதையைத் தவிர புதிய பாதையில் செல்வதற்கு மனத்தளவில் - உணர்ச்சி அளவில் - உடல் அளவில் சக்தியற்றவர்களாகி விடுகிறார்கள்.

(வளரும்)


**சுடர் ஒளி வாசகர்களே!**

குடத்துள் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களைக் குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.


சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி,
இல.361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



# சிறுவர் உலகம்




இரத்தினக் கல்லின் வெளிச்சத்தில் இளவரசர்கள் இருவரும் தப்புவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா? என்று அறை எங்கும் ஆராயத் தொடங்கினார்கள். அப்போது 'டமார்' என்ற ஓசையோடு அறையின் கீழ்ப் பக்கத்தில் வெடிப்பு ஒன்று ஏற்பட்டது. அந்தச் சத்தம் மாளிகையில் எல்லாத் திசைகளிலும் எதிரொலித்தது. அந்தச் சத்தத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே நாலாபுறத்திலிருந்தும் மந்திரக் கிழவியின் ஏவலாளிகள் அந்த அறையை நோக்கி விரையத் தொடங்கினர். கண்களில் கொலை வெறியோடு தன் கையில் உள்ள மந்திரக் கோலைச் சுழற்றியபடி மந்திரக் கிழவி அந்தரத்தில் மிதந்தவாறு மூவரும் ஒளிந்திருந்த அறையை அண்மித்தாள்.

மூவருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. "இளவரசர்களே! நமது முயற்சிகள் எல்லாம் இப்போது பயனற்றுப் போய்விட்டன. மந்திரக் கிழவியிடம் சிறைப்பட்டு அவளுக்காக நாம் பலியிடப்படப் போகிறோம்" என்று அழும் குரலில் மணிமொழி கூறினாள். ஆனால் இளவரசர்கள் இருவரின் முகத்திலும் பயத்துக்குப் பதிலாக மகிழ்ச்சி நிலவியதைக் கண்ட மணிமொழி குழப்பத்தில் ஆழ்ந்தாள். 'ஒருவேளை பயத்தில் இருவருக்கும் பித்துப் பிடித்துவிட்டதோ?' என்று அவள் எண்ணினாள். ஆனால் அவள் நினைத்தது தவறென்பதை அடுத்த நொடியே உணரும் சந்தர்ப்பம் அவளுக்குக் கிடைத்தது.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*

# அறிந்து கொள்வோம்

## நம் உடலைப் பற்றிய உண்மைகள்

- குழந்தை பிறக்கும்பொழுது அதன் உடலில் 300 எலும்புகள் இருக்கும். ஆனால் வளர்ந்து பெரியவனானதும் மொத்தம் 206 எலும்புகளே இருக்கும்.
- நமது உடல் எடையில் 14% எலும்புகளால் ஆனது.
- நமது உடலில் உறுதியான எலும்பு தொடை எலும்பு,
- நமது உடல் எடையில் 7% இரத்தம் ஆகும். தினந்தோறும் 450 கலன் இரத்தம் சிறுநீரகத்தால் சுத்தப்படுத்தப்படுகிறது. பெண்களுக்கு சராசரியாக 4.5 லீட்டர் இரத்தம், ஆண்களுக்கு சராசரியாக 5.6 லீட்டர் இரத்தம் இருக்கும்.
- நமது உடலில் உள்ள இரத்த சிவப்பணுக்களின் ஆயுட்காலம் 120 நாட்கள், அதுபோல் ஒவ்வொரு நொடியில் சுமார் இரண்டு மில்லியன் இரத்த சிவப்பணுக்கள் நமது உடலில் இறக்கின்றன.
- நமது உடலில் உள்ள இரத்த குழாய்களின் நீளம் சுமார் 600,000 மைல்கள்.
- நமது கண்களின் எடை சராசரியாக 28 கிராம். நமது கண்களுக்கு 500 விதமான ஒளிகளை பிரித்தெரியும் சக்தியுண்டு.
- நமது கண்களில் உள்ள கருவிழி மட்டும் தான் இரத்த நாளம் இல்லாத உயிருள்ள திசு.
- முதல் 8 வாரம் வரை குழந்தைகளின் கண்களில் கண்ணீர் வராது.
- மனித இதயம் சராசரியான ஒரு வருடத்திற்கு 35 மில்லியன் முறை துடிக்கிறது. ஒரு சராசரி வாழ்வில் இதயமானது 2.5 பில்லியன் முறை துடித்து 1 மில்லியன் பரல் இரத்தத்தை இரத்த குழாயில் செலுத்துகிறது.
- இதயத்தில் உள்ள இரத்த அழுத்தமானது, இரத்தத்தை 30 அடி வரை பீய்ச்சி அடிக்கும் சக்தி கொண்டது.
- மனித மூளையில் சுமார் 100,000,000,000 (100 பில்லியன்) நரம்பு செல்கள் உள்ளன. ஒரு மனிதன் 35 வயது அடைந்தது முதல் மூளையில் தினமும் 7000 நரம்பு செல்கள் இறக்கின்றன.
- நாம் சுவாசிக்கும் மொத்த ஒட்சிசனில் 20% மூளைக்கு செல்கிறது.
- நமது மூளை 80% நீரால் ஆனது. நமது மூளையின் செயல்திறன் பகலைவிட இரவில் அதிகமாக இருக்கும்.
- நமது உடலில் வேகமாக வளரக்கூடிய திசு முடி தான்.
- மனித தலையில் சராசரியாக 100,000 தலைமுடிகள் இருக்கும்.
- பெண்கள் கருத்தரிக்கும் பொழுது, கர்ப்பப்பையானது, அதன் சாதாரண நிலையை விட 500 முறை விரிவடைகிறது.
- மனித உடலில் உள்ள கல்லீரானது 500 விதமான வேலைகளை செய்கிறது.
- மனிதன் உயிரிழந்த பின்பு உறுப்புகள் செயல் இழக்கும் நேரம், கண்கள் 31 நிமிடங்கள் மூளை 10 நிமிடங்கள் கால்கள் 4 மணி நேரம் தசைகள் 5 நாட்கள் இதயம் சில நிமிடங்கள்

# பாம்பைக் கொன்ற கீரியின் கதை

**தே**வப்பட்டினம் என்றொரு கிராமத்தில் மாரப்பன் என்றொரு குயவனும் அவன் மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். பல வருடங்களாகியும் அவர்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை.

தங்களுக்கு குழந்தை இல்லாத ஏக்கத்தைப் போக்க ஒரு கீரிப் பிள்ளையைக் குழந்தையைப் போல் வளர்த்து வந்தனர். இப்படிச் சிலகாலம் சென்றது. ஒரு நாள் குயவனின் மனைவி சுந்தரி கருவுற்றாள். ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

நீண்ட கால ஏக்கத்திற்குப் பிறகு பிறந்த முதல் குழந்தை என்பதால் அக்குழந்தை வெகு செல்லமாக வளர்க்கப்பட்டது.

ஒருநாள் தண்ணீர்க் குடத்துடன் புறப்பட்ட சுந்தரி, கணவனிடம் குழந்தை தூங்குகிறது. அருகிலேயே இருந்து பார்த்துக் கொள்ளுங்கள், கீரி கடித்துவிடப் போகிறது, என்று கூறிவிட்டுக் குளக் கரைக்குச் சென்றாள்.

குழந்தையின் அருகிலேயே அமர்ந்து கொண்டிருந்த குயவனுக்கு திடீர் எனத் தாகம் உண்டாயிற்று. அவன் தண்ணீர் அருந்த சமையலறைக்குள் சென்றான்.

அந்த நேரம் பார்த்து ஒரு கருநாகம் எங்கிருந்தோ வந்து குழந்தையின் தொட்டிலின்மேல் ஏற ஆரம்பித்தது. கீரி அதைப் பார்த்து விட்டது. அடுத்த வினாடி கீரி அப்பாம்பைத் துண்டு துண்டாகக் கடித்துக் குதறிவிட்டது.

அத்துடன் தன் எஜமானியின் வரவு நோக்கி தெரு வாசலருகில் நின்றும் கொண்டது.

தண்ணீர்க் குடத்துடன் வந்த சுந்தரி கீரியின் வாயெல்லாம் இரத்தமாக இருந்ததைப் பார்த்து பதறிப்போனாள்.

அவள் கீரிப்பிள்ளை தன் குழந்தையைக் கடித்துவிட்டது. அதனால் தான் அதன் வாயில் இரத்தம் சொட்ட நிற்கிறது என்று தவறாகப் புரிந்து கொண்டாள்.

நிலைமையைத் தீர ஆராயாமல் அய்யோ! நம் குழந்தையை கீரிப்பிள்ளை கடித்து விட்டதே என்று ஆத்திரம் கொண்டு அடங்காக் கோபத்தோடு அக்கீரியின் மேல் நீர்க்குடத்தை தூக்கிப் போட்டாள்.



கீரிப்பிள்ளை அதே இடத்தில் வலி தாங்காமல் செத்தது. சுந்தரி தன் குழந்தைக்கு என்ன ஆயிற்றோ என்ற பதற்றத்தில் உள்ளே ஓடினாள். குழந்தை தொட்டிலில் அப்படியே உறங்கிக் கொண்டுதான் இருந்தது.

பிறகு என்ன நடந்திருக்கும் என்று சுற்றும் முற்றும் பார்த்த அவளுக்கு ஒரே அதிர்ச்சி. தரையில் பாம்பின் உடல் பல துண்டுகளாக சிதறி இருந்தன. அவளுக்கு உண்மை புரிய ஆரம்பித்தது.


அடடா பாம்பைக் கொன்ற இரத்தத்துடன் இருந்த கீரிப்பிள்ளையைப் பார்த்துக் குழந்தையைத்தான் கடித்து விட்டதோ என்று தவறாக எண்ணி விட்டேனே. அருமையாக வளர்த்த கீரியைக் அவசரப்பட்டுக் கொன்று விட்டேனே! என்று கண்ணீர் விட்டுக் கதறத் துவங்கினாள்.

கணநேரத்தில் நடந்து முடிந்து விட்ட இந்த நிகழ்ச்சிகளை உள்வாங்கிக்கொண்ட குயவன் தனது மனைவியை சமாதானப்படுத்தினான்.

**"எந்தப் பிரச்சினையையும் தீர ஆராயாமல் அவசர புத்தியால் முடிவெடுத்தால் அது தவறாகிவிடும்"**

# முள்ளும் மலரும் படத்தில் நான் !!

**பாலு மகேந்திரா**



பூனே திரைப்பட கல்லூரியின் ஒளிப்பதிவு துறையில் என் மூன்று வருட படிப்பை 1969இல் முடித்துக் கொள்கிறேன். எவரிடமும் உதவி ஒளிப்பதிவாளராக வேலை பார்க்காமலே 1971-ல் ஒளிப்பதிவாளராக பணியாற்றத் துவங்குகிறேன். பணியாற்றிய முதல் படம் நெல்லு. இது மலையாளப்படம், இதன் இயக்குனர் ராமு கரியத். முதல் படத்திலேயே கேரள அரசின் சிறந்த ஒளிப்பதிவாளருக்கான விருது எனக்குக் கிடைக்கிறது. 71 -முதல் 75 வரை ஐந்து வருடங்கள் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றுகிறேன்.

பெரும்பாலனவை மலையாளப் படங்கள். இந்த ஐந்து வருடங்ளுக்குள் மூன்று தடவைகள் கேரள அரசின் சிறந்த ஒளிப்பதிவாளருக்கான விருது எனக்கு தரப்படுகிறது. சிறந்த ஒளிப்பதிவாளருக்கான ஆந்திர அரசின் விருதும் இரண்டு தடவைகள் என்னை வந்தடைகிறது. ஐந்து வருடங்களில் 21படங்ளுக்கு ஒளிப்பதிவாளராகப் பணியாற்றிவிட்டு 1976இல் எனது இயக்கத்தில் வந்த முதல் படமான கோகிலா-வைத் தொடங்குகிறேன். கோகிலாவின் கதை, திரைக்கதை, உரையாடல், இயக்கம், ஒளிப்பதிவு மற்றும் படத் தொகுப்பு ஆகியவற்றை நானே செய்கிறேன். கோகிலா கன்னட மொழிப் படம். கமலஹாசன், ஷோபா மற்றும் ரோஜாரமணி ஆகியோர் இதில் நடித்திருந்தனர். பிற்காலத்தில் தமிழ் சினிமாவில் பிரபலமாகிய மோகன் என்ற கன்னட இளைஞரை இதில் ஒரு முக்கிய கதாபாத்திரமாக அறிமுகப் படுத்துகிறேன். அப்பொழுது மோகன் பெங்களூர் வங்கி ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

இந்தப் படத்தின் இசை இந்தியாவின் மிகச் சிறந்த இசையமைப்பாளர்களுள் ஒருவரான சலீல் சௌத்ரி. கோகிலா படத்தின் மூலம் சிறந்த திரைக்கதையாளருக்கான கர்னாடக அரசின் விருதும், சிறந்த ஒளிப்பதிவாளருக்கான தேசிய விருதும் எனக்குக் கிடைக்கிறது. கோகிலா கன்னட மொழியிலேயே சென்னையில் 150-நாட்கள் ஓடிச் சாதனை படைக்கிறது. கோகிலாவை அடுத்து நான் ஒரு தமிழ்ப் படம் செய்ய விரும்பினேன். என் இயக்கத்தில் வரும் முதல் தமிழ்ப் படத்தில் எனது பால்யத்தை பதிவு பண்ணுவதென்று முடிவு பண்ணுகிறேன். என் நெஞ்சில் பசுமையாக இருந்த ஞாபகங்கள் என்பதால் எனது முதல் தமிழ் படத்துக்கு அழியாத கோலங்கள் என்று பெயர் வைத்து படத்திற்கான ஆரம்ப வேலைகளிலும் இறங்குகிறேன். இந்த சமயத்தில்தான் மகேந்திரன் என்ற இளைஞர் என்னை அணுகி அவர் இயக்க இருக்கும் அவரது முதல் படத்திற்கு நான் ஒளிப்பதிவு செய்ய வேண்டும் என்று என்னைக் கேட்கிறார். இந்தப் படத்தை நான் ஒத்துகொள்ளவேண்டும் என்று என்னைக் கேட்கிறார். இந்தப் படத்தை நான் ஒத்துகொள்ளவேண்டும் என்று எனது நண்பர் கமலும் விரும்பினார். கல்கியில் வெளிவந்த உமா சந்திரனின் முள்ளும் மலரும் என்ற நாவலைத் தான் மகேந்திரன் படமாக்க விரும்புவதாகவும் சொல்கிறார்.

அந்த நாவலை கல்கியில் வெளியானபோதே நான் படித்திருந்தேன். அண்ணன் தங்கை உறவை உணர்வு பூர்வமாகச் சொன்ன நல்ல நாவல். இந்தக் கதையில் வரும் அண்ணனாக நண்பர் ரஜினிகாந்தும், அவரது தங்கையாக எனது ஷோபாவும் நடிப்பதென்று முடிவாகிறது.

கோகிலாவைத் தொடர்ந்து நான் எடுக்க இருந்த எனது முதல் தமிழ் படத்திலும் ஷோபா இருக்கவேண்டும்என்று நான்விரும்பினேன். ஆனால் அந்தப் படம் பதின்மவயதுகளின் முற்பகுதியில் இருக்கும் மூன்று விடலைப் பையன்களைப் பற்றிய படம். அந்த மூன்று விடலைகளும் தான் படத்தின் முக்கிய கதாபாத்திரங்கள். ஷோபாவுக்கு அழியாத கோலங்கள் படத்தில் பாடசாலை ஆசிரியராக ஒரு சிறிய ரோல்தான் வைத் திருந்தேன். ஆனால் முள்ளும் மலரும் படத்தில் அவளுக்கு முக்கியமான பாத்திரம்தான். அதுவும் ரஜினிகாந்த் என்ற பெரிய நடிகருடன். எனது ஒளிப்பதிவில் ரஜினி தங்கையாக அவள் தமிழில் அறிமுகமாவதே நல்லது என்றுபடுகிறது.

எனவே எனது அழியாத கோலங்கள் படத்தை தள்ளிப் போடுகிறேன். மகேந்திரன் இயக்கத்திலான முள்ளும் மலரும் படத்தில் முழுமையாக ஈடுபடுகிறேன். மகேந்திரனுக்கு இது முதல் படம். வசன கர்த்தாவான அவர் அதற்குமுன் உதவி இயக்குனராகப் பணியாற்றியோ அல்லது ஒரு திரைப்படப் பள்ளியில் பயின்றோ திரைப்பட இயக்கத்தைக் கற்றவரல்ல. எனவே அவரது முதல் படத்தின் ஒளிப்பதிவாளர் என்ற வகையில் எனது பொறுப்பு, மிக அதிகமானது. ஒரு படத்தின் ஒளிப்பதிவாளர் என்ற எல்லைக்குள் இருந்துகொண்டே முள்ளும் மலரும் படத்தின் திரைக்கதை அமைப்பிலும் உரையாடலிலும் திரைப்பட இயக்கத்திற்கு உட்பட்ட லென்சிங், ஷொட் டிவிஷன்ஸ், கெமராக் கோணங்கள் தேர்வுசெய்வது, நடிகர்களைக் கதாபத்திரங்களாக மாற்றுவது போன்ற அனைத்து பணிகளிலும் நான் என்னை முழுவதுமாக ஈடுபடுத்திகொள்கிறேன். படப்பிடிப்பின் பின் படத் தொகுப்பிலும் நான் கூடவே இருக்கிறேன்.

இந்தப் படத்தில் எனது பங்கேற்புகள் அனைத்துமே மகேந்திரனின் விருப்பத்தின்படி நடந்தவைதான். மகேன் ஒரு நல்ல எழுத்தாளர். ஒரு நல்ல ரசிகர். அவருக்கும் எனக்குமான உறவு அமோகமாக இருந்தது. நாங்கள் இருவரும் ஒரே அலை வரிசையில் இயங்கியதை நீங்கள் முள்ளும் மலரும் படத்தில் உணர்ந் திருப்பீர்கள்.

முள்ளும் மலரும் படம் 1978 ஒகஸ்ட்15ஆம் திகதி வெளியாகிறது. முதல் இரண்டு வாரங்கள் சுமார் என்ற நிலையில்தான் அதன் வசூல் இருந்தது. மூன்றாவது வாரத்தில் இருந்து வரலாறு காணாத வெற்றி. எனது முதல் தமிழ்ப் படமான அழியாத கோலங்கள் 79-ல் தான் வெளியானது. முள்ளும் மலரும் படத்தில் ஷோபாவுக்கும் சரத்பாபுவுக்குமான காதல் உண்ர்வுகளை மகேந்திரன் ஒரு பாடல் மூலம் காண்பிக்கலாம் என்று முடிவு பண்ணியிருந்தார். செந்தாழம் பூவில் என்ற அந்தப் பாடலை இளையராஜா அற்புதமாக அமைத்து கொடுத்திருந்தார். பாடியது யேசுதாஸ். இன்று வரை இளையராஜாவின் மிகச் சிறந்த பாடல்கள் வரிசையில் அந்தப் பாடல் இடம் பெற்று வரு கிறது...



இந்தப் பாடலை சரத்பாபு பாடுவதாக எடுப்பது என்றுதான் முடிவு பண்ணப் பட்டிருந்தது. இரண்டொரு வரிகளை மட்டும் சரத்பாபு பாடுவதாக வைத்துவிட்டு மிகுதிப் பாடலை நான் எனது கோகிலா படத்தில் தொடங்கியிருந்த மொண்டாஜ் உத்தியில் எடுத்தால் பொருத்தமாக இருக்கும் என்று எனக்கு பட்டது. இதை மகேந்திரனிடம் சொன்னேன் அவரும் ஒத்துக் கொண்டார். ஆனால் நடிகர் சரத்பாபுவுக்குதான் தன்னுடைய வாய் அசைவில் மொத்தப் பாடலும் இல்லையே என்பதில் வருத்தம் இருந்ததாக ஞாபகம்.

1976இல் எனது முதல் படமான கோகிலாவில் நான் ஆரம்பித்த இந்த லவ் மொண்டாஜ் என்ற உத்தியை இன்றைய இளம் இயக்குனர்கள் பலர் அழகாக உபயோகப் படுத்துகிறார்கள் என்பதில் எனக்குப் பரம சந்தோஷம். கதையின் நகர்வு, கதாபாத்திரங்ளின் தோற்றம் அவர்களின் உரையாடல்கள் மற்றும் செயல் பாடுகள், படத்தின் ஒளிப்பதிவு, அரங்க அமைப்பு போன்ற அத்தனை விஷயங்களிலும் யதார்த்தம், இயல்புத்தன்மை என்று பார்த்து பார்த்துச் செய்துவிட்டு பாடல் காட்சிகளில் இந்த யதார்த்தத்தை, இந்த இயல்புதன்மையை நாம் ஆரம்பம் முதல் கோட்டை விட்டே வந்திருக்கிறோம். தாலாட்டையும், ஒப்பாரியையும், மேடைப் பாடலையும் இன்னும் இரண்டொரு பாடல் சந்தர்ப்பங்களையும் தவிர பெரும்பாலான பாடல் காட்சிகள் இயல்புத் தன்மைக்கு புறம்பானவை, அபத்த மானவை என்பது நமக்குத் தெரியும்.

முள்ளும் மலரும் படம் மகேந்திரனை மிக நுட்பமான இயக்குனர் என்று அடையாளம் காட்டியது. சினிமா இயக்கம் என்ற ராஜ பாட்டையில் மகேந்திரன் எடுத்துவைத்த முதல் அடியின்போது அவருடன் நான் இருந்தேன் என்பதில் எனக்கு சந்தோஷம் உண்டு. எனது ஷோபா, படாபட் ஜெயலட்சுமி, தயாரிப்பாளர் வேணு செட்டியார், கலை இயக்குநர் ராமசாமி ..என முள்ளும் மலரும் படத்தில் பணியாற்றிய பலர் இன்று இல்லை. நாள்களை எண்ணியபடி நானும் மகேந்திரனும், இளையராஜாவும் இன்னும் சிலரும். ஆனால் ஒன்று.. எங்களுக்குப் பின்னும் தமிழ் சினிமாவில் முள்ளும் மலரும் தொடரும். உன்னதமான படைப்புகளுக்கு அந்த சக்தி உண்டு. எனது படைப்புகள் மூலம் நானும், மகேந்திரனின் படைப்புகள் மூலம் மகேந்திரனும் இளையராஜாவின் இசை மூலம் இளையராஜாவும் எங்கள் மரணத்தின் பின்பும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டுதான் இருப்போம். மரணிக்கப் போவது எங்கள் உடல்கள். நாங்களல்ல!

# தமிழ் மொழியின் சிறப்பை அறிய ஒரு நூல்

கலாநிதி க. வைத்தீசுவரக் குருக்கள்

தமிழ் மாணவன் திரு.பா.துவாரகன் அவர்கள் தமது ஆசிரியராகிய பண்டிதர் க.நாகலிங்கம் அவர்களிடம் வினாவிய வினாக்களும் அவற்றிற்கு அன்னார் எழுதிக் கொடுத்த விடைகளும் அடங்கிய அருமையான நூல் "தமிழோடு அவாவுதல்" என்னும் பெயருடன் வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர்கள் பண்டிதர் க.நாகலிங்கம் மற்றும் பா.துவாரகன் ஆகியோர் ஆவர்.




பண்டிதர் க.நாகலிங்கம் அவர்கள், அளவெட்டியைச் சேர்ந்தவர்; பேரறிஞராக விளங்கிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயங்காரின் மாணவனாகிய மாவிட்டபுரம் புலவர் மணி ந.சு. நவநீதகிருஷ்ண பாரதியார், குருகவி ம.வே.மகாலிங்கசிவம், வித்துவான் க.கார்த்திகேசு ஏ.ஜீ., என்பவரிடம் சங்க இலக்கியங் களையும், பிற்கால இலக்கியங்களையும், தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களையும் பழைய வரலாற்று முறையிற் பாடங் கேட்டவர்; புலோலியைச் சேர்ந்த வ.குமாரசுவாமிப் புலவரின் மகனாகிய டாக்டர் சிவப்பிரகாசத்திடம் உளநூல் கற்றவர்;, இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் ஓராண்டு பயின்றவர்; செந்தமிழ் இலக்கணவிளக்கம் பாகம் 1, 2, 3, 4 என்னும் மூன்று நூல்களையும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதியவர்; வித்துவக் காய்ச்சல் ஒரு சிறிதும் இல்லாதவர்; உத்தம விவேகி; தம்பெருமை தாமறியாத் தன்மையர்.

பா.துவாரகன், தமிழ் இலக்கிய இலக்கணங் களையும் சமய நூல்களையும் கற்றுவருபவர்; ஆங்கிலமும் கற்றவர்; தமிழறி ஞர்களோடு நெருங்கிப் பழகுபவர்; அவர்களை நன்கு மதிப்பவர்.

**"நூல்பயிலியல்பே நுவலின் வழக்கறிதல்**
**பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்**
**ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்**
**அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்**
**வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை**
**கடனாக் கொளினே மடநனி யிகக்கும்"**

என்னும் நன்னூற் சூத்திரத்துக்கு அமைவாக நடப்பவர். பா.துவாரகனின் வினாக்கள் பலதரப் பட்டவை. அவ்வினாக்களுக்குப் பண்டிதர் எழுதிக் கொடுத்த விடைகள் மிகத்தெளிவாகவும் தர்க்கரீதியாகவும் அமைந்துள்ளன. பண்டிதர், அவ்விடைகளில் சொற்பிறப் பியல் அகராதி (சுவாமி ஞானப்பிரகாசர்) அபிதான கோசம் (முத்துத்தம்பிப்பிள்ளை) தொல்காப்பியம் நன்னூல் நிகண்டுகள் சிலப்பதிகாரம் திருக்குறள் முதலான நூல்கள் தொடர்பாகவும் நாவலர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை குமாரசுவாமிப்புலவர் முதலானோர் சம்பந்தமாகவும் தமிழில் வழங்கும் வடமொழிச் சொற்கள் பற்றியும் 1.) பரிச்சயம் - பரிசயம் , 2.)ஐந்நூறு- ஐஞ்நூறு 3.) தெய்விகம் - தெய்வீகம், 4.) திருகோணமலை - திருக்கோணமலை .5.) திருப்தி -திருத்தி என்பன போன்ற சொற்கள் சம்மந்தமாகவும் இன்னும் இவை போன்ற விசயங்கள் பற்றியும் எழுதியுள்ளார். வினாவிடை ஒழுங்கில் அமைந்த நூல்களைப் படித்தால் விரைவில் விசயங்களை அறிந்து கொள்ளலாம் என்பது அறிஞர்களின் அபிப்பிராயமாகும்.

நாவலரால் எழுதப்பட்ட முதலாம் சைவ வினாவிடை இரண்டாம் சைவ் வினாவிடை என்னும் நூல்களும் சித்தாந்த வித்தகர் ச.அருணவடிவேல் முதலியாரால் எழுதப்பட்ட சைவ சித்தாந்த வினாவிடை என்னும் நூலும் வித்துவான் ச.வெள்ளை வாரணனாரால் அவர்களால் எழுதப்பட்ட இலக்கண வினாவிடை (5 நூல்கள்) என்னும் நூல்கள் இப்பொழுது ஞாபகத்துக்கு வருகின்றன. அந்த நூல்களைப் போலவே "தமிழோடு அவாவுதல்" என்னும் நூலும் வினாவிடை ஒழுங்கில் அமைந்துள்ளது. இந்த நூல் தமிழ் உலகில் உலாவிக் கொண்டிருப்போருக்கும் தமிழ் மொழியின் சிறப்பை அறிய விரும்புவோருக்கும் தமிழ்மொழியை ஒரு பாடமாகக் கற்போருக்கும் பெருவிருந்தாகும் என்பது ஒரு சிறிதும் மிகையாக மாட்டாது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 601



அனுப்புவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

**மேலிருந்து கீழ்**

1.கூடாது.
2.மணப்பெண்ணுக்கு பெற்றோரால் வழங்கப்படுவது.
3.மணம்.
4.தடுக்கும் நடவடிக்கை.
5. ஈரலிப்பான இடத்தில் வளரும்.
8.வலு.
10.அனுபவித்து மகிழ்.
11.ஒரு வாத்தியக் கருவி.
13.நீர் நிறைத்து வைக்கும் பாத்திரம்.
14.வழக்காளிக்கு எதிராளி.
15.இரண்டு பத்து.
16.புத்திரன்.
17.தடம்.
18.படிப்பு.
20. விழி.
21. இது ஓய்வதில்லை.

**இடமிருந்து வலம்**

1. ஆசி வழங்குதல்.
6.நீர் கொண்ட கருமையான மேகம்.
7.கூந்தல்.
8.இது வரப் பத்தும் பறக்கும்.
9.ஒரு பருப்பு வகை.
11. சேர்.
12. முனிவர்.
13.நுளம்பின் வாழ்வு நிலைகளில் ஒரு பருவம்.
15.சங்கீதத்துடன் தொடர்புடையது.
16.பெண்களிடம் இருக்க வேண்டிய பண்புகளுள் ஒன்று.
17.நலம்.
18.வேகம்.
19.திருவள்ளுவர் கூறும் இருவரில் ஒருவர்.
21.ஓர் இனிப்புப் பண்டம்.
22.ஒன்றின் பகுதி.
23.தலையில் எழுதப்பட்டது.

### சொற்சிலம்பம் போட்டி இல. 601

**சொற்சிலம்பம் போட்டி 600ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் மற்றும் ஜனவரி 22ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.**

**முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 599க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.விவாதம், 2.வரம், 3.சாம்பிராணி, 4.மார், 5.தக்கது, 6.விகுதி, 8.ஈர், 10.மாசி, 13.மரித்தல், 14.அண்டல், 15.அடி, 16.கொல்லாமை, 17. திகதி, 18.நம், 20.கலை,

**இடமிருந்து வலம்**

1.விவசாயி, 4.மாதவி, 7.வாரம், 8.ஈர்க்கு, 9.தம்பிமார், 11.கதி, 12. ராசி, 13.மது, 14.அணி, 15.அரி, 17.திண், 18.நடித்தல், 19.கடகம், 21.தில்லை, 22.கல்லாமை,

### போட்டி இல. 598இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| **1ஆம் பரிசு** | தே.யோ. தவராஜா, தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு, யாழ்ப்பாணம். |
| **2ஆம் பரிசு** | திருமதி. ரதீபா இளஞ்செழியன், (B), அரச விடுதி, 3ஆம் கட்டை, உப்புவெளி, திருகோணமலை. |
| **3ஆம் பரிசு** | ச. பாலசூரியன், இல;1815, குடியிருப்பு, வவுனியா. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) எஸ். செல்வநாயகம்,
குமரன் வீதி, களுவாஞ்சிக்குடி.

(2) திருமதி.ரீ. செல்வத்துரை,
இல;15/14, கல்லூரி ஒழுங்கை,
திருகோணமலை.

(3) ம.நிதர்ஷன்,
விநாயகர் வீதி, அல்வாய் தெற்கு,அல்வாய்.

(4) எஸ். செல்வநாதன்,
இல; 14/2, பீரிஸ்பிளேஸ், தெஹிவளை.

(5) மு.ஹரிதாசன்,
முதலாம் வட்டாரம், முள்ளியவளை.

(6) கே. இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி
கோயிலடி, வட்டுக்கோட்டை.

(7) அ.ஷண்முகப்பிரியா,
தரம்-08, யா/வேம்படிமகளிர்உயர்தரபாடசாலை,
யாழ்ப்பாணம்.

(8) க. குணபாலன்,
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

(9) செல்வன்.ம.யதுர்ஷன் ,
இல: 11/46, தக்கியா வீதி, திருகோணமலை.

(10) திருமதி. எஸ். சிவசுந்தரம்,
இல: 198, கோவிலடி, மஸ்கெலியா.

மே. மைதிலி
வட்டுக்கோட்டை

# தலைவிதி

ஆம். கல்லூரி வாழ்க்கையை அவளே இனி விரும்பிக் கேட்டாலும் அது மீண்டும் வந்துவிடாது. அப்போது அவள் பலரின் கனவுக் கன்னி. பேச்சுப் போட்டி என்றால் பங்கயத்தோடு போட்டி போட மற்றைய கல்லூரி மாணவர்கள் அச்சப்படுவார்கள். வகுப்பிலும் அவள் தான் முதல் மாணவி. இவ்வளவு திறமைகள் உள்ள பங்கயத்திற்கு பெற்றோர் பெற்றோர் இல்லாத ஒரு குறையைத் தவிர அவளுக்குவேறொன்றும் குறையாகத் தெரியவில்லை. அவளின்மீது அன்புசெலுத்த பாட்டி என்ற உறவு இருந்தது. பாட்டியின் அரவ ணைப்பி லேயே பங்கயம் வாழ்ந்து வந்தாள்.



சிறுகதை

நிலமகள் கறுப்பு நிற உடையை மாற்றுகிறாள். சூரிய ஒளியைக் கலைத்துப் பிடித்த வண்ணம் பனிமூட்டம் ஆரம்பமாகியது. அன்று பௌர்ணமி முழுநிலாவின் ஒளிக்கீறல்கள் தென்னை மரத்திலிருந்த ஓலைகளினூடாக நிலத்தை வந்தடைந்தது. அழகான இராக்காட்சி ஆந்தையின் அலறல் அந்த இரவின் அமைதியில் மூழ்கியிருந்த அந்த ஊரின் அமைதியைக் கலைத்துக் கொண்டிருந்தது. அந்த ஆந்தையின் பரிதாபமான அலறல்ச் சத்தம் தமிழர்கள் அன்றும் இன்றும் அடிமைப்பட்டு அல்லலுறும் சிறை வாழ்க்கையைச் சித்தரிப்பதாய் அமைந்தது என்றால் அது மிகையாகாது. இது இவ்வாறிருக்க ஒரு குடிசையின் உள்ளே குழந்தையின் அலறல்சத்தம். அதனைத் தொடர்ந்து சில மனிதக்குரல்கள் ஒலித்தன. அதிலும் ஒரு பெண்குரல் பலமாக ஒலித்தது. ஆம் . அது தான் பங்கயத்தின் குரல்.

பங்கயத்தின் தோற்றம்... மெலிந்து கறுத்துக் கருவாடாக்கிய உடல். அவளைப் பார்த்தால் யாரும் இருபது வயது என்று சொல்லமாட்டார்கள். அந்த இளம் வயதிலேயே மூப்பின் தோற்றம் அவளுக்கு அது பரம்பரை வியாதி அல்ல. பகலவனின் வெப்பத்தினை உணர்ந்து வேலை செய்வதன் ஆதாரம். அது கட்டுக்குலைந்த உடல். ஆனால் தன்னை அலங்காரப்படுத்தி தன் இளமைமை மீளப் பெற அவள் முனைவதாகத் தெரியவில்லை. கொண்டையைக் கூட ஒழுங்காக முடிய அவளுக்கு நேரமேது? தன் குழந்தைகள் மூன்றையும் ஒழுங்காகப் பராமரித்துக் கல்வி புகட்டவே அவளுக்கு நேரமில்லை. இன்றும் வழமை போலவே கடைக்குட்டிமீனா தான் அலறிக் கொண்டே இருந்தாள். அவளின் அலறல் வழமையான வேண்டுகோளைத் தாயிடம் விண்ணப்பிக்கவே! தன் தமையன்மார் இருவரையும் குற்றம் சாட்டிய வண்ணம் அலறுவாள். குழந்தைகள் தெய்வத்துக்கு ஒப்பானவை. அவர்களின் குறும்புத்தனமும் எமக்கு மகிழ்வையே வழங்கும். அதனால் பங்கயம் குழந்தை களைக் கண்டிப்பதில்லை. அவற்றின் குறும்புகளை இரசிப்பாள். மூவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுவாள். அவர்களும் நாங்கள் எப்போதும் ஒற்றுமையாகவே இருப்போம் என்பார்கள்.

ஒருவாறு பிள்ளைகளை நித்திரையாக்கி விட்டு தான் முன்பு கற்ற பாடப் புத்தகங்கள் சில கண்ணிற் படவே அவற்றை எடுத்துப் புரட்டினாள். அவற்றில் அது... அவளின் கல்லூரிக் காலத்தில் இடம்பெற்ற ஒரு பேச்சுப் போட்டியில் பங்குபற்றி அதில் முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக் கத்தை எடுத்த நிகழ்வை நினைவு கூருமுகமாக இருந்தது. அதைச் சிறிது நேரம் கண்ணி மைக்காமல் பார்த்த பங்கயத்திற்கு தனது வாழ்க்கையின் முன் அத்தியாயங் களை புரட்ட அவளது மனம் எண்ணியது. ஆம் அந்தக் கல்லூரி வாழ்க்கையை அவளே இனி விரும்பிக் கேட்டாலும் அது மீண்டும் வந்துவிடாது. அப்போது அவள் பலரின் கனவுக்கன்னி. பேச்சுப் போட்டி என்றால் பங்கயத்தோடு போட்டி போட மற்றைய கல்லூரி மாணவர்கள் அச்சப்படுவார்கள். வகுப்பி லும் அவள் தான் முதல் மாணவி. இவ்வளவு திறமை கள் உள்ள பங்கயத்திற்கு பெற்றோர் இல்லை. பெற்றோர் இல்லாத ஒரு குறையைத் தவிர அவளுக்கு வேறொன்றும் குறையாகத் தெரியவில்லை. அவளின் மீது அன்பு செலுத்த பாட்டி என்ற உறவு இருந்தது. பாட்டியின் அரவணைப்பிலேயே பங்கயம் வாழ்ந்து வந்தாள். ஆனால் அவளுக்கு ஆண்டவன் கொடுத்த அந்த இன்பத்தையும் நீண்ட நாட்கள் விட்டு வைக்கவில்லை. பாட்டியின் உயிரை ஆண்டவன் எடுத்துக் கொண்டான்.

பிறகென்ன, பங்கயத்தின் வாழ்க்கையைச் சூறாவளி வட்டமிடத்தொடங்கியது. சமூகக் கயவர்களால் அவள் பலவாறு தூற்றப்பட்டாள். பதினேழு வயது தொடங்கி இருந்தது. அன்று அவளது வாழ்க்கையே திசை திரும்பியது. ஆம். அவளுக்கு தாய் மாமன் முறையிலான ஒருவனுக்கு வாழ்க்கைத் துணையானாள். அவன் நல்லவன் தான். ஆனால்க் குடிகாரன். "குடி குடியைக் கெடுக்கும்" என்பார் கள். அது போலவே இடையிடையே இருவருக்குமிடையில் தகராறுகள் ஏற்பட்டு மறையும் . ஆனால்ப் பங்கயம் அடுத்தடுத்து மூன்று குழந்தைகளுக்குத் தாயானாள். கடைக்குட்டி மீனா பிறந்து சில நாட்களின் பின் பங்கயத்தின் கணவன் குடியால் இறந்து போனான். அவளுக்கு வாழ்க்கையில் நிம்மதி கிடைத்தது. ஆனால் அவன் இறந்ததும் அவனால் அக்குடும்பத்துக்கு வந்த இரண்டு , மூன்று ரூபா நோட்டுக்களும் நின்று விட்டன. அதன் பின் பங்கயமோ வேலை தேடி அலைந்தாள். அவளுக்கு கூலி வேலை கிடைத்தது. வேலைக்குப் போனாள். அக்குடும்பத்தின் சுமையை ஏற்றாள். இன்னும் என்ன விசேடம் என்றால் அவள் வேலை செய்யும் ஏக்கர் பரப்புக்காணி அவளோடு படித்து எல்லாப் பாடத்திலும் முட்டை மார்க் வாங்கும் சாந்திக்கு சொந்த மானது. பங்கயத்தால் சாந்தியை இனங் காண முடியும். சாந்தியால் பங்கயத்தை இணங்காண முடியுமா? பங்கயம் என்ற பெயர் தான் இன்றும் அவளுக்குச் சொந்தம். ஆனால் அன்றிருந்த பங்கயம் எங்கே? இன்று... காய்ந்து கருவாடாகிய நிலைமாறி அடையாளமே காணமுடியாத பங்கயம் தான் இன்று.

அன்று தன்னைச் சமூகம் ஆதரித்து அரவணைத்திருந்தால் தான் இன்று இருக்க வேண்டிய இடம் வேறு என எண்ணுகிறாள். ஆம். அவளின் எண்ணமும் நியாயமானது. எமது சமூகம் அவளின் திறமைகளை மதித்து ஆதரித்திருந்தால் அவள் கனவு கண்டது. போல இன்று ஒரு வைத்தியராகி இருக்கலாம். இந்த ஒரு பங்கயம் மட்டு மல்ல இன்னும் எத்தனையே பங்கயங்கள் இன்று சமூகத்தால் இந்தச் சமூகத்தில் உள்ள நிலை கெட்ட மனிதர் களால் சீரழிகிறார்கள். எல்லாம் என் "தலைவிதி" என்று முணு முணுத்த படி சமையலறைப்பக்கம் செல்கிறாள் பங்கயம்.

# நகைச்சுவை நாடகங்கள்

சந்திரமதி செல்வம் அவர்களும் இப் பாத்திரத்தை ஏற்று நடித்தமை நினைவில் நிற்கின்றது.

குணமும் அடங்காப்பிடாரியாக வந்து கலக்கியவர்களில் ஒருவர். குணம் பெண் பாத்திரமேற்றால், அந்தக் கால தமிழ் சினிமா



நடிகை பாரதியை நினைவூட்டுவதாக அவரது தோற்றம் இருக்கும்.

அத்துடன், வி.சி.குஞ்சிதபாதம், இ.கனகையா, கவிஞர் வே.ஜயாத்துரை, யாழ். கல்வித் திணைக்கள பரமசிவம், ஆகியோரும் இந் நாடகத்தில் பாகமேற்று மெரு கூட்டியவர்கள்.

வெண்சங்கு திரைப்படத்தில் இந்த நாடகத்தின் காட்சிகள் இணைக்கப்பட்டன. அத்திரைப்படத்திலும் சவர்காரம் விற்பனைசெய்யும் பெண்ணாக சி.சிவனேசனே நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இப்பகுதி எழுதி வழங்கிய பின்னர், சி.சிவனேசன் அவர்களுக்கு கலாபூஷணம் விருது 2013, கிடைத்த செய்தியும் அறியவந்துள்ளது)

நகைச்சுவை நாடகம் என்றால் ஓடி ஓடிப் பார்த்து மகிழ்ந்து சிரித்த காலம் ஒன்றுண்டு. இங்கு தரப்பட்ட பதிவுகள் முழுமையானதல்ல. நான் வசித்த பிரதேசத்திலும், நான் வசித்த காலத்திலும், மனதில் பதிவாகியவை மட்டுமே.

நல்லூர் குமார் தனபால் குழுவினரது நகைச்சுவை நாடகம், தம்பி கொழும்பிலே பேரோடும் புகழோடும் மேடையேறியமை பதிவு செய்யப்பட வேண்டும். குமார தனபாலும், அவரது அழகு மனைவியாகத் தோன்றியவரும், ஒரு ..... மூட் வரவே, ரொக் அன் ரோல் பாணியில் தம்மையறியாமலே நடனமாடத் தொடங்கி விடுவர். இவ்வேளை அவர்களது மகன் உள்ளே வந்து விடுவார். அப்போது அவர்கள் காலில் சேறு பட்டு விட்டது. அதுதான் தரையில் காலைத் தேய்த்து சுத்தமாக்குவதாகப் பாவனை செய்து அவரை ஏய்க்காட்டும் காட்சி இப் போது நினைத்தாலும் சிரிப்பு பொத்துக் கொண்டு வரும்.

இலங்கை பூராவும் பல பாகங்களிலும், மேடையேறிய நகைச்சுவை நாடகமென்றால் அப் பெருமை கோமாளிகள் நாடகத்திற்கே உரியது எனலாம். ஏனைய நாடகங்கள் வடக்கு கிழக்கு தமிழ் பிரதேசங்களில் பல நூற்றுக் கணக்கான தடவைகள் மேடையேற, கோமாளிகள் வடக்கு கிழக்கு மலையகம் மற்றும் நாட்டின் எண் பாகங்களிலும் மேடையேறியமை விசேட அம்சமாகும்.

அப்புக் குட்டி ராஜகோபால், மரைக்கார ராமதாஸ், உபாலி செல்வசேகரன் என இந் நாடகப் பாத்திரங்கள் தாங்கியவர்கள், அப் பாத்திரங்களின் பெயராலேயே அழைக்கப்படு மளவிற்கு பாத்திரங்களோடு ஒன்றித்துப் போன வர்கள். கோமாளிகள் திரைப்படமாகவும், தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்டது.

அரியாலை திடீர் நாடகமன்றத்தினரின் இன்னொரு தயாரிப்பு, சுப்பிரமணியம் புங்கா. இதில் வசனமே இல்லாதது. ஒரு சிறப்பம்சம். ஆனாலும் அதன் ஊமம், சிரிப்புக்குப் பஞ்சமில்லாமல், குழந்தைகள் முதல் கிழவர்வரை பார்த்து இரசிக்கத் தூண்டிய ஒப்பற்ற நாடகம்.

கொப்பியடிப்பதில் வல்லவரான பரமசிவம், தமது ஆசிரியர் பயிற்சிக் காலத்தில் இதனை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் (1977), தாம் பணியாற்றிய அரசசார்பற்ற நிறுவனம் சார்பாக, காலி லைற் கவுஸ் ஹோட்டலிலும் (2004) சிங்கள, ஜேர்மன், ஆங்கில மொழி நண்பர்களும் பார்த்து பாராட்டும் வகையில் மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது.

தற்காலத்தில் அதனை உள் வாங்கி செம்மைப் படுத்தி, தொலைக் காட்சி நாடகமாகத் தயாரிப் பின் குழந்தைகளும், கிழவர்களும் குதூகலத்திற்குச் சொல்லவும் வேண்டுமோ? இன, மத, மொழி வேறுபாடின்றி இரசிக்க இது போன்ற படைப்புக்கள் உதவும்.

நகைச்சுவை என்பது மற்றவர்களை அருவருப்பு ஊட்டுவதாக அமையக் கூடாது. என்று ஸரவ் மாரட்டீன் கூறுகிறார்.

சிரித்திரன் சுந்தர் தமது நகைச்சுவை சிரித்திரனை குடும்பத்தினர் அனைவரும் வாசிக்கத்தக்கதாக கவனம் செலுத்தினார். மறுவிதமாகச் சொல்வதாயின் அருவருப்பு ஊட்டத் தக்கவற்றைத் தமது சஞ்சிகையில் தவிர்த்தார் என்று கொள்ளலாம்.

சிறுபிள்ளைகளும் நகைச்சுவை விடயங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்களாக இருப்பர். அதில் ஈடுபாடுகொள்வதன் மூலம் அவர்களது புத்தி விரிவடையும். மிக்கி மௌஸ் போன்றன இதற்காகவே தயாரிக்கப்படுகின்றன. ஓரளவு புத்திசாலிப் பிள்ளைகள் அதனைப் பார்த்து இரசிப்பதன் மூலம் அவர்களது புத்திசாலித்தனமும் மேம்படும். எதுவும் அளவோடு இருந்தாற்றான். அதற்காக 24 மணி நேரமும் மிக்கிமௌஸையே பார்த்து இரசித்தபடி இருக்க முடியுமா?

ஒரு நாளைக்கு ஒரு தடவையேனும் நடனமாடாமல் விட்டால் அந்த நாள் நாள் அல்ல: அதேவேளை, ஒரு தரமேனும் நாம் சிரிக்காவிட்டால், நாம் காணும் உண்மைகள் அனைத்தும் பொய்யே, என்கின்றார் பிறிட்றிச் நிற்சு




Friedrich Nietzsche என்பவர்.

நான் முட்டாள் தனத்தை விரும்புகின்றேன். ஏனெனில் அது மூளைக் கலங்களை சுறுசுறுப் படையச் செய்கின்றது. முகப்பாத்தி என்பது வாழ்க்கையில் ஒரு முக்கிய சேர்மானம் ஆகும். வாழ்க்கையை ஒரு தொலை நோக்கியுடாக மறுவளமாகப் பார்ப்பதுபோலாகும். அது வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு என்னைச் சிரிக்க வைக்கின்றது என்கின்றார், டொக்டர் சீயஸ் என்பவர்.

இதை வாசித்து அர்த்தத்தைப் புரிந்து கொள்வதிலுள்ள சிக்கலை நான் புரிந்து கொள்கின்றேன். இதனூடாக என்ன சொல்ல வருகின்றார் என்பதனை அவருடைய மொழியிலேயே வாசித்துக் கொள்ளுங்கள்.



I like nonsense; it wakes up the brain cells. Fantasy is a necessary ingredient in living, it's a way of looking at life through the wrong end of a telescope. Which is what I do, and that enables you to laugh at life's realities.

Dr. Seuss.

இதிலுள்ள சோகம் என்னவென்றால், சில ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ப் பதங்களைக் கண்டு பிடிப்பதே. அதற்காக தமிழில் அதற்குச் சமனான சொற்கள் இல்லை என்பதல்ல. தேடலுக்கான தடைகளும், பஞ்சியும், அலுப்பும் அதற்கு மேலாக பல சொற்களினது பயன்பாட்டினை நாம் கை விட்டதனால், அவை எம்மைக் கை விட்டுச்சென்றுவிட்டதும் ஆகும்.

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, ஒரு சமயம் சிரங்கு தொல்லையால் வேதனையுற்றார்.

பல மருந்துகள் போட்டும் சிரங்கு ஆறாமல் இருந்தன. அந்த வேதனையைத் தாங்க முடியாமல் அவதிப்படும் சமயத்தில், சில நகைச்சுவைப் பாடல்களைப் பாடினார். அப்படி அவர் பாடிய நகைச்சுவைப் பாடல்களில் ஒன்று:

**முத்துப் பவழம் முழுவயிரம் மாணிக்கம்**
**பத்தியொளி வீச பதக்கமெல்லாம் - சித்தன்**
**சிரங்கப்ப ராயன் சிறியேன் எனக்குத்**
**தரங்கண்டு தந்த தனம்**

என்று சிரங்கின் வேதனையை மறக்கப் பாடி மகிழ்ந்தார் என்றே சொல்ல வேண்டும். இதே போன்று சிக்கின் குனியா நோய் தாக்கத்திற்குள்ளாகித் தான் தவித்தபோது, பேராசிரியர் சிவலிங்கராசா அதுபற்றிய ஒரு நகைச்சுவைப் பாடல் பாடி, சிரிக்கவைத்தார். அப்பாடலைத் தேடித் இப்பகுதியில் பதிய வேண்டும்.

அதே போன்று முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீத வித்துவான் பொன்னாலை கணபதிப்பிள்ளை அவர்களது தந்தையார் பாடிய கூப்பன் மா பற்றிய பாடலை கணபதிப்பிள்ளை சேர் பாடி கலகலப்பு ஊட்டுவார்.

எமது பழைய நாடகங்களில் அண்ணாவிமார் தாங்களே நகைச்சுவைப் பாடல்களை இயற்றிப் பாடுவித்து, நகைச்சுவை உணர்வை வளர்த்து வந்தனர். நாடகங்கள் அற்றுப் போக அவையும் அற்றுப் போகின்றன. புதியனவும் உருவாக வழி வகைகளைக் காணோம்.

Cow & Gate

# பொதுமக்களுக்கான அறிவித்தல்

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் அனைத்துத் தொகுதி Cow & Gate தயாரிப்புகளும் DCD எனப்படும் இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதனை, இலங்கை கைத்தொழில் தொழினுட்ப நிறுவனத்தினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து இத்தால் சகல பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.


எமது பண்டகசாலையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு Cow & Gate பக்கட்டுகளும், (கீழே குறிப்பிட்டுள்ளது போல) DCD இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் முகமாக, சுகாதார அமைச்சினால் கட்டாயமாக்கப்பட்டுள்ள ஸ்டிக்கர் ஒன்றினைத் தாங்கி வரும்.

இது 2013 செப்டெம்பர் 4ம் திகதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட PA//EOH//FCAU//42//2013 இலக்க திருத்தியமைக்கப்பட்ட பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படுகின்றது.

டி.சி.டி. எனும் இரசாயனப் பொருள்
அடங்கவில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
Batch No:

இது பற்றிய மேலதிக விளக்கங்களுக்கு அழையுங்கள் 0773-290183 அல்லது 0773-290160

Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.




| | |
|---|---|
| அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், கனடா, ஐக்கிய அமெரிக்கா, இத்தாலி | நிமிடத்திற்கு ரூ. 2 |
| பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, நியூசிலாந்து | நிமிடத்திற்கு ரூ. 3 |
| மலேஷியா, சிங்கப்பூர், ஜப்பான் | நிமிடத்திற்கு ரூ. 5 |

நத்தார் காலத்தில் வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவுகளுடன் விருப்பம் போல கதையுங்கள்.
ஆகக்குறைந்த IDD கட்டணங்கள் எங்களிடமிருந்து!

IDD



# சூப்பர் இரட்டையர்

இலவசமாய்
5 வருட உத்தரவாதம் + ரூ.20,000 வரை விலைத்தள்ளுபடி

Hero



Splendor PRO
Trusted by millions

**ஸ்ப்லெண்டர் ப்ரோ**
- 100cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- எலோய் வீல்

கிக் ஸ்டார்ட் மாதிரி
ரூ.196,990/-
விசேட விலை
ரூ.189,000
ரூ.7,990 விலை தள்ளுபடி

செல்ஃப் ஸ்டார்ட் மாதிரி
ரூ.207,500/-
விசேட விலை
ரூ.192,990
ரூ.14,510 விலை தள்ளுபடி



Splendor NXG

**ஸ்ப்லெண்டர் NXG**
- 100cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- கறுப்பு நிற எலோய் வீல்
- செல்ஃப் ஸ்டார்ட்

ரூ.209,990/-
விசேட விலை
ரூ.194,000
ரூ.15,990 விலை தள்ளுபடி



SIMPLY SUPER
Super Splendor

**சுப்பர் ஸ்ப்லெண்டர்**
- 125cc 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- கறுப்பு நிற எலோய் வீல்
- செல்ஃப் ஸ்டார்ட்

ரூ.227,990/-
விசேட விலை
ரூ.207,990
ரூ.20,000 விலை தள்ளுபடி



GLAMOUR
SIMPLY MAGNETIC

**க்ளெமர்**
- 125cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- டிஜிடல்-அனலோக் மீட்டர்கள்
- கறுப்பு நிற என்ஜின் மற்றும் எலோய் வீல்
- செல்ஃப் ஸ்டார்ட்

டிஸ்க் ப்ரேக் மாதிரி
ரூ.249,990/-
விசேட விலை
ரூ.229,990
ரூ.20,000 விலை தள்ளுபடி



Xtreme

**எக்ஸ்ட்ரீம்**
- 150cc 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- டியூப்லெஸ் டயருடன், எலோய் வீல்
- டிஜிடல் மற்றும் அனலோக் மீட்டர்கள்
- செல்ஃப் ஸ்டார்ட்

டபுள் டிஸ்க்
ரூ.297,990/-
விசேட விலை
ரூ.287,990
ரூ.10,000 விலை தள்ளுபடி

சிங்கள் டிஸ்க்
ரூ.288,000/-
விசேட விலை
ரூ.278,000
ரூ.10,000 விலை தள்ளுபடி

5 YEAR WARRANTY

*Warranty for a period of 5 years or 70,000 kms from the date of purchase, whichever is earlier.

**R.G.ட்ரேடர்ஸ் உந்துருளிகளுக்கான அபான்ஸின் அங்கீகாரம் பெற்ற முகவர்**

அழையுங்கள்:
011 5777000

யாழ்ப்பாணம் - இல: 285, 287 ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2226185 • யாழ்ப்பாணம் - பலதர் காட்சியறை இல: 291, ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2227667, நெல்லியடி - இல: 84, பருத்தித்துறை வீதி, நெல்லியடி: 021 2262585 • சாவகச்சேரி - இல: 5A, கண்டி வீதி, சாவகச்சேரி: 021 2270185 • நாவட்குளி - இல:50, கண்டி வீதி, நாவட்குளி சந்தி, நாவட்குளி • சுன்னாகம் - 12, 14, KKS வீதி, சுன்னாகம்: 021 2241986 • கிளிநொச்சி - காடிபோக்கு சந்தி, A9 வீதி, கிளிநொச்சி: 021 2280165 • பளை - இல: A9 வீதி, பளை: 0777 340056

Abans

இப் பத்திரிகை கொழும்பு -17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2013 டிசம்பர் 25 ஆம் திகதி வெளியிடப்பட்டது.